DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneservices.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

உதயம் 1373 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 29, 2022

# கனடாவின் ரொறன்ரோ — பியர்சன், விமானப் பயணம் சார்ந்த சவால்கள் பலவற்றை எதிர்கொள்ளும் இடமாக மாறியுள்ளதா?


கொரோனா வைரஸ் தொற்றுநோயின் தாக்கமும் அதன் பாதிப்பும் கடந்த இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் சற்று தணிந்த நிலையில பயணங்களை விரும்பும் அல்லது பயணத் தேவைகள் உள்ள மக்கள் மீண்டும் ஆர்வத்துடன் பயணிக்கத் தொடங்கியுள்ளனர்.

இதன் காரணமாக உலகெங்கிலும் உள்ள ஆயிரக்கணக்கான விமான நிலையங்கள் மற்றும் விமான நிறுவனங்கள் தொடர்ந்து பல சவால்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் தடுமாறுவதை எமக்கு கிடைக்கு செய்திகள் நன்கு தெளிவூட்டி வருகின்றன - ஆனால் சில விமான நிலையங்களை மற்ற விமான நிலையங்களை விட மிகவும் மோசமான நிலையில் உள்ளனவா என்ற கேள்வியும் அவற்றில் ஒன்று கனடாவின் ரொறன்ரோ பியர்சன் மற்றும் மொன்றியால் விமான நிலையம் ஆகியனவும் அடங்கியுள்ளன என்ற தகவல்களை கனடாவின் தேசிய ஊடகங்கள் பட்டியலிட்டுள்ளன என்று அறியப்படுகின்றது

*(உள்ளே விபரமான செய்தி 4ம் பக்கத்தில்)*

# Ontario Student Nutrition Program offers nutritious food through breakfast, lunch, and snack programs to needy students

# ஒன்றாரியோ மாகாணத்தில் காலை உணவு தேவையான மாணவர்களுக்கு சத்தணவுத் திட்டம் அறிமுகமாகின்றது



ஒன்றாரியோ மாகாணத்தில் காலை உணவு தேவையான பாடசாலை மாணவர்களுக்கு சத்தணவுத் திட்டம் அறிமுகமாகின்றது. இதற்காக ஏற்பாடுகளை ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சு செய்து வருவதாக மாகாணத்தின் கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெற்சே அவர்கள் நேற்று செவ்வாய்கிழமையன்று பல்லின பத்திரிகையாளர்களோடு நடத்திய ஊடகச் சந்திப்பில் தெரிவித்தார்.

இணையவழியாக நடைபெற்ற இந்த சந்திப்பில் அமைச்சருடன் அவரது இரண்டு பாராளுமன்றச் செயலாளர்களும் கலந்து கொண்டு தங்கள் பணிகள் பற்றி ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளித்தனர்.

*(உள்ளே விபரமான செய்தி 6ம் பக்கத்தில்)*

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
ACCOUNTING
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
416 2888882
RE/MAX BLUE FORCE
கவாஸ். சோம சச்சிதானந்தன்

# STEELES PODIATRY CLINIC

**கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்**

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE



5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
**416.298.FOOT (3668)**


## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS


### Help Wanted

**Indoor shopping mall looking for full time maintenance employees.**
**More than 40 hrs weekly.**

**Call: 647-218-3698**

### Be Your Own Boss

Markham / McNicoll

Units for sale at
Majestic City Mall.
Very busy Tamil mall.
Corner 2 units together for sale.
Possible for men/ladies salon or any other business.

call FILONA:
(647) 606-1009

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice
RAJAN: 416-464-2415



### லக்ஷ்மி திருமண சேவை

உள்நாட்டு வெளிநாட்டு வரன்கள், அரசாங்க உத்தியோகம் தனியார் தொழில், செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் மற்றும் விவாகரத்து ஆனவர்கள் அனைவருக்கும் தகுந்த சாஸ்திர சம்பிரதாய முறைப்படி உலகளாவிய இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை.

**சுலபமாய் ஒரு சுயம்வரம்**
**647-961-6886**

"தனி நபர் தகவல்கள், படங்கள், மற்றும் குறிப்புகள் என்பன 100% பாதுகாக்கப்படும்"

### மொன்றியாலில் உணவகத்தில் வேலை வாய்ப்பு

மொன்றியாலில் உள்ள கனடிய உணவகத்தில் வேலை வாய்ப்பக்கள் உண்டு. தகுந்த சம்பளம் வழங்கப்பெறும். காலை நேர உணவு தயாரித்தல் மற்றும் ஏனைய உணவக பணிகள் செய்ய வேண்டும். தங்குமிட வசதியும் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு:
1-450-774-3541

### Basement for Rent

**Markham & Denison**

**1 bedroom basement available immediately.**
**Parking, laundry, cable, internet included.**
**Close to all facilities.**

**Call: 416-317-8449**
**416-451-6680**





# மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில்

# ஆடிப்பூர ருதுசாந்திப் பெருவிழா

--------------------

**80, Nashdene Rd, Unit #99. Scarborough, Ontario**
**(416) 436-9647**



31-07-2022 ஞாயிற்றுக்கிழமை அன்று ஆடிப்பூர ருதுசாந்தி சிறப்பு பூஜை 8:00 மணி தொடக்கம் நடைபெறும்.

05-08.2022 வெள்ளிக்கிழமை காலை சுமங்கலி பூஜை. விளக்குப் பூஜை நடைபெறும்.

அத்துடன் ஆடிச்செவ்வாய் மாலை 5:30 மணி சிறப்பு பூஜை நடைபெறும்.
அனைத்து சக்திகளும் அன்னையின் அருளைப்பெற்றுய்யுமாறும்.
அத்துடன் தேசிக்காய், வேப்பிலை, பூக்கள் அன்புடன் அன்னைக்கு சமர்ப்பிக்கலாம்.

உதயன் கதிரோட்டம்

# கோவிட் – 19 தொற்று மீண்டும் எம்மவர் உயிர்களைக் காவுகொள்ளாமல் இருக்க அவதானம் தேவை

உலக நாடுகள் பலவற்றின் அரசுகள் மீண்டும் கோவிட் -19 நோயின் தாக்கம் தங்கள் நாடுகளில் தீவிரமடையாமல் காப்பதற்கு மீளவும் முயற்சிகளை எடுத்து வருவதை நாம் அவதானிக்கக் கூடிய-தாக உள்ளுத. நாம் வாழும் கனடாவிலும் எமது அண்மை நாடான அமெரிக்காவிலும் இலட்சக் கணக்கான மக்களைக் காவு கொண்ட கோவிட்- 19 நோய்க்கிருமிகளை கட்டுப் படுத்த இரண்டு அரசாங்கங்களும் மீண்டும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளன என்பதை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளுத.

சீனாவில் தோற்றம் பெற்று குறுகிய காலப்பகுதிக்குள் முழு உலகிற்கும் பெரும் சவாலாக விளங்கிய கொவிட் 19 தொற்றின் அச்சுறுத்தல், தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு வந்ததும் வீழ்ச்சியடையத் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் ஏற்பட்டது.

இதன் விளைவாக கொவிட் 19 தொற்று தவிர்ப்புக்கான வழி-முறைகள் குறித்து மக்கள் கவனயீனமாகவும் அசிரத்தையோடும் நடந்து கொள்ளத் தொடங்கினர். அதாவது சமூக இடைவெளியைப் பேணுதல், முகக்கவசம் அணிதல் போன்ற விடயங்கள் வரையும் இந்த அசிரத்தை வளர்ச்சி பெற்றது.

ஆனால் இத்தடுப்பூசி கொவிட் 19 தொற்றின் தாக்கத்தைப் பலவீனப்படுத்தக் கூடியதே அன்றி இத்தொற்றுக்கு உள்ளாவதைத் தவிர்க்கக் கூடியதல்ல. அது தான் மருத்துவ நிபுணர்களின் கருத்து.

அந்த அடிப்படையில்தான் சனத்தொகையில் பெரும் பகுதியினருக்கு இத்தடுப்பூசியைப் பெற்றுக் கொடுத்துள்ள இஸ்ரேல் போன்ற சில நாடுகளில் இத்தொற்று அவ்வப்போது தீவிர நிலையை அடையக் காரணமாக அமைந்துள்ளது. அத்தோடு இத்தொற்று தோற்றம் பெற்ற சீனாவிலும் இத்தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசியை அதிகளவிலானோர் பெற்றுக் கொண்டுள்ள போதிலும், அந்நாட்டிலும் இத்தொற்று அவ்வப்போது தலைதூக்கக் கூடிய-தாக உள்ளது. அங்கு சில பிரதேசங்கள் அவ்வப்போது முடக்கம் செய்யப்படும் நிலைமையும் ஏற்படுகின்றது.

கொவிட் 19 தொற்று தடுப்பூசிக்குப் பின்னர் இவ்வாறான அனுபவங்களைப் பெற்றுள்ள நாடுகள் இத்தொற்று தவிர்ப்புக்காக முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியை பேணுதல் போன்ற வி-திமுறைகளை மக்கள் தொடர்ந்தும் கடைபிடிக்கக் கூடிய விதிமுறைகளை நடைமுறைப்படுத்துகின்றன.

அந்த வகையில் உலகின் ஏனைய நாடுகளைப் போன்று இலங்கையிலும் இந்தியா போன்ற நாடுகளில், கொவிட் 19 தொற்று தடுப்பூசியை அதிகளவிலானோர் பெற்றுக் கொண்டுள்ளதன் பயனாக இத்தொற்றின் தாக்கம் வீழ்ச்சியடைந்து காணப்படுகிறது. இதன் விளைவாக முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியை-ப் பேணுதல் போன்ற செயற்பாடுகளில் இருந்து மக்கள் விலகிச் செல்லத் தொடங்கியுள்ளனர்.

இவ்வாறான நிலையில் உலகின் சில நாடுகளில் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாகப் பதிவாகின்றவர்களின் எண்ணிக்கையில் கடந்த சில தினங்களாக அதிகரிப்பு ஏற்பட்டு வருகின்றது. அதுவும் பெருவீழ்ச்சி நிலையை அடைந்திருந்த பின்னணியில்தான் மீண்டும் அதிகரிக்கக் கூடிய நிலையை இத்தொற்று அடைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் இந்நிலை தொடர இடமளிக்கலாகாது. இத்தொற்றின் பரவுதலை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்திக் கொள்வதில் ஒவ்வொருவரும் கவனம் செலுத்த வேண்டும். இது ஒரு தொற்று நோயாக இருப்பதால் இது அவரவர் பொறுப்பாகும். தவறும் பட்சத்தில் கடந்த காலங்களைப் போன்று கனடா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளிலும் இத்தொற்று மீண்டும் தீவிரமடையவே வழிவகுக்கும்.

இந்த நிலையில் கொவிட் 19 தொற்று கட்டுப்பாடு குறித்து இந்த நாடுகளின் சுகாதாரத் தரப்பினர் கூடுதல் கவனம் செலுத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர்.
இது காலத்திற்கு அவசியமான வேண்டுகோளும் வலியுறுத்தலும் ஆகும். இத்தொற்று பரவுதலைத் தவிர்ப்பதற்கான செயற்பாடுகளை கடைப்பிடிப்பது இன்றியமையாததாகும். இதைவிடுத்து இத்தொற்று பரவுதல் தொடர்பில் அசிரத்தையோடும் கவனயீனமாகவும் நடந்து கொள்வது, இத்தொற்று மீண்டும் தீவிரமடையவே வழிவகுக்கும். அவ்வாறான ஒரு நிலை ஏற்பட எவரும் துணை போகலாகாது.

Canada
We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# "எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பணம் பெற்று நான் வேலை செய்வதில்லை. இதனை சக தமிழ்த் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களே செய்வதை ஏற்கமுடியாது".

### மனந்திறந்து பேசுகின்றார் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன்

"நான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பணம் பெற்று வேலை செய்வதில்லை. இதேவேளையில் இதனை சக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களே செய்வதையும் என்னால் ஏற்கமுடியாது".
இவ்வாறு யாழ்ப்பாணத்தில் மனந்திறந்து பேசியுள்ளார் யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் அவர்களின் புதல்வரான சித்தார்த்தன் புளட் உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.
அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதி தெரிவிற்கான வாக்கெடுப்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வேட்பாளர்களிடமிருந்து கோடிக்கணக்கான ரூபாய்கள் பணம் பெற்றார்கதள் என எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களுக்கு விளக்கமளித்தபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்
ஆறு,ஏழு கோடி ரூபா பெறுமதியான பணத்தை நான் பெற்றதாக சமூக வலைத்தளங்கள் ஊடாக தகவல்கள் பரப்படுகிறது. ஆனால் பணத்துக்கு நானோ எனது குடும்பமோ ஆசைப்பட்டதில்லை. கட்சி எடுத்த முடிவுக்கு மாறாகவும் வாக்களிக்கவில்லை என புளொட்டின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.
சமகால நிலைமைகள் தொடர்பாக கந்தரோடையிலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் இதனை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,
தேசிய கல்வியில் கல்லூரியின் காணி தற்போதைய மதிப்பு 60 கோடி வரை வரும். அதனை நன்கொடையாக வழங்கிய எனக்கு பணம் பெரிதல்ல. பணத்துக்காக செயற்படுவதில் எனக்கோ எனது குடும்பத்துக்கோ உடன்பாடில்லை. கடந்த காலத்திலும் கூட்டமைப்பு தலைமைக்கு கோடிக்கான பணம் வழங்கப்பட்டதாக செய்திகள் பரப்பப்பட்டது. இவ்வாறான கதைகள் வர காரணம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை மலினப்படுத்துவதே ஆகும். இதனை சக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களே செய்வதை ஏற்கமுடியாது.

எந்த சந்தர்ப்பத்திலும் எப்போதும் நான் யாரிடமும் பணம் பெற்றது கிடையாது. இவ்வாறான கதைகளை கூறுவதன் மூலம் எங்களை விட கூடுத-லான விருப்பு வாக்கை பெற்றுக் கொள்ள முடியும் என்பது தவறு ,தமிழ் தேசிய கூட்டமைப்புக்கே வாக்குகள் இல்லாது போகும்.

இன்று மிகப்பலம் பொருந்திய கட்சியாக காணப்படுகின்ற இந்த கட்சியை உடைப்பதன் மூலம் நிச்சயமாக தமிழ் மக்களுடைய அபிலாசைகள் அனைத்தையும் உடைப்பதற்கே காரணமாக அமையும். இது சிங்கள தேசியத்திற்கும் பேரினவாதிகளுக்கும் உதவி செய்வதாகவே நான் பார்க்கிறேன்.

இன்னொரு விடயம் நிச்சயமாக என்னை பொறுத்தவரை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எப்பொழுதும் எவரிடமோ பணம் பெற்று நான் வேலை செய்வதில்லை. நான் மாறாக ஒரு நன்மை செய்யப்போகிறேன் என்று பணம் வாங்கியதுமில்லை.

நான் என்னை பற்றி சொல்ல வேண்டிய தேவையில்லை.மக்களுக்கு என்னை பற்றி நன்றாக தெரியும் எங்களுடைய கடந்த காலங்களை பார்க்கின்ற பொழுது யாழ்ப்பாணத்தில் அனைவருக்கும் தெரியும். நாங்கள் எப்படி செயல்பட்டு இருக்கின்றோம் என்று ஆகவே நான் சொல்ல தேவையில்லை. ஆனால் இவ்வாறான வதந்திகள் வருகின்ற பொழுது நான் சொல்ல வேண்டிய கடமை இருக்கின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனஅழுத்தங்கள், தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்பந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்
All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

Canadian News கனடிய செய்திகள்

# கனடாவின் முக்கிய விமான நிலையமான ரொறன்ரோ – பியர்சன், விமானப் பயணம் சார்ந்த சவால்கள் பலவற்றை எதிர்கொள்ளும் இடமாக மாறியுள்ளதா?




கொரோனா வைரஸ் தொற்றுநோயின் தாக்கமும் அதன் பாதிப்பும் கடந்த இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் சற்று தணிந்த நிலையில பயணங்களை விரும்பும் அல்லது பயணத் தேவைகள் உள்ள மக்கள் மீண்டும் ஆர்வத்துடன் பயணிக்கத் தொடங்கியுள்ளனர்.

இதன் காரணமாக உலகெங்கிலும் உள்ள ஆயிரக்கணக்கான விமான நிலையங்கள் மற்றும் விமான நிறுவனங்கள் தொடர்ந்து பல சவால்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் தடுமாறுவதை எமக்கு கிடைக்கு செய்திகள் நன்கு தெளிவூட்டி வருகின்றன - ஆனால் சில விமான நிலையங்களை மற்ற விமான நிலையங்களை விட மிகவும் மோசமான நிலையில் உள்ளனவா என்ற கேள்வியும் அவற்றில் ஒன்று கனடாவின் ரொறன்ரோ பியர்சன் மற்றும் மொன்றியால் விமான நிலையம் ஆகியனவும் அடங்கியுள்ளன என்ற தகவல்களை கனடாவின் தேசிய ஊடகங்கள் பட்டியலிட்டுள்ளன என்று அறியப்படுகின்றது.

இந்த வகையில் கடந்த ஜுலை தொடக்கத்தில் தொடர்ச்சியாக நான்கு நாட்கள், ரொறன்ரொ பியர்சன் சர்வதேச விமான நிலையம் - கனடாவில் மிகவும் பரபரப்பாக இயங்கத் தொடங்கியது என்றும் உலகெங்கிலும் உள்ள 155 நகரங்களுக்கு இங்கிருந்த விமானங்கள் பறக்கத் தொடங்க. உலகளவில் எந்த விமான நிலையத்திலும் இல்லாத தாமதங்களை ரொறன்ரொ விமான நிலைய நிர்வாகமும் அதன் தலைமை அதிகாரிகளும் எதிர்கொள்ள வேண்யிருந்ததாக அறியப்படுகின்றது.

இந்நிலையில். கனடாவின் மிகப்பெரிய விமான நிறுவனமான ஏயர் கனடா விமானங்களின் மூலம் ரொறன்ரோவிலிருந்து புறப்படும் விமானங்களும் தாமதமாக அல்லது ரத்து செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருந்து வருகின்றன என உலக விமான கண்காணிப்பு இணையதளம் தெரிவித்துள்ளது.

இதற்கு நல்ல உதாரணமாக ஒரு சம்பவத்தை தேசிய ஊடகங்கள் பதிவு செய்துள்ளன. தற்போது வட அமெரிக்க சுற்றுப்பயணத்தில் இருக்கும் கனடாவின் நாட்டுப்புற இசைப் பாடகர் பிரட் கிஸ்ஸல், கடந்த ஜுன் மாத இறுதியில் இத்தாலியில் நடந்த நிகழ்ச்சிக்குப் பிறகு தனது இசைக்குழு உறுப்பினர்களுடன் ரொறன்ரோ விமான நிலையத்திற்கு வந்திருந்தாராம்.

அவர்களது அடுத்த பெரிய இசை நிகழ்ச்சி பல நாட்கள் கழித்து கல்கரி நகரில் நடக்க இருந்தது. அவர்களுக்கு நிறைய நேரம் இருந்த நிலையில் அவர்கள். ரொறன்ரோ விமான நிலையத்தை வந்தடைந்தனராம்.

"அங்கு மூவாயிரம், ஐயாயிரம் பேர் இருந்திருக்காங்க. "ஆமாம், அது பைத்தியக்காரத்தனமாகத் தெரிகிறது. ஆனால் அந்த அளவு கூட்டம் எப்படி இருக்கும் என்று எனக்குத் தெரியும், நான் மேடையில் இருந்து அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன்".

ஏறக்குறைய மோசமாக, விமான நிறுவனங்கள் தங்கள் சாமான்களை இழந்தன, இசைக்குழுவிற்கு சொந்தமான கிட்டார் உட்பட. இசைக் கருவிகள் பல அவர்கள் பயணித்த விமானம் ஊடாக கனடாவிற்கு எடுத்து வரப்படவில்லையாம் அனால் அவர்கள் பயணம் செய்த விமான நிலையத்தின் பயணப் பொதிகள் உரிமை கோராமல் உள்ள பகுதியில் 1,500 முதல் 2,000 பயணப் பொதிகள். மலை மேடுகள் போன்று குவிந்து கிடந்ததாகவும் அவற்றில் தங்கள் இசைக் கருவிகள் அகப்பட்டுக்கொண்டதாகவும்" நாட்டுப்புற இசைப் பாடகர் பிரட் கிஸ்ஸல் செய்தியாளர்களிடம் கூறினாராம்.



நீண்ட வரிசைகள் மற்றும் தொலைந்து போன இசைக்கருவிகள் என பலவற்றால் ஏற்பட்ட விரக்தியில், அவர் நஸ்டங்களை அனுபவித்ததாகவும் மற்றும் அவரது இசைக்குழு உறுப்பினர்களும் உளத் தாக்கத்திற்கு உட்பட்டதாகவும் அறியப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைப்பொன்றே, கனடிய விளையாட்டு நிகழ்ச்சிகள் தொடர்பான அறிவிப்பாளரும் முன்னாள் தகுதிவாய்ந்த ஐஸ் ஹாக்கி வீரருமான ரியான் விட்னி, ஜுலை 6ம் திகதி அன்று தனது ரொறன்ரோத்திற்காக மேற்கொண்ட பயண அனுபவத்தைப் பற்றி ட்விட்டரில் பதிவிட்டார், அவரது ரத்து செய்யப்பட்ட விமானத்திற்குப் பிறகு பாஸ்டனுக்குச் செல்வதற்காகத் துடித்துக் கொண்டிருந்தார், அச்சமயத்தில் ரொறன்ரோ விமான நிலையமான தனக்கு "பூமியின் மிக மோசமான இடம்" போன்று தோன்றியதாகவும் அதனை உலகெங்கும் உள்ள தனது நண்பர்களுக்கு அனுப்பியதாகவும் அவரும் தனது முகநூல் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது குரலை தனது பதிவில் காட்டியபோது மிகவும் பதட்டமாகவும் கோபமாகவும், இருந்ததாகவும் அவரது அந்த முகநூல் பதிவுகள் சுமார் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான முறை பார்க்கப்பட்டதாகவும் ஊடகவியலாளர்கள் பதிவு செய்துள்ளனர்.

அவர் அப்போது கூறினாராம் வீடியோவில்: "நான் இந்த நாட்டை விட்டு வெளியேற வேண்டும், இந்த விமான நிலையத்திலிருந்து உடனடியாக வெளியேற வேண்டும்." என்று உரத்துச் சத்தமிட்டதாகவும் அறியப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் கடந்த மே மாதத்தில், கனடாவின் பெரிய விமான நிலையங்களில் பணியாளர்களை அதிகரிப்பது எனவும், விமான நிலையங்களில் பயணக் காத்திருப்பு நேரத்தைக் குறைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் கனடாவின் விமான சேவைகள் அதிகார சபை உடனடியாக ஊடகங்கள் மூலம் அறிவித்திருந்தாலும். அந்த அறிவிப்பு யாதார்த்தமாக நிகழ நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் செய்தியாளர் ஒருவர் கனடா பல்லின ஊடகங்களுக்கு அறிவித்துள்ளார்.

இந்த யூஜல மாதத்தில் கனடாவின் ரொறன்ரோ பியர்சன் விமான நிலையத்தை இயக்கும் பொறுப்பில் உள்ள கிரேட்டர் டொராண்டோ விமான நிலையங்கள் ஆணையம், "பயணிகள் மற்றும் பங்குதாரர்கள்" எவ்வாறு தாமதங்களைக் குறைக்க ஒன்றிணைந்து செயல்படலாம் என்பதற்கான கல்வி பிரச்சாரத்தை ஆரம்பித்து நடத்தியபோதும், மேலும் "பல்வேறு புதிய சிக்கலான" சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது என்றும் தற்போது அந்த விமான நிலையங்களின் ஆணையம் அறிவித்துள்ளது.



மேலும் இந்த தொடர் பிரச்சனைகளான நீண்ட விமான தாமதங்கள், நீண்ட வரிசைகள், இரத்து செய்யப்பட்ட விமானங்கள் சேவைகள் மற்றும் தொலைந்து போகும் பயணப் பொதிகள் (லக்கேஜ்) ஆகியவை கனடா ரொறன்ரோ பியர்சன் விமான நிலையத்தில் தீர்க்கப்படக் கூடிய ஒன்றாகத் தெரியவில்லை என பிரயாணிகள் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான பிரச்சனைகள் கனடாவில் மாத்திரமல்ல உலகின் பல பெரிய நகரங்களிலும் இடம்டபெறுவதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார். தினமும் சுமார் 100,000 க்கும் மேற்பட்ட பயணிகள் லண்டனின் ஹீத்ரோ விமான நிலையத்தை விட்டு விமானங்களில் பயணிக்கின்றார்கள் என்றும், இங்கிலாந்தின் மிகப்பெரிய விமான நிலையம் மற்றும் சர்வதேச விமான நிலையம் என்ற நிலையிலும் அங்கும், இவ்வாறான பிரச்சனைகள் தினமும் தொடர்வதாகவும் அங்கிருந்து பயணிக்கும் வெளிநாட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

கனடா அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளில். விமான சேவையை இரத்து செய்வது என்பது மிகவும் பொதுவானதாகிவிட்டது என்றும் மேலும் பயணப் பொதிகள் (லக்கேஜ்கள்) காணாமல் போகின்றன என்ற முறைப்பாடுகளும் அதிகரிப்பதாகவும் செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

இந்த கோடையில் கனடாவின் பியர்சன் விமான நிலையத்தின் மதிப்பீடு சரிந்தது, நியூ ஜெர்சியின் நெவார்க்கில் உள்ள லிபர்ட்டி சர்வதேச விமான நிலையம், நியூயார்க்கில் உள்ள லாகார்டியா விமான நிலையம் மற்றும் அமெரிக்கா மற்றும் கனடாவில் உள்ள பல விமான நிலையங்களுக்கான மதிப்பீடுகளைப் போலவே தொடர்வதாகவும் இந்த நிலை நீடித்தால் உலகப் பொருளாதாரமும் பாதிக்கப்படும் என்றும் அறியப்படுகின்றது.

இந்த பிரச்சனைகள் தொடர்பாக மிகவும் விரக்தியுடன் பதிலளித்த கனடாவின் எயர் கனடா விமான சேவை நிறுவனத்தின் தலைவர் மைக்கல் அவர்கள் தேசிய ஊடகங்களுக்கு அண்மையில் தெரிவித்த கருத்துப் பகிர்வின் போது, "உலகளவில் எங்கள் விமான சேவை தொழில்துறையில் விஷயங்கள் வழக்கம் போல் இல்லை, இது எங்கள் செயல்பாடுகளையும் பாதிக்கிறது" என்று கூறினார்.

## Sri Lanka's Lion Brewery Participates in Toronto's Festival of Beer-2002 on July 23rd, 2022

# இலங்கையின் Lion Brewery பியர் தயாரிப்பு நிறுவனம் ரொறன்ரொ பியர் திருவிழா – 2022 இல் பங்குபற்றியது




கடந்த 23-07-2022 சனிக்கிழமையன்று கனடாவின் ரொறன்ரொ மாநகரில் 100 Prince Edward Island Crescent, Toronto என்னும் விலாசத்தில் அமைந்துள்ள BANDSHELL PARK மைதானத்தில் காலை முதல் மாலை வரை நடைபெற்ற ரொறன்ரோ பியர் திருவிழா - 2022 இல் இலங்கையின் Lion Brewery பியர் தயாரிப்பு நிறுவனம் ரொறன்ரொ பியர் திருவிழா - 2022 இல் பங்குபற்றியது.




ஆயிரக்கணக்கான பியர் பிரியர்கள் Lion Brewery பியர் தயாரிப்பு நிறுவனத்தின் விற்பனைச் சாவடிக்கு வருகை தந்து இலங்கைத் தயாரிப்புக்களை விருப்பத்துடன் வாங்கி சுவைத்து மகிழ்ந்தனர்.

இங்கே காணப்படும் படங்களில் Lion Brewery பியர் தயாரிப்பு நிறுவனத்தின் விற்பனைச் சாவடியில் மக்கள் வரிசையில் சென்று பியர் மற்றும் ஸ்டவுட் பானங்களை வாங்கி அருந்துவதையும் இலங்கையிலிருந்து வருகை தந்திருந்த Lion Brewery பியர் தயாரிப்பு நிறுவனத்தின் வர்த்தக அபிவிருத்தி முகாமையாளர் - Business Development Manager - Mr. Charuka Senanayake மற்றும் கனடியப் பிரதிநிதி Fred Levon ஆகியோர் மகிழ்ச்சியுடன் நிற்பதையும் காணலாம்.

# மன்னாரில் வெலிக்கடைச் சிறைப் படுகொலை: 39 ஆவது ஆண்டு நினைவு அனுஷ்டிப்பு!

இலங்கை செய்திகள்
Sri Lanka News



வெலிக்கடைச் சிறைப் படுகொலையின் 39 ஆவது ஆண்டு நினைவு தினமான "தமிழ் தேசிய வீரர்கள் தினம்" மன்னார் மாவட்ட தமிழீழ விடுதலை இயக்கத்தின் (TELO) அலுவலகத்தில் புதன்கிழமை (27) காலை 11 மணியளவில் நினைவு கூரப்பட்டது.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் மாவட்ட அமைப்பாளர் லுஸ்ரின் மோகன் ராஜ் தலைமையில் இடம்பெற்ற குறித்த நினைவேந்தல் நிகழ்வில் வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்ட தலைவர் தங்கதுரை, தளபதி குட்டிமணி, முன்னணிப் போராளிகளான ஜெகன், தேவன் உட்பட 53 அரசியல் கைதிகளுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.



உருவப்படத்துக்கு மாலை அணிவித்து சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது கட்சியின் முக்கியஸ்தர், பாராளுமன்ற உறுப்பினருமான எஸ். வினோ நோகராதலிங்கம், கட்சியின் உறுப்பினர்கள், ஈ.பி.ஆர்.கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர்.குமரேஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்திய மை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# வன்னி பிராந்திய மக்களின் பிரச்சினைகள் தொடர்பான விசேட கலந்துரையாடல்



வன்னி பிராந்தியத்தில் உள்ள மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கிய சிவில் சமூக அமைப்பு பிரதிநிதிகளை உள்ளடக்கி மாவட்ட ரீதியாக காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் விசேட ஒன்றுகூடல் மன்னார் மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் செவ்வாய்க்கிழமை (26) மாலை வவுனியா அமைதியம் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

குறித்த ஒன்று கூடலில் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் தொடர்ச்சியாக இடம் பெறும் காணி அபகரிப்பு, காற்றாலை மின் செயற்திட்டம், சட்டவிரோத மணல் அகழ்வு, பௌத்த மயமாக்கல் செயற்பாடுகள் போன்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

அதே நேரம் குறித்த ஒன்று கூடலில் பிரச்சினைகளுக்கான தீர்வை பெற்றுக் கொள்வதற்கான ஆவணங்கள் தயார்படுத்தல் மற்றும் தகவல் அறியும் உரிமை சட்டம் தொடர்பான தெளிவு படுத்தலும் வழங்கி வைக்கப்பட்டது.



குறித்த நிகழ்வில் சிவில் சமூக அமைப்பு பிரதிநிதிகள், மெசிடோ நிறுவன அதிகாரிகள், ஊடகவியளாலர்கள், ட்ரான்ஸ்பெரன்ஸி இன்ர நேஷனல் வடமாகாண இணைப்பாளர் என பலரும் கலந்து கொண்டனர்.

**- மன்னார் நிருபர்**

# இலங்கையிலிருந்து மேலும் 6 பேர் அகதிகளாக தமிழகத்தில் தஞ்சம்



இலங்கையில் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு அங்குள்ள மக்கள் வாழ வழியின்றி அண்டை நாடுகளான இந்தியா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளுக்கு ஆபத்தான முறையில் கடலில் பயணம் செய்து அகதிகளாக இடம் பெயர்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் தலைமன்னாரில் இருந்து கிளிநொச்சி மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த இரு குடும்பத்தை சேர்ந்த 6 நபர்கள் படகு மூலம் புதன்கிழமை (27) அதிகாலை தனுஷ்கோடியை சென்றடைந்துள்ளனர். ஏற்கனவே 30 குடும்பங்களை சேர்ந்த 117 நபர்கள் அகதிகளாக மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இந்த நிலையில் இன்று தனுஷ்கோடி அடுத்த கம்பிபாடு பகுதியில் ஒரு குடும்பம், தனி நபர் ஒருவரை சேர்த்து 3 சிறுவர்கள் உட்பட 6 பேர் தஞ்சம் அடைந்துள்ளனர். மேலும் தஞ்சம் அடைந்தவர்களை கடலோர காவல் குழும போலீசார் விசாரணைக்காக மண்டபம் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றனர். மேலும் அகதிகளாக வந்தவர்களை மரைன் போலீசார் விசாரணை நடத்தி பின்னர் மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமில் தங்க வைக்கப்பட உள்ளனர்.

செவ்வாய்க்கிழமை (26) இரவு 07.00 மணிக்கு தலைமன்னாரில் இருந்து குறித்த இரு குடும்பத்தை சேர்ந்த 6 நபர்கள் இலங்கை படகு மூலம் தனுஷ்கோடிக்கு பயணத்தை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**


MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.
MORTGAGE ALLIANCE
RIGHT BROKER = RIGHT MORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4



## Ontario Student Nutrition Program offers nutritious food through breakfast, lunch and snack programs to needy students.



# ஒன்றாரியோ மாகாணத்தில் காலை உணவு தேவையான மாணவர்களுக்கு சத்தணவுத் திட்டம் அறிமுகமாகின்றது

ஒன்றாரியோ மாகாணத்தில் காலை உணவு தேவையான பாடசாலை மாணவர்களுக்கு சத்தணவுத் திட்டம் அறிமுகமாகின்றது. இதற்காக ஏற்பாடுகளை ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சு செய்து வருவதாக மாகாணத்தின் கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெற்சே அவர்கள் செவ்வாய்கிழமையன்று பல்லின பத்திரிகையாளர்களோடு நடத்திய ஊடகச் சந்திப்பில் தெரிவித்தார்.

இணையவழியாக நடைபெற்ற இந்த சந்திப்பில் அமைச்சருடன் அவரது இரண்டு பாராளுமன்றச் செயலாளர்களும் கலந்து கொண்டு தங்கள் பணிகள் பற்றி ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளித்தனர்.

அமைச்சர் அங்கு ஊடகவியலாளர்களோடு தன் கருத்துக்களை பகிர்ந்து கொண்டார். அவற்றுள் முக்கிய விடயமாக ஒன்றாரியோ மாகாணத்தில் காலை உணவு தேவைப்படும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தை தமது அரசாங்கமும் அமைச்சும் அறிமுகம் செய்யவுள்ளதாகவும் இதற்காக ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும். மாணவர்களுக்கான சத்தணவுத் திட்டம் பற்றி மாணவர்கள் குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு காலை உணவு, மதிய உணவு மற்றும் சிற்றுண்டி நிகழ்ச்சிகள் மூலம் சத்தான உணவை வழங்கும் நடவடிக்கைகள் படிப்படியாக நடைமுறைக்கு வரும் என்று தெரிவித்தார்.

எதிர்வரும் புதிய கல்வி ஆண்டில் நாம் அறிமுகம் செய்யவுள்ள "மீளப் பெறுவோம்" என்னும் புதிய திட்டத்தின் பிரகாரம் அனைத்து மாணவர்களும் பெற்றோர்களும் பயன் பெற நாம் பக்க பலமாக இருப்போம். இந்த திட்டத்தின் பிரகாரம் ஒன்றாரியோ மாகாணத்தின் மாணவர்கள் பல புதிய விடயங்களை இலகுவாகவும் விரைவாகவும் பெற்றுக்கொள்ள வழிகள் திறக்கப்படவுள்ளன என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கற்றல் மற்றும் ஆரோக்கியமான வளர்ச்சியைக் கருதியே இந்த சத்துணவு திட்டத்தின் குறிக்கோள் திட்டமிடப்பட்டதாகவும். சத்தான உணவை மாணவர்கள் மற்றும் குழந்தைகள் உண்ணும் போது அவர்கள் கற்றுக்கொள்ளவும் கற்றலில் கவனம் செலுத்தவும் உதவுகிறது. மாணவர்கள் பாடசாலைகளில் பசியுடன் இருக்கும்போது படிப்பதில் சிரமங்கள் இருப்பதாக ஆராய்ச்சிகள் மற்றும் நாம் நடத்திய கலந்துரையாடல்கள் காட்டுகின்றன.

மேலும் கொரோனா வைரஸ் காரணமாகவும் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் கோவிட்-19 காரணமாக, பாடசாலைகள் மூடப்பட்ட காலங்களிலும் கோடைக்காலம் முழுவதிலும் குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்த சத்தணவுத் திட்டம் தொடர்ந்து இருப்பதை உறுதிசெய்ய மாற்றங்களைச் செய்து வருகிறோம். ஒன்றாறியோ மாகாணம் முழுவதும் உள்ள ஒவ்வொரு நிகழ்ச்சித் தளத்திலும் அனைத்து மாணவர்கள் மற்றும் குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு இந்தத் திட்டம் அவர்களது முன்னேற்றத்திற்கு கைகொடுக்கும் என்று நாம் கருதுகின்றோம்.

இந்த திட்டத்திற்கு எவ்வாறு பங்களிப்பது அல்லது தன்னார்வத் தொண்டு செய்வது என்பது பற்றிய தகவல் நிரல் நிர்வாகம் மற்றும் மானியங்களை பதினான்கு முன்னணி நிறுவனங்கள் மேற்பார்வையிடுகின்றன. அவர்கள் நிதி திரட்டலை ஆதரிக்கிறார்கள், திட்ட ஆதரவாளர்களுடன் கூட்டாண்மைகளை உருவாக்குகிறார்கள் மற்றும் உள்ளூர் திட்டங்களை ஆதரிக்க சமூக கூட்டாளர்களுடன் இணைந்து பணியாற்றுகிறார்கள்.

உள்ளூரில் நிதி திரட்டல் மாணவர் ஊட்டச்சத்து திட்டத்தின் ஒரு முக்கிய பகுதியாகும். உங்கள் சமூகத்தில் உள்ள திட்டங்களுக்கு எவ்வாறு பங்களிப்பது அல்லது தன்னார்வத் தொண்டு செய்வது என்பதை அறிய, உங்கள் உள்ளூர் முன்னணி நிறுவனத்தைத் தொடர்புகொள்ளலாம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.





அவர் ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையில். எமது பாடசாலைகளில் தொழில் முறைக் கல்வியையும் நாம் ஊக்குவிக்க முயலுகின்றோம். தற்போது தொழிற் சந்தையில் தொழில் நுட்பத் தர பணியாளர்களுக்கு அதிக தட்டுப்பாடுகள் நிகழ்கின்றன. எனவே தொழிற் கல்வியை ஊக்குவிப்பதன் மூலம் அதிக சம்பளம் பெறும் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தி ஒன்றாரியோ வாழ் இளைஞர்களும் யுவதிகளும் தங்கள் தொழிற் கல்வி மூலம் பயன்பெற நாம் வழிகாட்டவுள்ளோம் என்று தெரிவித்தார்.

மேலும் எமது மாகாணத்திற்கு புதிதாக வரும் புதிய குடிவரவாளர்கள் ஆங்கிலக் கல்வியைப் பெற்றுக்கொள்ளவும் நாம் வழி சமைக்கவுள்ளோம். ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் மாத்திரமல்ல அவர்களின் பெற்றோரும் தகுந்த ஆங்கிலக் கல்வியை இணைந்து பெற்றுக்கொள்ளவும் நாம் திட்டங்களை வழங்கவுள்ளோம். இசை அனைத்தும் வரும் புதிய கல்வி ஆண்டில் நாம் அறிமுகம் செய்யவுள்ள "மீளப் பெறுவோம்" என்னும் புதிய திட்டத்தின் பிரகாரம் அனைத்து மாணவர்களும் பெற்றோர்களும் பயன் பெற நாம் பக்க பலமாக இருப்போம் என்றார் அமைச்சர்.

# ரணில் ஜனாதிபதியாக தெரிவார் என தாம் எதிர்பார்த்திருக்கவில்லை என்கிறார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா

கடந்த நாடாளுமன்றத்தில் 68 லட்சம் வாக்குகளை பெற்று 142 ஆசனங்களை கைப்பற்றிய பொதுஜன பெரமுனவின் பிரதமர் உட்பட அனைவருக்கும் பதவிகளில் இருந்து விலகி வீட்டுக்கு செல்ல நேரிட்டது. அவர்களை வழி நடத்திய ஜனாதிபதி பதவியை விட்டு விலகிச் செல்ல நேர்ந்தது. இவற்றை நாம் நோக்கிய பொழுது அரசியல் உலகம் என்பது இப்படித்தான். என தீர்மானிக்க வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் நாம் தற்போது , நாட்டுக்காக எமது பங்களிப்பை எப்படி வழங்க முடியும் என்று நாங்கள் பார்க்கின்றோம் .

எனினும் அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதியை தெரிவு செய்யும் வாக்கெடுப்பில் ணில் ஜனாதிபதியாக தெரிவார் என நானோ அன்றி எமது கட்சியின் உறுப்பினர்களோ எதிர்பார்த்திருக்கவில்லை

.இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் 18வது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் மிகவும் பலமிக்க அரசருக்கு இருக்கும் பலத்துடன் கூடிய அரசாங்கம் இருந்தது.

எனினும் நான் 2015 ஆம் ஆண்டு பொது வேட்பாளராக போட்டியிட்டு தெரிவான பின்னர் முழு ராஜபக்ச குடும்பமும் வீட்டுக்கு சென்றது. ஒரு தேர்தல் தொகுதியில் கூட வெல்லாத ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார் என்று நாங்கள் எவரும் எதிர்பார்த்திருக்கவில்லை.

எனினும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு தேர்தல் தொகுதியில் கூட வெற்றிப்பெறாமல் அரசியலமைப்புச் சட்டத்தின்படி அவர் நாட்டின் ஜனாதிபதியாக தெரிவானார். என்றார் மைத்திரிபால சிறிசேனா.

அரசாங்கம் ஆரம்பத்தில் கூறியபடி செயற்படாத காரணத்தினால், அன்றைய அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவளிப்பதில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தீர்மானித்தது என அந்த கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் சர்வக்கட்சி அரசாங்கத்தை அமைப்பது சம்பந்தமான தயார் நிலையில் இருப்பதாக தெரியவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் முன்னாள் ஜனாதிபதி இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில். 'சர்வக்கட்சி அரசாங்கத்தை அமைக்காமல் நாட்டில் நிலவும் க்டங்களில் இருந்து மீள முடியாது. இன்றும் நாங்கள் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளோம். சிண்டு முடிச்சு விடுவதற்கோ அரசாங்கத்தை வலுப்படுத்துவதற்கோ நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார பிரச்சினைகளில் இருந்து மீண்டு வருவதற்கு சர்வக்கட்சி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் எனவும் இல்லை என்றால், நாடு நாளுக்கு நாள் க்டங்களுக்கு உள்ளாகும் எனவும் பொருளாதார நிபுணர்கள் உட்பட தகுதி வாய்ந்தவர்கள் கூறியுள்ளனர்.

தற்போதைய ஜனாதிபதியிடம் இந்த யோசனையை முன்வைப்போம், அவருடன் பேச்சுவார்த்தை நடத்துவோம். இதன் மூலம் இந்த யோசனைகளுக்கு அவரது பதில் என்ன என்பதை நாங்கள் அறிந்துக்கொள்ள முடியும்.

இதன் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்ற வகையில் எமது நடவடிக்கைகளை முன்னெடுக்க எண்ணியுள்ளோம். கட்சியிடம் கூறாது அரசாங்கத்தில் இணைந்துக்கொண்டவர்கள் தொடர்பில் எவ்வித வருத்தமும் இல்லை.




இலங்கை செய்திகள் Sri Lanka News

# ரம்புட்டான் விதை தொண்டையில் சிக்கி இளம் பிக்கு உயிரிழப்பு



மொரட்டுவை சொய்சா ராம விகாரையில் இருந்த இளம் பிக்கு ஒருவர் ரம்புட்டான் விதை தொண்டையில் சிக்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

தொண்டையில் ரம்புட்டான் விதை சிக்கிய நிலையில் கொழும்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவர் உயிரிழந்துள்ளதாக சொய்சா ராம மகா விகாரையின் பணிப்பாளர் தொடம் பஹல சுகுண நஹிமியன் தெரிவித்துள்ளார்.

பத்து வயதுடைய புலத்கம ஸ்ரீ விபூதி சாமனேர என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

இளம் பிக்குவின் திடீர் மறைவு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த விகாராதிபதி தேரர்,

புதன்கிழமை (27ம் திகதி) ரம்புட்டான் விதை ஒன்று சிக்கி களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

விபத்து பிரிவில் இருந்து ரம்புட்டான் விதை அகற்றப்பட்டாலும், அவரது உயிரைக் காப்பாற்ற முடியவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# பருத்தித்துறை எரிபொருள் நிரப்பு நிலையம் அருகில் எரிபொருள் வரிசையில் ஆடி அமாவாசை விரதம் அனுஸ்டிப்பு



எரிபொருள் வரிசையில் காத்திருந்தவர் ஆடி அமாவாசை விரதத்தை வீதியில் முடித்துக் கொண்ட புகைப்படம் ஒன்று சமூக வலைத்தளங்களில் வைரலாகி உள்ளது. இந்த சம்பவம் யாழ் பருத்தித்துறை எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

எரிபொருள் நெருக்கடியால் நாடாள ரீதியில் Q.R. அட்டையின் மூலம் வாகன இறுதி இலக்க அடிப்படையில் எரிபொருள் வழங்கப்பட்டு வருகின்றன. எனினும் எரிபொருள் நிலையத்துக்கு அருகாமை அதிகளவான வாகனங்கள்.

இந்நிலையில் இன்றைய தினம் எரிபொருள் பெற்றுக்கொள்ள வரிசையில் காத்திருந்த ஒருவர் தமது ஆடி அமாவாசை விரதத்தை வீதியில் முடித்து கொண்ட புகைப்படம் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு தேவையான ஒரு தொகுதி அவசர மருத்துவ பொருட்கள் கையளிப்பு



மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவுக்கு தேவையான ஒரு தொகுதி அவசர மருத்துவ பொருட்களை மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் (மெசிடோ) நிதி உதவியுடன் புதன்கிழமை (27) மாலை கையளிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வேண்டு கோளுக்கு அமைவாக குறித்த மருத்துவப் பொருட்கள் மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தினால் கையளிக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் வைத்து இன்றைய தினம் மதியம் கையளிக்கப்பட்டது.

மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ குறித்த மருத்துவ பொருட்களை மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உள்ளிட்ட வைத்திய குழுவினரிடம் கையளித்தார்.



மன்னார் மாவட்டம் உள்ளடங்களாக வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் பல்வேறு மனிதாபிமான உதவிகளையும் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் தமிழ் சிங்கள விரிவுரையாளர்கள் இணைந்த நடத்திய அரச எதிர்ப்பு கவனயீர்ப்புப் போராட்டம்



சில நாட்களுக்கு முன்னர் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் தமிழ் சிங்கள விரிவுரையாளர்கள் இணைந்த நடத்திய அரச எதிர்ப்பு கவனயீர்ப்புப் போராட்டம் தென்னிலங்கை மக்களையும் பல்வேறு பல்கலைக் கழகங்களின் விரிவுரையாளர்களையும் திரும்பிப் பார்க்கச் செய்துள்ளதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

ரணில் தலைமையிலான ஏமாற்று அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும் இக்கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. எனத் தெரியவந்துள்ளது. யாழ்ப்பாண ய பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நண்பகல் 12 மணியளவில் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்க பிரதிநிதிகள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஒன்றுகூடி இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். குறிப்பாக இந்த ஆர்ப்பாட்டப்போராட்டத்தில் தமிழ் சிங்கள மற்றும் இஸ்லாமிய விரிவுரையாளர்கள் ஆண்கள் பெண்கள் என முழுமையாகக் கலந்து கொண்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விரிவுரையாளர்களின் மேற்படிப் போராட்டத்தில் மக்களுடைய போராட்டத்துக்கு மதிப்பளி, நாட்டை கொள்ளை அடிக்காதே, ஏழைகளின் வயிற்றில் அடிக்காதே, காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வழங்கு போன்ற பதாகைகளை ஏந்தியவாறு விரிவுரையாளர்கள் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். என எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்

**- யாழ்ப்பாணத்திலிருந்து சுகுணன்**



# மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்ற ஆடி அமாவாசை சிறப்பு பூஜை

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் ஆடி அமாவாசை சிறப்பு பூஜையானது திருக்கேதீஸ்வரம் ஆலய பிரதம சிவாச்சாரியார் கண்ணன் குருக்கள் தலைமையில் வியாழக்கிழமை (28) இடம் பெற்றது. மரித்த முன்னோர்களுக்கான பிதிர்கடன் பாலாவி தீர்த்தக் கரையில் தர்ப்பணம் செய்யப்பட்டது.



இதன்போது ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தங்களுடைய முன்னோருக்கான பிதிர் கடன் களை நிறைவு செய்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர் (28-07-2022)**

இந்தியா செய்திகள் India News

# விலை உயர்வைக் கட்டுப்படுத்தவில்லையென்றால் இலங்கை நிலைமைதான் இந்தியாவுக்கும் வருமென்கிறார் முத்தரசன்



தீரன் நகரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட 8-வது மாநாடு நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக கட்சியின் மாநிலச் செயலாளர் முத்தரசன் கலந்துகொண்டு பேசினார்.

மாநாடு முடிந்து செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய முத்தரசன், "பெரம்பலூரில் சிறப்பு பொருளாதார மண்டலம் அமைக்க விவசாயிகளிடமிருந்து 3,200 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தப்படுத்தியது மாநில அரசு. அதில், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் வகையில் திட்டங்களை தொடங்க வேண்டும். இல்லையென்றால் உரிய விவசாயிகளிடம் நிலத்தை திருப்பி ஒப்படைக்க வேண்டும். தி.மு.க அரசால் ஏற்கெனவே அறிவித்தபடி பெரம்பலூர் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்க வேண்டும்.

கடந்த 50 ஆண்டுகளாக தொடர்ந்து வலியுறுத்தப்படும் சின்ன முட்லூ நீர்த்தேக்கத் திட்டத்தை கொண்டுவர ஏற்பாடுகள் செய்ய வேண்டும். நாட்டில் விலைவாசி உயர்வு, வேலையில்லா திண்டாட்டம் மிக முக்கியமான பிரச்னைகளாக இருக்கின்றன. இந்தியாவில் விலைவாசி உயர்வு கட்டுப்படுத்தப்படவில்லை என்றால் இலங்கையில் ஏற்பட்ட நிலைதான் இங்கும் ஏற்படும்.

அரிசி, பருப்பு, கோதுமை, தயிர் போன்ற பொருள்களுக்கெல்லாம் ஜி.எஸ்.டி வரித்திருப்பது சாமான்ய மக்களைக் கடுமையாக பாதிக்கும். இது குறித்து விவாதிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களை நாடாளுமன்றத்தில் அனுமதிக்க மாட்டோம் எனக்கூறி வருவது ஜனநாயகத்துக்கு எதிரான செயல். மக்களை பாதிக்காத அரசாக இருக்கவேண்டும். ஆனால் இங்கிருக்கும் மத்திய அரசு அப்படி இல்லை. மின் கட்டண உயர்வு குறித்து அறிவிப்பு வந்த உடனே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எதிர்ப்பு தெரிவித்தது. இப்போதும் கடுமையாக எதிர்த்து வருகிறோம். பள்ளிக் கல்லூரி மாணவ, மாணவிகள் தற்கொலை செய்துக்கொள்ளும் சம்பவங்கள் தொடர்வது நல்லதல்ல. மாணவ, மாணவிகள் மனநிலை பாதிக்கப்படுவதற்கான காரணத்தை கண்டறிந்து அவர்களுக்கு நம்பிக்கையூட்டும் நடவடிக்கைகளை பள்ளிக்கல்வித்துறை மேற்கொள்ள வேண்டும்" என்றார்.

இந்தியா செய்திகள்
India News

# கேரளாவில் எஸ்பி வீட்டு நாயை குளிப்பாட்ட மறுத்த போலீஸ்காரர் சஸ்பெண்ட்



திருவனந்தபுரத்தில் போலீஸ் தொலைத்தொடர்பு எஸ்பியாக பணிபுரிந்து வருபவர் நவநீத் ஷர்மா. இவரது மனைவி ரயில்வேயில் உயரதிகாரியாக உள்ளார். இதனால் ரயில்வே குடியிருப்பில் நவநீத்ஷர்மா மனைவியுடன் தங்கி உள்ளார். நவநீத்ஷர்மாவுக்கு 2 பாதுகாவலர்கள் உள்ளனர். இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன் இவரது பாதுகாவலரான ஆகாஷ் என்பவரை அவரது வீட்டு வேலைக்காரர் அழைத்து நாயை குளிப்பாட்டுமாறு கூறியுள்ளார். ஆனால் தன்னுடைய வேலை அதுவல்ல என்று கூறியவர் தனக்கு ஒதுக்கப்படிருந்த அறைக்கு சென்று டிவி பார்த்ததாக கூறப்படுகிறது. இது குறித்து வீட்டு வேலைக்காரர் நவநீத்ஷர்மாவுக்கு போன் செய்து விபரத்தை கூறியுள்ளார்.

இதில் கோபமடைந்த நவநீத் ஷர்மா தொலைத்தொடர்பு சப்-இன்ஸ்பெக்டரை அழைத்து ஆகாஷ் தன்னுடைய வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து பொருட்களை சேதப்படுத்தியதாக எப்ஐஆர் பதிவு செய்யுமாறு கூறியுள்ளார்.

வேறு வழியின்றி எஸ்பி கூறியபடி ஆகாஷ் மீது சப்-இன்ஸ்பெக்டர் எப்ஐஆர் பதிவு செய்துள்ளார். இதன் பின் ஆகாஷை உடனடியாக சஸ்பெண்ட் செய்து நவ்நீத் ஷர்மா உத்தரவு பிறப்பித்தார். இதுகுறித்து ஆகாஷ் முதல்வர் அலுவலகத்தில் புகார் செய்தார். இதையடுத்து சஸ்பெண்ட் உத்தரவை உடனடியாக ரத்து செய்ய போலீஸ் தலைமையக உதவிஐஜிக்கு முதல்வர் அலுவலகத்தில் இருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதை தொடர்ந்து ஆகாஷின் சஸ்பெண்ட் உத்தரவு உடனடியாக ரத்து செய்யப்பட்டது. மேலும் அவர் எஸ்பி. நவநீத்ஷர்மாவின் பாதுகாவலர் பணியிலிருந்து ஆயுதப்படைக்கு மாற்றப்பட்டார். இந்த சம்பவம் கேரள போலீசில் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

# கருணாநிதிக்கு பேனா வடிவ நினைவுச்சின்னம்...

## மக்கள் வரிப்பணத்தில் அவசியமில்லை என்கிறார் நடிகர் விஜயகாந்த்




திமுக அறக்கட்டளை பணம் நினைவுச்சின்னம் அவசியம் என்றால் திமுக அறக்கட்டளைக்கு சொந்தமான பணத்தை வைத்து நினைவுச்சின்னம் அமைக்கலாம். மக்கள் வரிப்பணத்தை வீணடிப்பதற்கு பதிலாக ஆக்கப்பூர்வமான பணிகளுக்கு அதனை பயன்படுத்த வேண்டும் என்றும் விஜயகாந் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

--------------------------------------------------------

முன்னாள் முதல்வர் மு.கருணாநிதிக்கு பேனா வடிவத்தில் நினைவுச்சின்னம் அமைப்பதற்கு தேமுதிக தலைவர் விஜயகாந்த் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். மக்கள் வரிப்பணத்தில் நினைவுச்சின்னம் அமைப்பதற்கு பதிலாக திமுக அறக்கட்டளைக்கு சொந்தமான பணத்தை வைத்து நினைவுச்சின்னம் அமைக்கலாம் என்றும் கூறியுள்ளார் விஜயகாந்த். கருணாநிதி நினைவிடத்தின் பின் பகுதியில் கடலுக்குள் 42மீ உயரத்தில் பேனா வடிவ நினைவுச் சின்னம் அமைக்க தமிழ்நாடு கடலோர மண்டல ஆணையம் அனுமதி அளித்துள்ளது. திமுக முன்னாள் தலைவரும், தமிழக முன்னாள் முதல்வருமான கருணாநிதிக்கு மெரினாவில் நினைவிடம் அமைக்கப்படும் என, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். சட்டப்பேரவையில் விதி எண் 110-ன் கீழ் அவர் இதனை கடந்த ஆண்டு ஆகஸ்ட் 24ஆம் தேதி சட்டசபையில் அறிவித்தார்.

அப்போது பேசிய முதல்வர் ஸ்டாலின், "தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதியின் சாதனைகளை, சிந்தனைகளைப் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில், காமராஜர் சாலையில் அண்ணா நினைவிட வளாகத்தில் 2.21 ஏக்கர் பரப்பளவில் 39 கோடி மதிப்பீட்டில் நினைவிடம் அமைக்கப்படும். அண்ணா நினைவிட வளாகத்தில் கருணாநிதியின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்திலேயே நினைவிடம் அமைக்கப்படும். அந்த நினைவிடத்தில் கருணாநிதியின் வாழ்க்கை, சிந்தனை அடங்கிய நவீன ஒளிப்படங்கள் இடம்பெறும்" என்று கூறினார்.



இதனைத் தொடர்ந்து கருணாநிதிக்கு அமைக்கப்படவுள்ள நினைவிடத்தின் மாதிரி வரைபடத்தை முதல்வர் ஸ்டாலின் தன் ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டார். அதில், உதயசூரியன் வடிவில் கருணாநிதி நினைவிடமும், பிரம்மாண்டமான பேனா வடிவிலான தூணும் இடம்பெற்று இருந்தது. இந்நிலையில் கருணாநிதி நினைவிடத்தின் பின் பகுதியில் கடலுக்குள் 42மீ உயரத்தில் பேனா வடிவ நினைவுச் சின்னம் அமைக்க தமிழ்நாடு கடலோர மண்டல ஆணையம் அனுமதி அளித்துள்ளது. கடலுக்குள் ரூ.81 கோடி செலவில் இந்த நினைவுச் சின்னம் அமைக்கப்படவுள்ளது. இதற்கு சென்றடையும் வகையில் நினைவிடத்தில் இருந்து 290மீ தூரத்திற்கு கடற்கரை, 360மீ தூரத்திற்கு கடலிலும் என 650 மீட்டர் தொலைவிற்கு பாலம் அமைக்கப்படவுள்ளது. தற்போது மாநில கடலோர மண்டல மேலாண்மை ஆணையம் அனுமதி அளித்துவிட்ட நிலையில் மத்திய அரசின் அனுமதிக்கு இது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நினைவுச்சின்னம் அமைப்பதற்கு அரசியல் கட்சித்தலைவர்கள் ஆதரவாகவும் எதிர்ப்பாகவும் கருத்துக்களை கூறி வருகின்றனர். தேமுதிக தலைவர் விஜயகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில், மறைந்த முன்னாள் கருணாநிதியின் நினைவாக மெரினா கடலில் 134 அடி உயரத்தில் ரூ.80 கோடியில் பிரம்மாண்ட பேனா வடிவ நினைவுச்சின்னம் அமைக்கக் கூடாது. ரூ.80 கோடியில் பேனா வடிவ நினைவுச்சின்னம் அமைப்பதால் யாருக்கு லாபம்?. நினைவுச்சின்னத்திற்காக செலவு செய்யும் பணத்தை சாலை வசதி, உட்கட்டமைப்பு வசதி, தொழில் வசதிகளை செலவு செய்ய பயன்படுத்தலாம். மக்கள் அதனை வரவேற்பார்கள். கன்னியாகுமரியில் வள்ளுவர் சிலை, சென்னையில் வள்ளுவர் கோட்டம் போன்ற நினைவுச்சின்னங்கள் இருக்கும் நிலையில் மெரினாவில் மீண்டும் நினைவுச்சின்னம் அமைப்பது அவசியமற்றது.



# கனடா இந்து

CANADA HINDU

*Published by Thurkeswaram, Sridurka Hindu Temple, 30 Carnforth Road, Toronto, ON M4A 2K7 TEL : 416-759 9648*


# துர்க்கேஸ்வரத்தில் மகோற்சவம் ஆரம்பமாகிவிட்டது



7-7-2022 வியாழன் கொடியேற்ற காட்சிகள்



## துர்க்கேஸ்வரத்தில் தேர்த்திருவிழா 30-7-2022 சனி

07-07-2022 வியாழன்
கொடியேற்றம்

## இனி வரும் திருவிழாக்கள்

கைலாசவாகனம்
12-07-2022 செவ்வாய்
இரவு 8.00 மணி

மஞ்சத் திருவிழா
16-07-2022 சனி
இரவு 8.00 மணி

வசந்தோற்சவம்
24-07-2022 ஞாயிறு
இரவு 8.00 மணி

பக்த முத்தி
பாவனோற்சவம்
26-07-2022 செவ்வாய்
இரவு 8.00 மணி

ஞானப்பால் உற்சவம்
27-07-2022 புதன்
இரவு 8.00 மணி

வேட்டைத் திருவிழா
28-07-2022 வியாழன்
இரவு 8.00 மணி

சப்பறம்
29-07-2022 வெள்ளி
இரவு 8.00 மணி

தேர்த்திருவிழா
30-07-2022 சனி
காலை 9.00 மணி

தீர்த்தம்
பூரகர்மம் ருதுசாந்தி
31-07-2022 ஞாயிறு
காலை 9.00 மணி


பூங்காவனம்
1-08-2022 திங்கள்
மாலை 6.30 மணி

வைரவர் மடை
2-08-2022 செவ்வாய்
மாலை 6.30 மணி

உதயனின் பிரத்தியேகச் செய்தி

# ரணில் பக்கம் விக்கி சாய்ந்தது ஏன்......?

நடராசா லோகதயாளன் & சிவா பரமேஸ்வரன்



ஒருவரை நம்புவது குற்றமா? என கேள்வி எழுப்புகின்றார் வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினருமான க.வி. விக்னேஸ்வரன்.

நாட்டில் மக்களால் நேரடியாகத் தேந்ர்தெடுக்கபட்ட கோத்தாபய ராஜபக்ச "அரகலிய" போராட்டக்காரர்களால் பதவியிலிருந்தும் நாட்டிலிருந்தும் விரட்டப்பட்ட நிலையில், நாடாளுமன்றத்தின் மூலம் ஜனாதிபதியாகும் வாய்ப்பை முன்னாள் பிரதமரும், தற்காலிக ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்ரமசிங்க பெற்றார்.

இன்றளவும் அவரது வெற்றி குறித்து வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்று வருகின்றன. நாடாளுமன்றத்தின் மூலம் நடைபெற்ற அந்த தேர்தலில் பல உறுப்பினர்கள் கட்சிமாறி வாக்களித்துள்ளது இப்போது தெரியவந்துள்ளது. அதில் பலர் தமது கட்சி எடுத்த முடிவிற்கு மாறாகவும் சுய விருப்பத்தின் அடிப்படையிலும் வாக்களித்துள்ளனர். இதில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் இரண்டு உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் பங்கேற்கப் போவதில்லை என்று கூறி அவ்வாறே செய்தனர்.

ஆனால் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் அதை புறக்கணிக்கப் போவதாக முதல் நபராக தெரிவித்த விக்னேஸ்வரன் இறுதியில் ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவாக வாக்களித்துள்ளதாக வெளிப்படையாகத் தெரிவித்தார். கூறியது ஒன்று செய்தது ஒன்று என அவரிடம் கனடா உதயன் சார்பில் கேட்கப்பதடு. இது தொடர்பில் அவரிடம் நான்கு வினாக்கள் எழுத்து மூலமாக முன்வைக்கப்பட்டன.

அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அதன் பதில்களும் அப்படியே இங்கு கொடுக்கப்பட்டுள்ளன:



*01. கேள்வி:*

ஜனாதிபதித் தேர்வில் நடுநிலை வகிப்பதாக அறிவித்த நீங்கள் எதன் அடிப்படையில் அந்த முடிவை மாற்றிக்கொண்டீர்கள்?.

*பதில்:*

ஜனாதிபதித் தேர்தலில் நடுநிலை வகிக்க வேண்டியிருப்பதாக கூறப்பட்ட போது யார் யார் எவ்வெதனைக் கூறப் போகின்றார்கள் என்று அறியாதிருந்தோம். அப்போது இரணிலா சஜீத்தா என்ற கேள்வியே முன்னிலைப்படுத்தப்பட்டு இருந்தது. இருவரில் யார் எமது கோரிக்கைகளுக்கு எமது எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்பப் பதில் தருகின்றார்களோ அவர்களை ஆதரிப்பது பற்றி சிந்திக்கலாம் என்றும் கூறியிருந்தோம். இரணில் பிரதம மந்திரியாகப் பதவி வகிக்க முன்வந்தபோதே தனியார் தொலைக்காட்சியின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் முகமாக எமது எதிர்பார்ப்புக்கள் பற்றிக் கூறியிருந்தேன். மூன்று நிபந்தனைகளை விதித்து அவற்றிற்கு தீர்வு கொண்டு வந்தால் அவருடன் சேர்ந்து பயணிக்க முடியும் என்றும் கூறியிருந்தேன். ஜனாதிபதித் தேர்வில் இரணிலும் சஜீத்தும் என்னை நாடி எனது ஆதரவை வேண்டி நின்றார்கள். நான் ஜுலை 19ந் திகதி பாராளுமன்றம் வரும் போது எமது கோரிக்கைகளை முன் வைப்பேன் என்று இருவரிடமும் கூறியிருந்தேன். அன்று சஜீத் போட்டியில் இருந்து விலகிக் கொண்டார். டலசோ, அனுர குமாரவோ என்னுடன் தேர்தல் சம்பந்தமாகப் பேசவுமில்லை, ஆதரவு கேட்கவுமில்லை. சஜீத் கூட டலசுக்காக ஆதரவு கேட்கவில்லை.

19ந் திகதி இரணிலே என் பாராளுமன்ற இருக்கை தேடி வந்து நாங்கள் சந்திக்க வேண்டும் என்றார். அவரின் காரியாலய அறைக்கு நானே வருவதாகக் கூறி அங்கு சென்று சந்தித்தேன். ஆறு தமிழ்த் தேசியக் கட்சிகள் தயாரித்த எமது கோரிக்கைகள் கடிதத்தை அவரிடம் கையளித்தேன். பலதையும் பற்றிப் பேசினோம். கோவா, பாண்டிச்சேரி பற்றி இந்திய அரசியல் யாப்பில் கூறப்பட்டவற்றை ஆராய்ந்து வருவதாகக் கூறினார். அதாவது இந்திய அரசியல் யாப்பின் அடிப்படையில் இங்கு மாற்றங்களை அறிமுகப்படுத்த முடியுமா என்பதை ஆராய்வதாகக் கூறினார். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கல், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், காணி அபகரிப்புக்களை நிறுத்துதல், இராணுவத்தினரின் தொகையை அரைவாசியாகக் குறைத்து காலக்கிரமத்தில் முழுமையாக நீக்கல் போன்ற பலதையும் படிப்படியாகத் தான் செய்வதாகக் கூறினார். மொத்தத்தில் எமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் அவர் எதிர்ப்பேதும் தெரிவிக்கவில்லை. எனது பல கேள்விகளுக்குப் பொருத்தமான பதில்கள் தந்தார். தான் தனது பதவிக் காலத்தில் செய்யப் போகின்றவற்றை விவரித்தார். அவரின் கூற்றுக்களை நான் ஏற்றுக் கொண்டேன். அவருக்கு ஆதரவு அளிப்பது எமது மக்களுக்கு நன்மையையே தரும் என்ற எனது முடிவின் அடிப்படையிலேயே இரணிலுக்கு வெளிப்படையாக ஆதரவு தெரிவிக்க முன்வந்தேன். வெளிப்படையாக எனது ஆதரவையும் தெரிவித்தேன்.

*02. கேள்வி:*

ரணில் விக்கிரமசிங்காவும் பதவி விலக வேண்டும் எனக் கோரிக்கை முன் வைக்கப்படுவதோடு அவரை ஆதரித்த தங்களிற்கு எதிராகவும் போராடும் நிலைமை ஏற்படும் என சமூக ஊடகங்களில் தெரிவிக்கப்படுவது தொடர்பில் என்ன கருதுகின்றீர்கள்?

*பதில்:*

இந்தத் தருணத்தில் இரணிலைப் பதவியில் இருந்து நீக்குவது நாட்டுக்கு நன்மை தராது. அதை நாம் மறந்தலாகாது. மேற்கையும் கிழக்கையும் சமாளித்துச் செல்லும் வல்லமை உடையவர் அவர். முதலில் கோட்டா கோ ஹோம், அடுத்து இரணில் கோ ஹோம் நீங்கள் சொல்வதைப் பார்த்தால் அதற்கு அடுத்தது "விக்கி கோ ஹோம்" என்று பல்லவி மாறப் போவதாகத் தெரிகின்றது. இவை எல்லாம் விகடமாகத் தெரியவில்லையா? சமூக ஊடகங்கள் நினைப்பது போல் ஒருவர் நடந்து கொள்ளாவிடில் ஒன்றில் அவரைப் பைத்தியக்காரர் என்பார்கள் அல்லது பயங்கரவாதி என்பார்கள் அல்லது தீவிரவாதி என்பார்கள் அல்லது "வீட்டுக்குப் போ" என்பார்கள். நான் ஏற்கனவே என் வீட்டில்த் தான் இருக்கின்றேன். என்னை எங்கு துரத்தப் பார்க்கின்றார்கள்? பாராளுமன்றத்தில் இரணிலை ஆதரித்த 132 பேரையும் வீட்டுக்கு அனுப்பப் போகின்றார்களா? சமூக ஊடகங்களுக்கு எம்மை வீட்டுக்கு அனுப்பும் இந்த உரித்தை யார் கொடுத்தார்கள்? வீட்டுக்குப் போவதை நிறுத்தி இனி நாம் எல்லாம் வேலைக்குப் போகக் கற்றுக் கொள்வோம்.

*03. கேள்வி:*

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைத்தால் அமைச்சரவையில் பங்குகொள்வீர்களா?

*பதில்:*

அதை முடிவு செய்வது எனது கட்சி. எம்மக்களுக்கு எது நன்மை பயக்குமோ அதன் அடிப்படையில் அவர்களின் தீர்மானம் இருக்கும் என்று நம்புகின்றேன்.

*04. கேள்வி:*

மாகாண முதலமைச்சராக இருந்த காலத்தில் ரணிலை நம்ப முடியாது அவர் ஒரு பொய்யர் எனத் தெரிவித்த நீங்கள் தற்போது எதன் அடிப்படையில் நம்பினீர்கள்?

*பதில்:*

அப்போது அவர் என்னை ஒரு பொய்யர் என்று கூறினார். உண்மையில் பொய் கூறியது அவரே. என்னையும், திரு சம்பந்தனையும், திரு சுமந்திரனையும் மலிக் சமரவிக்ரமவின் வீட்டில் 2015ம் ஆண்டு ஜனவரி மாதம் 9ந் திகதி சந்தித்தும் அப்படி எதுவும் நடக்கவில்லை என்று சிங்கள மக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய அரசியல் இடர்நிலை அவருக்கு அன்று இருந்தது. உண்மையை வெளியிட அப்போது திரு சம்பந்தனும் திரு சுமந்திரனும் கூட முன்வரவிலை. என்னுடனும் உண்மை நிலையுடனும் நில்லாது பொய்மையுடனும் திரு. இரணிலுடனும் நின்று மௌனம் காத்தார்கள். ஆனால் அதன் பின்னர் பல வருடங்கள் சென்று விட்டன. இரணிலை ஒரு குள்ள நரி என்று இன்றும் பலர் கூறுகின்றார்கள்.

ஆனால் அதற்கு அப்பால் சென்று எமது மக்களின் கோரிக்கைகளை எழுத்தில் இட்டு அவரிடம் கையளித்து அவற்றின் அடிப்படையில் நாங்கள் கருத்துப் பரிமாறிக் கொண்டோம். 15 நிமிடங்களுக்கு மேலாக நாம் கருத்துப் பரிமாறிக் கொண்டோம். அவர் தன் பதவிக் காலத்தில் இந்த நாட்டின் பிரச்சனைகளை சுமூகமாகத் தீர்த்து பொருளாதார ரீதியாக நாட்டைக் கட்டி எழுப்ப வேண்டும் என்ற கனவில் இருந்ததை நான் புரிந்து கொண்டேன். எவ்வெவெற்றை செய்யவிருக்கின்றார் என்பதை அவர் மனம் விட்டுப் பேசினார். அவர் பொய் பேசியிருக்கக் கூடும் ஆனால் அவரின் சிந்தனைகளின் பரந்த வீச்சு, நினைத்ததைச் செய்து முடிப்பேன் என்ற திடசங்கற்பம் ஆகியன என்னைக் கவர்ந்தன. ஒருவரை நம்புவது அவ்வளவு பெரிய குற்றமா என்ன? கொடுத்த வாக்கை அவர் காப்பாற்றா விட்டால் அதன் பெறுபேறு அவருக்குரியது எனக்குரியது அல்ல எனப் பதிலளித்தார்.



இதனிடையே செவ்வாய்க்கிழமை (26) அன்று ஊடகங்களிடம் பேசிய சி வி விக்னேஸ்வரன் தான் ரணிலுடன் நடத்திய பேச்சுவார்த்தை பற்றி சில கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டார்.

"அவர் சமஷ்டி ரீதியான அரசியல் யாப்பைத் தருவதாக ஒன்றும் ஒத்துக்கொள்ளவில்லை, ஆனால் இந்தியாவிலுள்ள கோவா மற்றும் பாண்டிச்சேரி பிரதேசம் ஆகியவற்றை அரசியல் யாப்பின் கீழ் அவர்கள் நிர்வகிக்கின்றார்கள், அவர்களுக்கு உரிய உரிமைகள், உரித்துக்கள் என்ன என்பது சம்பந்தமாக தான் தற்போது பரிசீலித்து வருவதாகக் கூறினார். ஆகவே அவருடைய எண்ணத்திலே சில கருத்துக்கள் இருப்பதை நான் அறிந்துகொண்டேன். நாங்கள் கோருவது போன்றதொரு முழுமையான சமஷ்டி அரசியல் யாப்பை பெற முடியாதோ என்று தெரியாது. ஆனால் அதே நேரத்திலே வடக்கு" கிழக்கு மாகாணங்களுக்கு தன்னாட்சி தரக்கூடிய விதத்திலே அவர் சிந்திக்கின்றார் என்பது எனக்குத் தெரிய வந்தது. பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குதல், தமிழ் கைதிகள் விடுதலை, காணிகளை விடுவிப்பது ஆகியவையும் விவாதிக்கப்பட்டன".

கடந்த வாரம் எழுப்பிய கேள்விகளிற்கு பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விகனேஸ்வரனிற்கு கனடா உதயன் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.



# நிலத்தையும், நீரையும் கெடுக்கும் சீமைக்கருவேலம், யூகலிப்டஸ் போன்ற அந்நிய மரங்களை அகற்ற வேண்டும்!




நில வளத்தையும், நீர் வளத்தையும் கெடுக்கும் பண்புகளைக் கொண்ட சீமைக்கருவேல மரம், யூகலிப்டஸ் மரம் போன்ற அந்நிய மரங்களை விரைந்து அகற்ற செயல்திட்டம் வகுக்க வேண்டும்.

- சீமான் வலியுறுத்தல் | நாம் தமிழர் கட்சி

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, தமிழக வனப்பகுதிகளிலுள்ள அந்நிய மரங்களை அகற்றக்கோரி தொடரப்பட்டப் பொது வழக்கொன்றில், விரைவாக அவற்றிற்கென செயல்திட்டத்தை வகுக்க வலியுறுத்தியும், யூகலிப்டஸ் மரங்களை நடுவதற்குத் தடைவிதித்தும் உத்தரவிட்டுள்ள சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பினைப் பெரிதும் வரவேற்கிறேன். "மரம் மண்ணின் வரம் அதனை வளர்ப்பதே மனித அறம்" எனும் உயரியக் கோட்பாட்டுக்கேற்ப, மரம் வளர்ப்பைப் பெரிதும் ஊக்கப்படுத்தி, அதுகுறித்த விழிப்புணர்வை மக்களிடம் நாளும் ஏற்படுத்தி வரும் வேளையில், மரங்களின் பண்புகளுக்கு நேர்மாறானக் குணங்களைக் கொண்டுள்ள யூகலிப்டஸ் மரம், சீமைக்கருவேல மரம் போன்ற அந்நிய மரங்களை இம்மண்ணிலிருந்து அகற்ற வேண்டியதும் பேரவசியமாகிறது.

நிலத்தடி நீர் வளத்தை உறிஞ்சி, காற்றிலுள்ள நீர்ச்சத்தையும் உறிஞ்சி, வறட்சியை ஏற்படுத்தும் தன்மை கொண்ட மரங்களின் பேயான சீமைக்கருவேல மரமும், சமூகநலக்காடுகள் எனும் பெயரில் திணிக்கப்பட்ட யூகலிப்டஸ் மரமும் நில வளத்தையும், நீர் வளத்தையும் முற்றாகப் பாதிக்கிறது. வர்தா புயல் தாக்குதலின்போது சென்னையிலுள்ள பெருவாரியான மரங்கள் முறிந்து விழுந்ததற்குக் காரணமும், அவை இம்மண்ணுக்குத் தொடர்பற்ற அந்நிய மரங்கள் என்பதேயாகும். இம்மண்ணுக்கேற்ற மரங்களை நட்டு வளர்க்கும்போதுதான் பெருங்காற்றை எதிர்கொண்டாலும் அவை தாங்கும் திறனைக்கொண்டு, நிலைத்து நிற்கின்றன. அண்டை மாநிலமான கேரளாவில் மரங்கள் குறித்தான விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தி, சீமைக்கருவேல மரங்களை மொத்தமாக அகற்றி, மண்ணுக்கேற்ற மரங்களையே நட்டு வளர்க்கிறார்கள். அம்மாநிலம் வளம் கொழிப்பதற்கும், இயற்கையின் பசுஞ்சோலையாகக் காட்சியளிப்பதற்கும் அம்மாநிலத்தை ஆளும் அரசுகளின் இயற்கை நலன் குறித்தானப் பெருத்த அக்கறையே முதன்மைக்காரணமாகும். மேலை நாடுகளில், மரங்களைப் பராமரிப்பதற்கென்றே "மர மருத்துவர்கள்" எனும் ஒரு பிரிவை உருவாக்கி வைத்திருக்கிறார்கள். நில வளம், நீர் வளம், மலை வளம், கடல் வளம், கனிம வளம் என இயற்கையின் சொத்துக்கள் யாவற்றையும் சுரண்டிக்கொளுப்பதையும், சூறையாடித்தின்பதையும் நோக்கமாகக் கொண்ட இம்மண்ணின் ஆட்சியாளர்கள் அதுகுறித்த எந்தக்கவலையும், அக்கறையும் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. இந்நிலையில், சீமைக்கருவேல மரம், யூகலிப்டஸ் மரம் போன்ற அந்நிய மரங்களை அகற்ற உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பது காலத்திற்கேற்ற சாலச்சிறந்த நடவடிக்கையாகும் ஆக்கப்பூர்வமான பெரும் முன்னெடுப்பாகும்.

ஆகவே, தமிழக அரசானது இவ்விவகாரத்தில் சீரியக்கவனமெடுத்து, சீமைக்கருவேல மரம், யூகலிப்டஸ் மரம் போன்ற அந்நிய மரங்கள் யாவற்றையும் அகற்றவும், தேக்கு, சவுக்கு, புளி, வேம்பு, நாவல், மூங்கில், பனை போன்ற இம்மண்ணுக்கேற்ற மரங்களை வளர்க்கவும் செயல்திட்டத்தை விரைந்து வகுக்க வேண்டுமெனவும், மக்களிடையே இதுகுறித்தான விழிப்புணர்வுப்பரப்புரையை முன்வைத்து, கேரள மாநிலத்தில் செயல்படுத்தியது போல, இதனை மக்கள் இயக்கமாக முன்னெடுத்துக் கொண்டு செல்ல வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.








# ரணிலை எதிர்கொள்வது

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

மஹிந்தவை, கோட்டாவை நீக்கியது போல ரணிலையும் அரகலியக்காரர்கள் துரத்துவார்களாக இருந்தால் நிலைமை வேறு. இல்லையென்றால் அடுத்த இரண்டு வருடத்திற்கும் நான்கு மாதங்களுக்கும் அவர்தான் ஜனாதிபதி. தமிழ் மக்கள் அவரோடு தான் பேச வேண்டும். அவரோடு தான் போராடவும் வேண்டும்.

அவர் ஒரு நரி என்று அன்ரன் பாலசிங்கம் கூறினார். அவருடைய மாமனார் ஜெயவர்த்தனாவையும் குள்ளநரி என்று அழைப்பார்கள். இப்பொழுது அரகலியக்காரர்களும் அவரை குள்ளநரி என்று அழைப்பதாக தகவல். அரகலவின் மீது அவர் தாக்குதலை நடாத்த முன்னரே மனோகணேசன் அது தொடர்பாக ஒரு குறிப்பை முகநூலில் போட்டிருந்தார்.

ஓர் அரசியல்வாதியை ஏன் நரி என்று அழைக்க வேண்டி வருகிறது? ஏனென்றால் அவர் தந்திரம் செய்கிறார் என்பதனால். ஓர் அரசியல்வாதி ஏன் தந்திரம் செய்கிறார்? ஒன்றில் தன்னை காப்பாற்றச் செய்கிறார். அல்லது தன் கட்சியைக் காப்பாற்றச் செய்கிறார். அல்லது தன் மக்களைக் காப்பாற்றச் செய்கிறார். ரணில் யாருக்காக தந்திரங்கள் செய்கிறார்? தனக்காகவா? கட்சிக்காகவா? நாட்டுக்காகவா? மூன்றுக்கும் ஆகத்தான். இதை இன்னும் தெளிவாகச் சொன்னால் அவர் சிங்கள மக்களுக்காக சிங்கள பௌத்த அரசை காப்பாற்றுவதற்காக தந்திரங்கள் செய்கிறார் என்று எடுத்துக் கொள்ளலாம்.

இலங்கை தீவு ஒரு குட்டி தீவு. இந்து மகா சமுத்திரத்தில் கேந்திர முக்கியத்துவம் மிக்க ஒரு கடல் வழியில் அமைந்திருக்கிறது. ஒருபுறம் பிராந்தியப் பேரரசு. இந்தியப் பேரரசின் செல்வாக்கு வலையத்துக்குள் இலங்கை காணப்படுகிறது. அதேசமயம் சீனாவின் பட்டியும் பாதையும் வியூகம், அதற்கு எதிரான அமெரிக்காவின் இந்தோபசுபிக் வியூகம் ஆகிய இரண்டு வியூகங்களும் ஒன்றை மற்றதை வெட்டும் புள்ளியில் இலங்கை காணப்படுகிறது. அதாவது மூன்று பேரரசுகளின் இழிவிசைகளுக்குள் சிக்குண்டிருக்கும் ஒரு குட்டித் தீவு.

இது காரணமாக இச்சிறிய தீவின் தலைவராக வரும் யாரும் தந்திரந்தான் செய்யலாம். வீரங்காட்ட முடியாது. புஜபல பராக்கிரமத்தை காட்டமுடியாது. உக்ரைனின் தலைவர் செலன்சி காட்டுவதுபோல வீரங்காட்டுவது என்று சொன்னால், அதற்கு, அமெரிக்காவும் நேட்டோவும் ஐரோப்பிய யூனியனும் பின்னால் நிற்க வேண்டும். ஆனால் இலங்கைத்தீவின் நிலைமை அப்படியல்ல. ராஜபக்சக்கள் அதற்கு ஆகப்பிந்திய முன்னுதாரணம். எனவே சிறிய இலங்கைத் தீவின் தலைவராக வரும் ஒருவர் அதிலும் குறிப்பாக உள்நாட்டில் மக்களாணை இல்லாத ஒருவர் ஜனவசியம் குறைந்த ஒருவர், என்ன செய்யலாம்?

ரணில் இயல்பாகவே புஜபல பராக்கிரமத்தைக் காட்டுபவர் அல்ல. அதற்குரிய தோற்றமும் அவருக்கு இல்லை. ராஜபக்சக்களைப் போல அட்டகாசமான ஜனவசிய அரசியல் அவருக்குக் கைகூடி வராது. அதற்குத் தேவையான மிடுக்கான தோற்றமும் அவருக்கு இல்லை. சோர்ந்த வாடிய தோற்றம். அழுத்தம் இல்லாத குரல். புத்திசாலித்தனமாக ஆனால் கவர்ச்சியற்ற குரலில் கதைப்பார்.

சிங்களபௌத்த பெருந்தேசியவாதத்தின் உள்நாட்டு ஆடைகளான வேட்டி நஷனலோடு அவரைக் காணமுடியாது. எப்பொழுதும் மேற்கத்திய தோற்றத்தோடுதான் காணப்படுவார். ஒரு சிங்கள பௌத்தராக இருந்த போதிலும் கடும்போக்கு சிங்களவர்கள் அவரை கிறிஸ்தவ பின்னணியோடு பொருத்தித்தான் பார்க்கிறார்கள். அவரை சிங்கள பௌத்தத்தின் விட்டுக் கொடுப்பற்ற காவலனாகப் பார்க்கவில்லை.

நோர்வேயின் அனுசரணையுடனான சமாதான முயற்சிகளில் தொடங்கி இன்றுவரையிலும் அவர் உள்நாட்டில் மிகப்பலவீனமான ஒரு தலைவர். சிங்கள பௌத்தத்தின் தந்திரமான முகத்துக்குத்தான் அவர் தலைமை தாங்கலாம். சிங்களபௌத்த பெருந்தேசிய வாதத்தின் கூட்டு உளவியலானது அட்டகாசமான யுத்த வெற்றிவாதத்துக்கு தலைமை தாங்கும் தலைவர்களைத்தான் தெரிவு செய்தது. ஆனால் யுத்த வெற்றி நாயகர்கள் நாட்டின் கருவூலத்தைத் திருடியதால் வந்த விளைவினால் ரணிலுக்கு லொத்தர் விழுந்தது. இது அவருடைய வாழ்வின் கடைசி ஓவர். இந்த ஓவரிலாவது அவர் தன்னை நிலைநிறுத்த வேண்டும்.

அவருடைய முதலாவது பலம் புத்திசாலித்தனம். இரண்டாவது பலம் அவருக்கு மேற்கு நாடுகளின் மத்தியில் உள்ள அங்கீகாரம். இந்த இரண்டுமே தமிழ் மக்களின் நோக்குநிலையில் இருந்து பார்த்தால் பாதகமானவை. அவர் புத்திசாலித்தனமாக தமிழ் அரசியலைக் கையாள்வார். புத்திசாலித்தனமாக மேற்கத்திய அரங்கில் தமிழ் லொபியைக் கையாளுவார்.

இதை எதிர்கொள்ள தமிழ் மக்கள் நாட்டுக்குள்ளேயும் வெளியேயும் என்ன செய்ய வேண்டும்? தமிழ் மக்களும் தந்திரம் செய்ய வேண்டும். தனது புத்திசாலித்தனத்தையும் சூழ்ச்சிகளையும் தன்னுடைய பலமாகக் கருதும் ஒரு தலைவருக்கு அதே மொழியில் தமிழ்மக்கள் பதில் கூற வேண்டும்.

சிங்கள மக்களைப் போலவே, தமிழ் மக்களும் பேரரசுகளின் முத்தரப்பு இழுவிசைகளுக்குள் சிக்குண்டிருக்கும் சிறிய மக்கள் கூட்டம் ஆவர். சிங்கள மக்களைப் போலன்றி அரசற்ற ஓரினம். எனவே தமிழ்மக்கள்தான் அதிகம் தந்திரம் செய்ய வேண்டும்.

மு.திருநாவுக்கரசு, பேராசிரியர் சிவத்தம்பி போன்றவர்கள் கூறுவார்கள், எதிரி தான் தமிழ்த் தேசியத்தின் பலம் என்று. அதாவது அடக்குமுறைதான் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுகிறது என்ற பொருளில்.

அதாவது, வெளிப்படையான இனவாதி தென்னிலங்கையில் ஆட்சிக்கு வரும்பொழுது அது தமிழ் மக்களை பலப்படுத்தும் என்றும், லிபரல் முகமூடி அணிந்த இனவாதி ஆட்சிக்கு வரும்பொழுது அது அனைத்துலக அளவில் தமிழ் மக்களுடைய நியாயத்தை பலவீனப்படுத்தும் என்றும் தமிழ் மக்களில் பெரும்பகுதியினர் நம்புகிறார்கள்.

ஆனால் இங்கே பிரச்சனை என்னவென்றால் வெளிப்படையான இனவாதியோ அல்லது மனித முகமூடி அணிந்த இனவாதியோ யாராக இருந்தாலும் தமிழ் மக்கள் செயல்பட வேண்டும். தமிழ் மக்கள் போராட வேண்டும். தமிழ்மக்கள் செயல்படாதவிடத்து தென்னிலங்கையில் யார் ஆட்சிக்கு வந்தாலும் எதுவும் நடக்கப் போவதில்லை என்பதைத்தான் கடந்த 13ஆண்டுகள் நிரூபித்திருக்கின்றன.

இப்பொழுது மனித முகமூடி அணிந்த சிங்களபௌத்த பெருந்தேசிய வாதியான ரணில் ஆட்சிக்கு வந்திருக்கிறார். அவர் மனித முகமூடி அணிந்திராத வெளிப்படையான இனவாதக் கட்சியான தாமரை மொட்டு கட்சியின் ஆதரவில் தங்கியிருக்கும் ஒரு ஜனாதிபதி.

பொருளாதார நெருக்கடிகளின் விளைவுகளின் விளைவு அவர். பொருளாதார நெருக்கடியின் விளைவாக ஏற்பட்ட மக்கள் எழுச்சிகளின் - அரகலயவின் - விளைவாகத்தான் அவருக்கு இந்த பதவி கிடைத்தது. அரகலய அவரை எதிராக பார்க்கிறது. அவரை அகற்ற வேண்டும் என்று போராடுகிறது. எனவே பொருளாதார நெருக்கடியை தற்காலிகமாகவேனும் தணித்தால்தான் அரகலயவுக்கான காரணங்களை வலுவிழக்கச் செய்யலாம். இல்லையென்றால் அரகலய அவரையும் துரத்தப் பார்க்கும்.

அதே சமயம் உள்நாட்டில் மிகவும் பலவீனமான ரணில் விக்ரமசிங்கவை மேற்கு நாடுகள் எப்படியும் பாதுகாக்க முயற்சிக்கும். மேற்கு நாடுகளை பொறுத்தவரை கத்தியின்றி, ரத்தமின்றி, தேர்தலின்றி ஓர் ஆட்சி மாற்றம் நிகழ்ந்திருக்கிறது. இந்த மாற்றத்தை எப்படியாவது பலப்படுத்தத்தான் அவர்கள் பார்ப்பார்கள். எனவே ரணிலை தோற்றுப் போக விடமாட்டார்கள்.

இப்பொழுது நமக்கு தெளிவான ஒரு சித்திரம் கிடைக்கிறது. ரணிலை பாதுகாப்பதா அல்லது தமிழ் மக்களின் உரிமைகளை பாதுகாப்பதா என்ற கேள்வி வரும் பொழுது மேற்கு நாடுகள் இரண்டுக்கும் இடையில் ஒரு சமநிலையை கண்டுபிடிக்க முற்படும். இது ஏறக்குறைய 2015ல் இருந்து 2018 வரையிலும் காணப்பட்ட ஒரு நிலைமைதான். இது ஐநா மனித உரிமைகள் பேரவையிலும் எதிரொலிக்கும்.

எனவே ரணிலை எதிர் கொள்வதற்கு தமிழ்மக்கள் தயாராக வேண்டும். அவரை எதிர்கொள்வது என்பது தனிய அரகலயவோடு கைகோர்ப்பது மட்டும் அல்ல. அதற்குமப்பால் அவருடைய தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும் எதிர்கொள்வதற்கு தமிழ்மக்களும் அரசியலை அறிவுபூர்வமாக, விஞ்ஞானபூர்வமாக, கணிதமாக முன்னெடுக்க வேண்டும்.

ஒரு பெரிய இனத்தின் தலைவர், அரசுடைய இனத்தின் தலைவர், தந்திரசாலியாக இருக்கிறார் என்று சொன்னால், அரசற்ற சிறிய இனம் அதை-விட அதிகமாகத் தந்திரத்தைக் கைக்கொள்ள வேண்டும். எங்களுடைய பக்கம் நீதி இருக்கிறது என்பதற்காக உலகம் எங்களை நீதியாக நடத்தும் என்று எதிர்பார்ப்பது அப்பாவித்தனமானது. ஆபிரிக்கப் பழமொழியொன்று உண்டு "நீ நீதியாக இருப்பதனால் உலகம் உன்னிடம் நீதியாக நடந்து கொள்ளும் என்று எதிர்பார்க்காதே, அது, நீ சிங்கத்தைச் சாப்பிட மாட்டாய் என்பதற்காக சிங்கம் உன்னை சாப்பிடாது என்று நம்புவதைப் போன்றது" என்று.

ஆம். தமிழ்மக்கள் தமது பக்கம் நீதி இருக்கிறது என்று நம்பிக் கொண்டு வாழாயிருக்க முடியாது. அரசியலை ஆகக்கூடியபட்சம் அறிவுபூர்வமாக, விஞ்ஞானபூர்வமாக அணுக வேண்டும்.

நடந்து முடிந்த ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பு தமிழ் கட்சிகளின் இயலாமையை நிரூபித்திருக்கிறது. தமிழ்மக்கள் ஒரு தேசமாக இல்லை என்பதனை நிரூபித்த ஒரு வாக்கெடுப்பு அது. அதேசமயம் சிங்களக் கட்சிகள் அரசியல் எதிரிகளாக இருந்த போதிலும்கூட தேவை கருதிய, தந்திரோபாயக் கூட்டுக்களை ஏற்படுத்திக் கொள்ளமுடியும் என்பதனை நிரூபித்த ஒரு வாக்கெடுப்பு அது.

படித்த தமிழர்கள் சிங்கள மக்களை "மோடையா"க்கள் என்று கிண்டலாகக் குறிப்பிடுவதுண்டு. ஆனால் அது உண்மையல்ல, நடைமுறையும் அல்ல. தமிழ் மக்கள்தான் முட்டாள்தனமாக அரசியல் செய்து வருகிறார்கள். தமிழ் மக்களிடம் தேர்தல்மைய அரசியலும் அதற்குரிய நெளிவு சுழிவுகளோடு இல்லை. அதேசமயம் மக்கள் இயக்கமும் இல்லை.

இப்பொழுது ரணில் வந்து விட்டார். பொதுவாக அவருடைய ஆட்சிக் காலத்தில் ஜனநாயக வெளி அதிகரிப்பதுண்டு. 2015க்கும் 2018க்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் அப்படித்தான் நடந்தது. அக்காலகட்டத்தில்தான் தமிழ்மக்கள் பேரவை தோற்றம் பெற்றது. குறிப்பிட்டுச் செல்லக்கூடிய இரண்டு ஏழுக தமிழ்கள் இடம் பெற்றன. இப்பொழுதும் ரணில் விக்கிரமசிங்க ஜனநாயக வெளியை பெரிதாக்குவாராக இருந்தால், தமிழ்மக்கள் அதைக் கெட்டித்தனமாக கையாள வேண்டும். தாங்கள் செய்ய விரும்புவதை எதிரியை கொண்டு செய்விப்பது தான் மென் சக்தி அரசியல். எதிரி செய்ய நினைப்பதைத் தானே செய்வது அப்பாவி வெள்ளாடுகளின் அரசியல்.

ரணில் ஒரு தந்திரமான நரி என்றால் தமிழ் மக்கள் அதைவிட தந்திரமான நரிகளாக மாற வேண்டும். அப்பாவி வெள்ளாடுகளாக வெறுவாய் சப்பிக் கொண்டிருக்கக் கூடாது.


## இணுவில் திருவூர் ஒன்றியம்-கனடா
## அறிவித்தல்

வருடாந்த ஒன்றுகூடல் – 2022

கனடா வாழ் இணுவில் மக்களின் வருடாந்த ஒன்றுகூடல்

**காலம்: 07-08-2022 (ஞாயிற்றுக்கிழமை)**
**இடம்: மில்லீக்கன் பூங்கா -C பிரிவு**
(McCowan Road / Steels Ave East)
**ஸ்காபுரோ**
**நேரம்: காலை 11.00 மணி முதல்**

சகல வயதினருக்குமான களிப்பூட்டும் பல்வகை விளையாட்டுப் போட்டிகள் வழமைபோல இடம்பெறும்.
உண்டு களித்திடவும் எமது ஊர்உறவுகளைக் கண்டு களித்திடவும் குடும்பசகிதமாக வந்து இவ்வொன்றுகூடலைச் சிறப்பிக்குமாறு கனடா வாழ் இணுவில் மக்களை அன்போடு அழைக்கிறோம்.

**தொடர்புகளுக்கு:**
சாந்தி சர்வானந்தா: (416) 438-2463, (647) 200-2177
மு. கிருபாகரன்: (416) 430-0422, (416) 389-7399
ப. கஜஜெயன்: (416) 732-5898

# 'மாற்றத்தை விரும்பாத' சக்திகளின் தலைவன் ரணில்



- வி.தேவராஜ் -
மூத்த ஊடகவியலாளர்

*அடங்க மறுக்கும் ராஜபக்ஷக்கள்.

• ரணில் மக்களின் பாதைக்குத் திரும்ப வேண்டும்

தென்னிலங்கையின் "மாற்றத்தை" நோக்கிய பயணத்தை தடுத்து நிறுத்தும் சக்திகளின் தலைவனாக புதிய ஜனாதிபதியான ரணில் விக்ரமசிங்க தலைமையேற்றுள்ளார். வண்டியை ஓட்டிச் செல்ல வசதியாக நாடாளு மன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தனா பிரதம மந்திரியாக பதவிப் பிரமாணம் செய்துள்ளார்.

தென்னிலங்கை மக்களும் பௌத்த மத பீடங்களும் எதிர்பார்த்திருந்த சர்வ கட்சி அரசாங்கத்திற்குப் பதிலாக மீண்டும் ராஜபக்‘க்களின் பொது ஜன பெரமுன கட்சியின் தலைமையிலான அரசாங்கத்தையே ரணில் விக்ரம சிங்க தலைமையில் ராஜபக்ஷக்கள் அமைத்துள்ளனர். அந்தவகையில் ராஜபக்ஷக்கள் மீண்டும் வெற்றி பெற்றுள்ளனர்.

ஜனாதிபதி தெரிவில் பொது ஜன பெரமுன இரு முகாம்களாகப் பிரிந்து நிற்பது போன்றதொரு தோற்றப்பாட்டை ராஜபக்ஷக்கள் நாடாளுமன்றில் உருவாக்கினர் பொதுஜன பெரமுன கட்சியின் தவிசாளர் பேராசிரியர் பீரிஸ் ஜனாதிபதி வேட்பாளர் டலஸ் அழகபெருமாளை வழிமொழிந்தார். அதே கட்சியின் செயலாளர் ஜனாதிபதி வேட்பாளராக ரணில்விக்ரம சிங்கவின் பெயரை முன்மொழிந்தார். ஆனால் வாக்கெடுப்பின்போது பொதுஜன பெரமுன ஒரு "முகாமாக" நின்றே ரணில் விகரமசிங்கவுக்கு வாக்களித்து அவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்துள்ளனர். இது பற்றி மகிந்த ராஜபக்ஷவிடம் ஊடகவியலாளர்கள் வினவியபோது நாம் டலஸ் அழகப் பெருமாளை ஜனாதிபதி வேட்பாளராக முன் மொழிந்தும் அவரை வெற்றி பெற வைக்க முடியவில்லை என்று பதில் அளித்துள்ளார்.

பஸில் ராஜபக்ஷ இலங்கையில் இருப்பதானது ஜனாதிபதி தெரிவுக்கு பாதகமாக அமையலாம் என்பதால் அமெரிக்கா செல்லமுற்பட்ட அவரை முதலில் தடுத்த ரணில்விக்ரமசிங்க அமெரிக்கத் தூதுவருக்கூடாக கோரிக்கை விடுக்கப்பட்ட போது அதற்குச் செவி சாய்த்து பஸில் ராஜபக்ஷவை நாட்டைவிட்டு வெளியேற அனுமதித்தார். ஜனாதிபதி தெரிவுக்கான வாக்கெடுப்பின் போது பஸில் ராஜபக்ஷவினால் பாதிப்பு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகவே இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கும் அப்பால் சுதந்திரக் கட்சி மற்றும் பொதுஜன பெரமுன கூட்டமைப்பில் இணைந்து தற்போது நாடாளு மன்றில் சுதந்திர அணிகளாக செயற்படும் கட்சிகளும் மக்களுக்குப் பயந்த நிலையில் டலஸ் அழகபெருமாவை ஆதரிப்பதாகக் கூறியவர்கள் வாக்களிப்பில் அவர்களது உறுப்பினர்கள் திசை மாறிப்போய்விட்டதாக ஒத்துக் கொண்டுள்ளனர்.

இவர்கள் மாத்திரமல்ல தமிழ் பேசும் நாளுமன்ற உறுப்பினர்களும் குறிப்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பைச் சார்ந்தவர்களும் சோரம் போய் உள்ளனர்.

முஸ்லிம் காங்கிரஸ் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என வரிசையாக ஜனாதிபதி வேட்பாளர் டலஸ் அழகப் பெருமா அவர்களுக்கு ஆதரவாக வாக்களிப்பதாக வெளிப்படையாக அறிவித்திருந்த போதும் அந்தக் கட்சிகள் சார்ந்த நாடாளு மன்ற உறுப்பினர்கள் மாறி வாக்களித்துள்ளதாக கூறப்படுகின்றது.

கட்சிகளின் அறிவிப்பம் அதற்கு எதிர்மாறான வாக்களிப்பும் மாற்றத்தை விரும்பும் மக்களுடன் இந்தக் கட்சிகள் பயணிக்கத் தயாராக இல்லை என்பதையே காட்டி நிற்கின்றன.

ஜனாதிபதி தேர்தலில் 20 கோடி அளவில் பணம் பரிமாரப்பட்டதாக செய்திகள் பேசுகின்றன.

மொத்தத்தில் இவை அனைத்தும் திட்டமிடப்பட்டவைகள்.

அரசியலில் மாற்றத்தை விரும்பாத சக்திகள் தென்னிலங்கை அரசியலில் மாத்திரமல்ல தமிழ் பேசும் அரசியலிலும் உள்ளது என்பதை ஜனாதிபதி தேர்தலில் நாடாளு மன்ற அணியினரின் செயற்பாடுகள் காட்டி நிற்கின்றன.

தென்னிலங்கை மக்களும் இளைஞர் யுவதிகளும் எதிர்பார்த்து நிற்கும் மாற்றம் என்பது கடந்த 74 வருடமாக அரசியல்வாதிகள் கட்டிக்காத்து வருகின்ற அரசியல் கட்டமைப்பையே தகர்த்துவிடுவதற்கச் சமன். இந்தக் கட்டமைப்பால் இன்றைய அரசியயல்வாதிகளே கூடுதலாக நன்மை பெற்ற சலுகை பெற்ற சமூகமாக மேலெழுந்துள்ளனர். குறிப்பாக ராஜபக்ஷக்களும் அவர்கள் சார்ந்த அணியினருமாகும். ஆரம்பத்தில் மாற்றத்தைக் கோரி நிற்போருடன் சமரசம் கண்டுவிடலாம் என்றே இந்தச் சக்திகள் எண்ணின. ஆனால் கட்டுமீறிப் போகவே இரும்புக் கரம் கொண்டு அடக்கக் கூடிய தமக்கான தலைவரைத் தேடிக் கொள்ள வேண்டிய கட்டா நிலைக்கு இந்தச் சக்திகள் தள்ளப்பட்டனர். இதன் விளைவே ராஜபக்ஷக்களுடன் கைகோர்த்துக் கொண்டு ரணில்விக்ரமசிங்கவை ஜனாதிபதியாக்கியுள்ளனர்.

69 இலட்சம் வாக்குகளைப் பெற்ற ஜனாதிபதியை நாட்டைவிட்டு வெளியேற வைத்த மக்கள் பிரதமரை பதவில் இருந்து இராஜினாமாச் செய்ய வைத்த மக்கள் மாற்றத்தை எதிர்பார்த்து காத்திருந்த வேளை கடந்த பொதுத் தேர்தலில் வெறும் 103 வாக்குகள் பெற்று தேசியப்பட்டியல் உறுப்பினராக நாடாளுமன்றம் நுழைந்தவரை அரசியலமைப்பு ஓட்டைகளை வைத்து ராஜபக்ஷக்கள் ஜனாதிபதியாக்கியுள்ள அதிசயம் இலங்கையில் நடைபெற்றுள்ளது.

நாடாளு மன்றத்தில் மக்கள் வழங்கிய எண்ணிக்கையின் பலத்தை வைத்தக் கொண்டு ராஜபக்ஷக்கள் இன்னும் என்னென்ன அதிசயங்களை நிகழ்த்தப் போகின்றனர் என்று தெரியவில்லை.

மொத்தத்தில் "மக்கள் வழங்கிய ஆணையை" வைத்துக் கொண்டு அடங்க மறுக்கும் ராஜபக்ஷக்கள் மறுபுறம் வீழ்ந்து கிடக்கும் நாடும் தாம் வழங்கிய மக்கள் ஆணையை மீளப் பெற முடியாது கைகளைப் பிசைந்து கொண்டு நிற்கும் மக்களுமாகவே இலங்கைத் தீவு இன்றுள்ளது.

ராஜபக்ஷக்களின் அரணாக முன் நிறுத்தப்பட்டுள்ள ரணில் விக்ரமசிங்க இலங்கையில் ஒரு அரசியல் மாற்றத்தை விரும்பாத இன்றைய தென்னிலங்கையின் அரசியல் சக்திகளின் இரட்சகராக மேல் எழுந்துள்ளார்.

எனவேதான் "மாற்றத்தை விரும்பாத" அனைத்து சக்திகளின் சார்பாக ஆர்ப்பாட்டங்களை இரும்புக் கரம் கொண்டு அடக்க முற்பட்டுவிட்டார் மாற்றறத்தை விரும்பாதவர்களின் ஜனாதிபதியான ரணில் விக்ரமசிங்க. வி‘ப் பரீட்சையில் இறங்கியுள்ளார்.

தமிழர் போராட்டத்திற்கு இதே அரசியல் சக்திகள் எவ்வாறு பயங்கரவாத முத்திரை குத்தி தோற்கடித்தனரோ அதேபோல் தற்போது காலிமுகத் திடல் போராட்டத்திற்கும் அதற்கு ஆதரவான தென்னிலங்கை மக்களினதும் போராட்டத்திற்கும் பாசிசவாத முத்திரையை குத்தியுள்ளனர்.

104 நாட்களை எட்டிய நிலையில் காலிமுகத் திடல் ஆர்ப்பாட்டத்திற்கு தற்காலிக விடை கொடுக்க முனவந்து அதற்கான ஆயத்தப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது 21 ஆம் திகதி வியாழக்கிழமை நடுநிசி தாண்டிய வேளையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது மிலேச்சத்தனமாக படைத் தரப்பைக் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தாக்கதல்களை மேற்கொண்டுள்ளார். இந்தத் தாக்குதலின் மூலம் ஆர்ப்பாட்டம் செய்ய நினைப்பவர்களுக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் குறிப்பாக ஒட்டு மொத்த தென்னிலங்கை மக்களுக்கும் ஆர்ப்பாட்டம் செய்யமுற்படின் இரும்புக் கரம் கொண்டு அடக்க தயங்கப் போவதில்லை என்ற செய்தியை ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க மிகத் தெளிவாக உணர்த்தியுள்ளார்.

அதாவது தென்னிலங்கை அரசியலில் 'U TURN' மாற்றத்தை நோக்கிப் பயணிக்கும் மக்களையும் இளைஞர் யுவதிகளையும் தடுத்தி நிறுத்தி வேண்டுமானால் இன்றைய ஆளும் வர்க்கத்தைக் காப்பாற்றுவதுடன் அதற்குப் பங்கம் ஏற்படாதவகையிலான சில சமரசங்களுடன் இலங்கை அரசியலைப் பயணிக்க வைப்பதை நோக்காகக் கொண்ட பயணமாகவே ரணில்விக்ரமசிங்கவின் அரசியல் பயணம் அமைய உள்ளது.

45 வருடகால நாடாளுமன்ற அரசியல் அனுபவமிக்க தலைவர் மக்களின் "நாடியை" பிடித்து நாட்டுக்காக அரசியல் நடத்த வேண்டியவர் சிங்கப்பூரின் சிற்பியான லீ குவான் யூ போன்று இலங்கையை உருவாக்கி எதிர்கால சந்ததிக்கு கையளிக்க வேண்டிய தலைவர் தடம் மாறி பயணிப்பதென்பது என்பது நாட்டுக்கு மாத்திரமல்ல அவர் கடந்து வந்த அரசியல் பாதைக்கே களங்கமாக அமைந்துவிடும்.

ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க தனது பாதையை மாற்றிக் கொள்ள காலம் கடந்துவிடவில்லை. அவர் ராஜபக்ஷக்களின் அணியில் இருந்து மக்கள் அணிக்குத் திரும்பினாலே போதும்.

Email : vathevaraj@gmail.com

## வீணாவின் கவிக்கணை

விளைநிலம் எல்லாம்
கட்டிடங்களாக மாற,
ஆறு, குளம், கிணறுகள்
எல்லாம் வற்றிப்போக,
விவசாயிகள் எல்லாம்
வேறு வேலை தேடி
ஊருராய்ப்போக,
சொகுசாக வாழும் மக்கள்
ஒரு நாள் அரிசியை தேட,
அதுவே பிள்ளைகளின்
பாடப்புத்தகத்தில்
வரலாறாய் மாற,
அரிசி என்ற ஓர் தானியம்
விளைந்ததாகவும்,
பண்டைய தமிழர் உணவு
அதுவென்றும், அதை
விளைவிக்க உழவர்
என்றொரு இனம்
இருந்ததென்றும்,
அவர்களை ஆதரிக்க
மறந்ததால் உழவுத்தொழில்
இல்லாமல் போனதென்றும்,
வாசிக்கும் நிலைவரும் முன்,
யோசித்து செயல்படுவீர்,
அது தவறிவிட்டால்
உலகமே பஞ்சத்தில் வாடி
இடுகாடு ஆகிவிடும்.

## ஒன்று கூடல் (Picnic)

கோண்டாவில் கிழக்கு இராமகிருஷ்ண மகா வித்தியாலயம் குமரன் விளையாட்டுக்கழகம் (கனடா கிளை) நடாத்தும் ஒன்றுகூடல் (Picnic) எதிர்வரும் ஓகஸ்ட் ஆறாம் திகதி 2022ஆம் ஆண்டு சனிக்கிழமை Neilson Park இல் காலை 10 மணி முதல் மாலை 7 மணிவரை நடைபெற உள்ளதால் சகல கோண்டாவில் கிழக்கு மக்களும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

தலைவர் - உமாகாந்
பொருளாளர் - பால கர்ணன் செயலாளர் - உதயன் (சுமள)
CANADA KUMARAN SPORTS CLUB (647) 928-7725

# யாழில் இருந்து கடல்வழியாக தமிழகத்திற்குள் ஊடுருவிய போலந்து நாட்டவர்

**- யாழ்ப்பாணத்தில் இருந்து நடராசா லோகதயாளன்**




**மொ**ழியே தெரியாதவர்கூட ஊடுருவும் நிலையிலா இந்தியாவின் கரையோரப் பாதுகாப்பு உள்ளது என்ற கேள்வி மீண்டும் ஒரு முறை எழுந்துள்ளது.

இலங்கையில் இருந்து வெளி நாட்டவர் தமிழ்நாட்டின் கோடியக்கரை ஊடாக இந்தியாவிற்குள் ஊடுருவியதாக இடம்பெற்ற தேடுதலில் போலந்து நாட்டவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தமிழ்தாட்டின் கோடியக்கரையில் ஓர் காற்றுப் படகு கடந்த ஞாயிறு (24) ஆம் திகதி கண்டு பிடிக்கப்பட்டதனையடுத்து நாகை மாவட்டம் முழுமையாக தீவிர தேடுதல் இடம்பெற்றுள்ளது.

இதேநேரம் இந்தப் படகில் பயணித்தவர் தமிழ்நாட்டின் கரையை இலாவகமாக அடைந்து தரையிறங்கி இரவு முழுவதும் காட்டில் மறைந்திருந்து பகல்வேளை சென்னைக்கு வழிகேட்டபோதே கிராம மக்கள் அவரைப் பிடித்து தமிழக பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர். அவரிடம் மேற்கொண்ட விசாரணையில் குறித்த பலூன் படகின் மூலம் தமிழ் நாட்டிற்குள் வந்தது தான்தான் என்பதனை ஏற்றுக்கொண்டுள்ளார்.

போலந்தில் இருந்து 2019ஆம் ஆண்டு இலங்கை வந்தபோது வெலிமடைப் பகுதியில் மதுபான சாலையில் ஏற்பட்ட தகராறில் ஒருவரைத் தாக்கியதனால் ஏற்பட்ட வழக்கு நடவடிக்கைக்காக கடவுச் சீட்டை நீதிமன்றில் ஒப்படைத்துள்ளதாகவும் அதனாலேயே தமிழ் நாட்டிற்கு தப்பி வந்த்ததாகவும் கூறியுள்ளதோடு இலங்கையின் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து புறப்பட்டே இந்தியாவை அடைந்ததாகவும் அவர் இந்தியப் பொலிசாரிடம் தெரிவித்துள்ளார்.

இவர் மீது தற்போது இலங்கையில் 3 வழக்குகள் நிலுவையில்ல உள்ளதாக தற்போது கூறப்படுகின்றது. இருப்பினும் 2019இல் இலங்கைக்கு ஏன் வந்தார் என்பது தொடர்பில் கண்டறியப்படவில்லை.

தற்போது தமிழக காவல்துறையால் தடுத்து வைக்கப்பட்டுள்ள அந்த போலந்து நாட்டவரின் பெயர் வாடிஸ்லாவ் பிரான்சிஸ்கிச் என்றும் அவர் 39 வயதானவர் என்றும் அறியப்படுகிறது. இலங்கையில் கைதுச் செய்யப்பட்டு பிணையில் இருந்த அவர் நிதி நெருக்கடி மற்றும் இதர காரணங்களுக்காக தமது நாட்டிற்கு திரும்பிச் செல்லும் நோக்கில் இந்தியா சென்றதாகவும் அங்கிருந்து போலந்து செல்ல திட்டமிட்டிருந்ததாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

எனினும், தனியொரு நபராக அவர் மட்டுமே இந்தியாவிற்கு வந்தாரா அல்லது உடன் வேறு யாராவது இதில் ஈடுபட்டிருந்தார்களா என்கிற விசாரணை தமிழக பொலிசாரால் முடுக்கிவிடப்பட்டுள்ளது. இந்தியாவின் மேற்கு கடற்கரைப் பகுதி தொடங்கி இலங்கையின் கடல்பரப்பு வரை அண்மைக் காலத்தில் போதைப் பொருட்கள் கடத்தலுக்கான ஒரு முக்கியப் பாதையாக இருந்து வருவது சர்வதேசளவில் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. தொடர்ந்தும் இலங்கை வழியாகவோ அல்லது இலங்கையர்கள் துணையுடனோ தொடர்ச்சியாக இந்திய - இலங்கை கடற்பரப்பில் கோடிக்கணக்கன ரூபாய்கள் மதிப்புள்ள போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

அவ்வகையில், இப்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்த போலந்து நாட்டவருக்கும் போதைப் பொருட்கள் கடத்தல் தொழிலுக்கும் தொடர்பு இருக்கிறதா என்றும் புலனாய்வு செய்யப்படுகிறது.

அதேவேளை இலங்கையில் இருந்து மர்மப்படகு ஒன்று தமிழ்நாட்டிற்குள் வருகின்றது என்பதனை இந்தியாவின் தமிழக உளவுத் துறையினர் 22 ஆம் திகதி நள்ளிரவே அறிந்து விட்டதாகவே கூறப்படுகின்றது. அதனால் கடலிலே மேலதிக படைகளை இறக்கி தமது பிரசன்னத்தைக் காட்ட விரும்பாத அதிகாரிகள் பொலிசாரை மிகுந்த விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தி அவர்கள் அவ்வாறு உசார் நிலையிலேயே வைக்கப்பட்டிருந்தனர். இருப்பினும் ஒரு விடயத்தில் கோட்டை விட்டனர் என்று இப்போது கவலையும் கண்டனமும் எழுந்துள்ளது. அதாவது ராடர் நிலையம் உசார்படுத்தப்பட்டதனால் அவர்களின் தகவல் உடன் கிடைக்கும் என எதிர்பார்த்தனர்.

எனினும் 23 ஆம் திகதி காலை ராடர் நிலையத் தகவல் கிட்டாத போதும் கிடைத்த தகவலில் ஏதோ ஒன்று உள்ளது என உணர்ந்து தேடுதல் கைவிடப்படவில்லை. 24 ஆம் திகதியாகியும் ஏதும் அகப்படவில்லை என்பதனால் கிடைத்த தகவல் தவறான தகவலோ என சிந்திப்பதற்கிடையில் இந்த மர்மப் படகு கரை ஒதுங்கியுள்ள தகவல் கிடைத்ததும் பொலிசார் உசார் அடைந்தனர். இத்தனை பிரிவினரும் விழிப்பாக இருந்தும் ஓர் படகு எப்படி கரை சேர்ந்தது என ஒருபுறம் விசாரணை இடம்பெற வந்திறங்கியது யார், எந்த நாட்டவர் என தீவிர விசாரணையில் ஈடுபட்டனர். இதன்போதே படகில் இருந்த பொருட்களை ஆய்விற்கு உட்படுத்திய சமயம் இவை கண்டிப்பாக இலங்கை மீனவர்களினதோ அல்லது ஈழ அகதிகளினதாகவோ இருக்க வாய்ப்பே இல்லை என்ற உடனடி முடிவிற்கு சென்றதனால் சென்னைவரை தகவல் பறந்தது. அங்கிருந்து உத்தரவுகள் கடுமையாகவே பிறப்பிக்கப்பட்டன. இதனால் இராமேஸ்வரம், நாகை, தூத்துக்குடி கரைநோரங்களில் பணியாற்றும் சகல பிரிவு பொலிசாரும் பம்பரமாக சுழன்றனர்.

இந்த சமயமே சந்தேகத்திற்கு இடமான வெளிநாட்டவர் ஒருவர் சென்னைக்கு செல்ல வழி கேட்டபோது மக்களால் மடக்கப்பட்டுள்ளார் என்ற தகவல் பொலிசாருக்கு சென்றபோது இந்தப் படகில் வந்தவரோ என்று எண்ணி விரைந்த பொலிசாரின் நம்பிக்கை வீண்போகவில்லை.

இவ்வாறு அகப்பட்டவனிடம் சகல பிரிவு அதிகாரிகளுமே. துருவியபோதும் அவரும்ம் மசிந்ததாகவும் தெரிவில்லை. இதே நேரம் அகப்பட்டவர் இந்தியாவின் நிரந்தரமான ஒரு பகைமை நாட்டவரும் அல்ல என்ற காரணத்தினால் சந்தேகத்தின் அடிப்படையில் மட்டும் வழக்கை முன்னெடுக்க தமிழ்நாடு பொலிசார் விரும்பவில்லை என்று கூறப்படுகிறது. இதேநேரம் இலங்கையில் 3 வழக்கு இருக்கும் ஓர் குற்றவாளி என்பதனால் உண்மையை உரைக்கின்றார் எனவும் நம்பவில்லை. அவரை மிகவும் சந்தேகக் கண்ணோடு அவதானித்த தமிழக பொலிசார் அவரை நீதிமன்றில் நிறித்தியதை அடுத்து தற்போது 8 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளர்.

இதேநேரம் தற்போது தமிழ்நாட்டிற்குள் போலந்து நாட்டவர் ஊடுருவியது போன்று 4 ஆண்டுகளிற்கு முன்பும் துருக்கியைச் சேர்ந்த இருவர் ஊடுருவினர்.

அடுத்த சில தினங்களில் இந்தியப் பிரதமர் தமிழ்நாட்டிற்கு விஜயம் செய்யவுள்ள நிலையில் இந்த ஊடுருவல் ஏதும் பின்னணி இருக்குமா என்பது ஒரு பக்கமும் இருக்க, இந்திய இலங்கை கடற்பரப்பின் ஊடாக வெளிநாட்டினர் இந்தியாவிற்குள் நுழையக் கூடிய வகையில் இந்தியாவின் கடலோரப் பாதுகாப்பு பலவீனமாக உள்ளதா என்கிற கேள்விகள் இப்போது எழுந்துள்ளன.



# வடக்கு ஆளுநருக்கு எதிராக ஜனாதிபதியிடம் முறையீடு

**- எமது யாழ்ப்பாணச் செய்தியாளர்**



**வ**டக்கு மாகாணத்தின் இரு மூத்த செயலாளர்களை மாகாணத்திற்கு வேண்டாம் என ஆளுநர் ஜீவன் தியாகராஜா கடிதம் வழங்கியதைக் கண்டுத்து ஜனாதிபதியின் செயலாளருக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்டோர் அவசர கடிதம் அனுப்பி வைத்துள்ளனர்.

இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த வடக்கு மாகாணத்தின் மூத்த செயலாளர்களான இ.இளங்கோவன் மற்றும் செந்தில்நந்தனன் ஆகியோருடன் விவசாயப் பணிப்பாளர் சிவகுமார் ஆகிய மூவரையும் ஜீவன் தியாகராஜா தூக்கியெறிந்தமை ஓர் தவறான முன்னுதாரணம் எனவும் குறிப்பாக மாகாணத்தில் உள்ள மூத்த அமைச்சரான தனது ஒப்புதல்கூடப் பெற்றுக்கொள்ளாது நிர்வாக நடைமுறைக்கு முரணாக மேற்கொண்ட இந்த விடுவிப்பு உத்தரவுகளை உடன் இரத்துச் செய்யப்பட வேண்டும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியின் செயலாளருக்கு அவசர கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

"ஒரேதடவையில் அதிக அதிகாரிகளை மாகாணத்திற்கு வெளியே அனுப்புவது மாகாணத்தின் பணியை பாதிக்கும் செயல் என்பதோடு ஏனைய அதிகாரிகளையும் மனதளவில் பாதிக்கும் செயலாகவும் அமையும் அத்தோடு நாடளாவிய சேவை உத்தியோகத்தர்களை இடமாற்றம், விடுவிப்பு என்பன தொடர்பில் ஆளுநர் பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு பரிந்துரைக்க மட்டுமே முடியுமே அன்றி நேரடியாக இடமாற்ற உத்தரவு கடிதம் வழங்க முடியாது" என்பதனையும் கருத்தில்கொள்ளுமாறு தொலைபேசியிலும், எழுத்திலும் கூறியுள்ளார்.

இவற்றை உடன் கவனத்தில் எடுப்பதாக ஜனாதிபதியின் செயலாளர் தொலைபேசி ஊடாக பதிலளித்துள்ளதனால் ஆளுநர் ஜீவன் தியாகராஜாவா நிர்வாக நடைமுறையா என்ற போட்டியின் உச்சம் ஆளும் தரப்பில் இடம்பெறுவதனால் இதன் முடிவு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.


இதேநேரம் மேலும் இரு மூத்த அரச அதிகாரிகள் குறித்த விடயத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்கும் கொண்டு சென்று ஆளுநர் ஜீவன் தியாகராயாவின் உத்தரவை இரத்து செய்யுமாறு பலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் நீண்டகாலமாக பணியாற்றும் அந்த அதிகாரிகளுக்கு வடக்கு மாகாணத்தில் வழங்கப்பட்ட நியமனங்களை ஆளுநர் என்ற வகையில் ஜீவன் தியாகராஜா 2022-07-26 ஆம் திகதிய கடிதம் முலம் 2022-07-27 அன்று உத்தியோகத்தர்களின் வீடுகளிற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இவ்வாறு அனுப்பிய கடிதத்தில் வியாழன் (28) முதல் மாகாணத்தில் இருந்து விடுவிக்கப்படுவதாக ஆளுநரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண கல்வி மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர்களாக இருந்த இருவரும் இந்த ஆண்டின் ஜனவரி மாதமே தற்போதைய அமைச்சுகளிற்கு இடமாற்றப்பட்ட நிலையில் மீண்டும் மாகாணத்திற்கு வெளியில் தூக்கி எறியப்படுவதனால் ஏதும் பழிவாங்கும் செயலாக இருக்கும் என்றே கருதப்படுகின்றது உள்ளூர் மக்களும் இதர அதிகாரிகளும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

குறித்த விடயம் தறபோது ஜனாதிபதியின் செயலாளருக்கு அமைச்சர் மற்றும் மூத்த அதிகாரிகள் ஊடாக சென்றிருப்பதனால் தீர்வு கிட்டாதுவிடின் தொழிற்சங்கப் போராட்டம் வரையில் கொண்டு செல்லப்படும் என பெயர் கூற விரும்பாத மூத்த நிர்வாக சேவை அதிகாரி ஒருவர் உதயனிடம் குறிப்பிட்டார்.


0441

Jeevan Thiagarajah

Governor, Northern Province

RE: Revocation of Appointment as Secretary to the Ministry of Finance & Planning, Law & Order, Lands, Electricity, Housing & Construction, Tourism, Local Government, Provincial Administration, Rural Development, Road Development, Motor Traffic and Transport in the Northern Provincial Council


SINHA
FROM LION BREWERY SRI LANKA
FROM LION BREWERY SRI LANKA
254, Colombo Road, Biyagama, Sri Lanka
SINHA
LAGER
IMPORTED
BEER- BIERE
alc./vol
330 ml
es / Bouteilles
SINHA
LAGER
IMPORTED
BEER- BIERE
4.8% alc./vol
6 x 330 ml
Bottles / Bouteilles
SINHA
-1881-
SINHA
LAGER
IMPORTED
AVAILABLE AT SELECTED BEER STORES
For further info go to www.thebeerstore.ca
or call 416-443-2020


True Sound Live
வழங்கும்
இசைப்புயல்
AR RAHMAN
Live in Toronto
All Access Tour
August 28
Sunday 7pm
Scotiabank Arena
Toronto, Canada
www.ticketmaster.ca
FM 88.9
416-441-4100
east
FM 102.7
ATN
உதயன்

SULLIVAN AUTO GROUP's

Tamil Fest
தமிழர் தெரு விழா
2022

POWERED BY iConnect

ஆசியாவுக்கு வெளியே நடைபெறும் மாபெரும் தமிழர் தெருவிழா !




ஒகஸ்ற் 27 & 28
August 27 & 28

Markham Road
(Between McNicoll Ave. & Passmore Ave.)

தமிழர் பெருமை சொல்லும் வகையில் கலை நிகழ்வுகள், உணவு வகைகள், மற்றும் பல பொழுது போக்குகள்!

வர்த்தக அங்காடிகள் அமைக்க விரும்புபவர்கள் தாமதமின்றிக் கனடிய தமிழர் பேரவையுடன் தொடர்பு கொள்ளவும்: (416) 434-7658 / (647) 676-3965.

TITLE SPONSOR
SULLIVAN AUTO GROUP
BRIMELL TOYOTA · Formula Honda · MORNINGSIDE NISSAN

POWERED BY
iConnect Mortgages · Dominion Lending Centres

HOSTED BY
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

ZONE SPONSORS
Computek College · HomeLife Higher Standards (HomeLife Future Realty Inc.) · Nava Wilson LLP Barristers and Solicitors · Pradon Silks · TD · Vibrant Hospitality Group · Wow! Wing House

COMMUNITY PARTNER
Federation of Tamil Sangams of North America (Since 1988)

SUPPORTED BY
Toronto · Canada

MEDIA SPONSORS
ATN Asian Television Network · East FM 102.7 · StarMetroLand Media

TAMILFEST.CA | TAMILFEST@CANADIANTAMILCONGRESS.CA | 416.240.0078 |
@tamilfest

உங்களை வரவேற்க
நாங்கள் ஆவலோடு இருக்கிறோம்!

வந்து விட்டது!!

1%
குறைந்த வட்டி விகிதம்
தங்கத்தின் மீது கடன்
Lowest Interest in GTA

எங்களது புதிய கிளை
ஜூலை 4 முதல் உதயம்!

Pawn Bank Inc.
Your Satisfaction is Our Success

உடனடி நகைக்கடன்

இந்த சலுகை: (FINCH & MCCOWAN)
1571 SANDHURST CIRCLE #159D,
SCARBOROUGH - M1V1V2.
மட்டும் பொருந்தும்

தொடர்புக்கு: 416-754-7198
முன்னணி நிதி நிறுவனங்களுடன்
இணைந்து பணியாற்றுகிறோம்

KANAGAAMBIKAI PAWN BROKERS: (BRIMLEY & EGLINTON) 2613 EGLINTON AVE E, TORONTO - M1K2S2. CALL US: 416-269-7198

# புதிய சனாதிபதி கோட்டாவிடம் பாடம் கற்க வேண்டும்!

-ஒஸ்டின் பெர்னாண்டோ

ஜே.ஆர் ஜெயவர்த்தனா முதல் கோட்டாபய இராசபக்ச வரை இலங்கையின் அனைத்து நிறைவேற்று சனாதிபதிகளுக்கும் ஏதோ ஒரு கட்டத்தில் நான் பணியாற்றியுள்ளேன் என்பதில் பெருமையடைகிறேன். அப்படிச் செய்த ஒரே பொது 'அதிகாரி' நான்தான். மகிந்த இராசபக்சவுடன் அது இரண்டாம்பட்சம், ஆனால் நான் இரணில் விக்கிரமசிங்கவுடன் சேர்ந்து அவரது 'உயிர்க்காப்பான்'. **(See 'My Belly is White' (2008) pages 140 to 142).** எனவே, நான் ஒரு கலவையான அனுபவங்களைக் குவித்துள்ளேன் என உரிமை கோருகிறேன்.

நான் என்னை ஒரு பண்டிதர் என எண்ணவில்லை. அடுத்த சனாதிபதியை எச்சரிப்பதற்காக கோட்டாபய இராசபக்ச செய்த சில (பலவற்றில்) தவறுகளை மட்டுமே நான் குறிப்பிட விரும்புகிறேன். அவற்றில் இரண்டு தவறுகளை அவரே ஒத்துக் கொண்டுள்ளார். புதிய சனாதிபதி அவற்றை மீண்டும் செய்தால், அவர் ஒரு இராணுவ முகாமில் அடைக்கப்படுவார் அல்லது ஞானக்காவின் கோவில் அல்லது கதிர்காமம் அல்லது திருப்பதி, வத்திக்கான் அல்லது மெக்காவில் பிரார்த்தனை செய்ய வேண்டிவரும்.

ஒரு அரசியல் வம்சத்தைத் தயக்கமின்றி அவர்கள் செய்த தவறுகளுக்காக குப்பைத் தொட்டியில் தள்ளக்கூடிய, உணர்வுள்ள, விவேகமுள்ள வாக்காளர்கள் மற்றும் சமூகமாக நாம் இருப்பதால், அடுத்த சனாதிபதியை எச்சரிக்க வேண்டிய தேவை எழுகிறது. 2019 சனாதிபதித் தேர்தலில் 6.9 மில்லியன் வாக்குகளைப் பெற்று, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று, அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம்




அவர் ஒரு வகையில் மன்னரானார். வருங்கால சனாதிபதிகளுக்கு இது ஒரு எச்சரிக்கையாக அமைய வேண்டும்.

பிரபலத்தை மிகைப்படுத்துதல்

கோட்டாபயவின் பரிதாபகரமான தோல்விகளை அனைவரும் ஒத்துக்கொள்வார்கள். அவை அவரிடம் பாரிய ஆணை மற்றும் வீரம் இருந்தபோதிலும் மக்கள் சக்தி இயக்கத்தால் அவர் பதவியிலிருந்து வெளியேற வேண்டி வந்தது. அவரது புகழ் அவருக்கு அசாதாரண தைரியம், நம்பிக்கை மற்றும் 'நான் அரசபரம்பரையைச் சேர்ந்தவன்' என்ற எண்ணத்தை உருவாக்கியது. ஆனால் அவர் பகுத்தறிவு, சனநாயகப் பிணைப்புகள், சமத்துவ அக்கறைகள், பொதுமக்களோடான ஊடாடல் போன்றவற்றில் ஈடுபடவில்லை. மேலும் ஆணவம், இராணுவ நண்பர்கள் மற்றும் கூட்டாளிகளை அவர்களின் தகுதிகளைப் பொருட்படுத்தாமல் அதிகாரப் பதவிகளுக்கு நியமித்தல் மற்றும் கருத்து வேறுபாடுகள்பற்றிய சகிப்புத்தன்மை அவரிடம் இருக்கவில்லை. பிரபல்யம் நிரந்தரமானது அல்ல என்பதை கோட்டாபய எண்பித்துள்ளார். இந்த உண்மையை புதிய சனாதிபதி கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து கோட்டாபயவின் புகழ் அதிகரித்தது. பவுத்த மதம் மட்டுமல்ல, கோவிட்-19 நோயினால் இறந்த முஸ்லிம்களை அடக்கம் செய்வது போன்ற விடயங்களிலும் கோட்டாபய மீது உரத்துக் கூக்கிரல் இடுகிற பவுத்த மதகுருமார்கள் செல்வாக்குச் செலுத்தினர். பல்கலைக்கழக வேந்தர் பதவி வழங்குதல், இரசாயன உரத்தடை, 'ஒரே நாடு - ஒரே சட்டம்' திட்டம் போன்றவற்றில் இருந்து பாடங்கள் கற்க வேண்டும்.

கோட்டாபயவின் அனுபவத்திலிருந்து ஒருவர் அறிந்து கொள்வது என்னவென்றால், தேர்தல் பரப்புரைகளும், அரசாங்கமும் மதச்சார்பற்றதாக இருக்க வேண்டும். புதிய சனாதிபதி தேவைப்படும்போது மதத் தலைவர்களின் ஆலோசனையைப் பெறக்கூடாது என்பதல்ல. ஆனால் ஒரு வரம்பு இருக்க வேண்டும். 2019 நொவெம்பர் சனாதிபதித் தேர்தலில் தனக்கு உதவிய கொழும்பு பேராயர் மால்கம் கர்தினால் இரஞ்சித்திடம் கூட கோட்டாபய அந்தக் கோட்டை வரையத் தவறி, அவரை ஏமாற்றினார்.

கோட்டாபய சிந்தனைக் குழுக்களின் உறுப்பினர்களான வியத் மக மற்றும் எலியா மற்றும் இலத்திரனியல் ஊடக மொகலாயர்களின் **(Moghuls)** ஆதரவைப் பெற்றதோடு தனிப்பட்ட வெளிநாட்டுத் தொடர்புகள் மற்றும் மூத்த இராணுவ அதிகாரிகளை அதிகம் நம்பியிருந்தார். கோட்டாபயவுக்கு நம்பிக்கையான பவுத்த மதகுருமார்களைப் போலவே, இவர்களும் பொதுச் சேவை ஆணைக்குழு, தொற்றுநோய்களின் போது பணம் புரளும் தொழில்கள், தொலைத்தொடர்பு, அமைச்சின் செயலாளர் பதவிகள், சட்டப்பூர்வ அதிகாரிகள், இராசதந்திர பணிகள் போன்ற நிபுணத்துவம் இல்லாத துறைகளைச் சேர்ந்தவர்களின் ஆதரவை வைத்திருந்தார். தனிப்பட்ட நலன்களை மேம்படுத்த முயல்பவர்களிடமிருந்து எவ்வாறு வழிகாட்டுதலைப் பெறக்கூடாது என்பதை புதிய சனாதிபதி கற்றுக் கொள்ள வேண்டும்.

பழைய சுமைகள்!

கோட்டாபய தனது இராணுவப் பின்னணியையும், போர் வெற்றியில் அவர் ஆற்றிய பங்களிப்பையும் பயன்படுத்தித் தன்னைப் பாதி மனிதனாகவும் பாதி கடவுளாகவும் காட்டிக் கொண்டார். அவரது மூத்த சகோதரர் மகிந்த இராசபக்ச சனாதிபதியாக இருந்ததால், பாதுகாப்புச் செயலாளராகச் சுதந்திரமாக இயங்கும் பெறும் நல்வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. இந்தக் காரணிகள் அனைத்தும் அவரைப் போரின் போது பாதுகாப்பு அமைச்சின் ஆட்சியைப் போலவே அரசின் விவகாரங்களையும் நிருவகிக்க முடியும் என எண்ணினார். மகிந்த



சொன்னதைக் கூட கோட்டாபய கேட்கவில்லை என மகிந்த இராசபக்சவின் உதவியாளரை மேற்கோள் காட்டி அல் ஜசீரா செய்தி வெளியிட்டுள்ளது. நிபுணரின் ஆலோசனைக்கு செவிசாய்க்காமல் மிக முக்கியமான முடிவுகளை எடுத்தார். அனேகமாக, அனைவரும் இணங்கி பின்னர் புகார் செய்யலாம் என்று இராணுவ பாணியில் நடந்து கொண்டார். இம்முறை நாடாளுமன்றத்தில் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மூன்று வேட்பாளர்களும் வெவ்வேறு அனுபவங்களையும் திறமைகளையும் கொண்டவர்கள். அவர்கள் தங்கள் 'தலைகளை' ஒன்றிணைத்து, அவர்களின் திறமைகளையும் ஆற்றலையும் ஒருங்கிணைத்தால், அவர்களால் எங்கள் சிக்கல்களைத் தீர்க்க முடியும். மேலும் கோட்டாபய சனாதிபதியாக இருந்தபோது இல்லாத ஒரு குழு முயற்சியின் அவசரத் தேவை உள்ளது.

இம்முறை நாடாளுமன்றத்தில் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மூன்று வேட்பாளர்களும் வெவ்வேறு அனுபவங்களையும் திறமைகளையும் கொண்டவர்கள். அவர்கள் தங்கள் கருத்துக்களை ஒன்றிணைத்து, அவர்களின் திறமைகளையும் ஆற்றலையும் ஒருங்கிணைத்தால், அவர்களால் எங்கள் சிக்கல்களைத் தீர்க்க முடியும். மேலும் கோட்டாபய சனாதிபதியாக இருந்தபோது இல்லாத ஒரு குழு முயற்சி அவசரத் தேவையாக உள்ளது.

கோட்டாபயவின் தோள்களில் தொங்கிக்கொண்டிருந்தவர் (அவரைப் பார்த்து) கேள்வி கேட்கவே இல்லை. 'கிராமப்புற மக்களை மேம்படுத்துதல்' (கம சமகின் பிலிசந்தரா'வில்) என்ற நிகழ்ச்சியில் பேசும்போது அவர் தனது வார்த்தையே அரசாங்கச் சுற்றறிக்கை என்று சிரித்துக் கொண்டே அறிவித்ததும், அவருக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த ஒரு நிர்வாகச் சேவை மூத்த அதிகாரி வழிமொழிந்து சிரித்தது எனக்கு நினைவிருக்கிறது!

ஆலோசகர்கள், வல்லுநர்கள் நேர்மையான நபர்களாகவும், என்ன ஆபத்துகள் அல்லது சிரமங்கள் சம்பந்தப்பட்டிருந்தாலும், உண்மையைப் பேசும் அளவுக்கு தைரியமாகவும் இருந்திருக்க வேண்டும். அது அவருக்கு இல்லை. அப்படிச் செய்திருந்தால், கோட்டாபய அவர்களின் கருத்துக்குச் செவி சாய்த்திருந்தால் இன்றும் அவர் சனாதிபதியாக இருந்திருப்பார். புதிய சனாதிபதிக்கும் அவரது ஆலோசகர்களுக்கும் இது ஒரு பாடமாக அமையும் என நம்புகிறேன்.

புதிய சுமைகள்

கோட்டாபய உருவாக்கிய சிந்தனை குழுக்களில் இருந்து புதிய ஆலோசகர்கள் உருவாகியுள்ளனர். அவர்கள் புதிய சுமைகள்! அவர்கள் பொறுப்பானவர்கள், படித்தவர்கள் மற்றும் அனுபவம் வாய்ந்தவர்கள் என்றாலும் அவர்கள் வழங்கிய அறிவுரைகள் மூலோபாய சிந்தனை மற்றும் பன்னாட்டு உறவுகளைப் பற்றிய புரிதலைக் கொண்டிருக்கவில்லை. **Millennium Corporation Compact (US)** இலகு இரயில் திட்டம் (யப்பான்), கிழக்கு கொள்கலன் முனைத் திட்டம் மற்றும் கெரவலப்பிட்டி **LNG** திட்டம் (யப்பான் மற்றும் இந்தியா ஆகிய இரண்டும்) அத்தகைய ஆலோசகர்களின் வேண்டுகோளின் பேரில் கைவிடப்பட்டன. கைவிடப்பட்டதற்கு சில நியாயங்கள் இருந்திருக்கலாம். கோட்டாபய தனது இராணுவ பாணியில், சில சமயங்களில் பொதுவான இராசதந்திர மரியாதைகளுக்குச் செவிசாய்க்காமல், திடீரென அவற்றை அகற்றினார். இதன் விளைவாக கோட்டாபய அரசாங்கம் சர்வதேச ஆதரவை இழந்தது. இது கோட்டாபயவின் அனுபவத்திலிருந்து அடுத்த சனாதிபதி கற்றுக் கொள்ள வேண்டிய பாடம்.

எவ்வாறாயினும், செயலாளர் அருணி விஜேவர்தன யப்பானுடன் ஆன உறவைச் சரியான திசையில் நகர்த்தத் தொடங்கியுள்ளதைக் குறிப்பிடுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். புதிய சனாதிபதி மற்ற நாடுகளுடன் கூட அவரது முயற்சிக்கு உதவ வேண்டும். 13 ஆவது திருத்தப்பட்டியல் ஐஐ இல் கொடுக்கப்பட்டுள்ள வெளிவிவகார அமைச்சின் செயற்பாடுகளின்படி செல்வது சரியான பாதையாகும்.

இலங்கை தனது இறையாண்மையை இழக்க நேரிடும் என்று நான் கூற வரவில்லை. ஆனால் இதுபோன்ற சிக்கல்களைக் கையாள்வதில் ஒரு அதிநவீன அணுகுமுறை தேவை. கோட்டாபயவின் சனாதிபதி பதவி உயர்வு நிர்வாகத்தில் பீட்டர் கோட்பாட்டை **(Peter Principle)** எடுத்துக்காட்டுகிறது. இதில் பதவி உயர்வு மூலம் படிநிலையில் உயரும் ஒருவர் அந்தந்த திறமையின்மை நிலையை அடைகிறார்! எதிர்காலத்தில் எப்படித் தலைவர்களை தேர்ந்தெடுப்பது என்பது வாக்காளர்களுக்குப் புதிய பாடமாக அமையலாம். கோட்டாபய விமர்சனங்களுக்கு ஆளாகாதவராக இருந்தார் மற்றும் முழுமையான தோல்வி நெருங்கும் வரை அவரது முடிவுகளை மறுபரிசீலனை செய்வதில் அக்கறை காட்டவில்லை. இதனைப் புதிய சனாதிபதி கவனத்தில் கொள்ள வேண்டும்.

மவுனமான மற்றும் மவுனப்படுத்தப்பட்ட ஊடகங்கள்

தற்போதைய சனாதிபதி மற்றும் அவரது நடவடிக்கைகள் எவ்வளவு சர்ச்சைக்குரியதாக இருந்தாலும், அரச கட்டுப்பாட்டிலுள்ள ஊடகங்கள் எப்போதும் புகழ்ந்து பேசுவது அனைவரும் அறிந்ததே. இராசபக்சக்கள் உள்ளும் புறமும் காணப்பட்ட அனைத்து எதிர்ப்பையும் சரிக்கட்டுவதில் சாணக்ய நீதியில் சொல்லப்பட்ட சாம, பேத, தான மற்றும் தண்டம் என்ற நால்வகை உத்திகளுக்கு ஏற்ப வற்புறுத்தல், வாங்குதல், தண்டித்தல் மற்றும் சூழ்ச்சிகள் ஆகியவற்றைக் கையாண்டனர். அவர்கள் தனியார் ஊடகத்தை "சொந்தமாக", "பதிலி-உரிமை", "வேறு வழியில்லாத சூழ்நிலையில் அந்த நபரை வைத்து ஒருவரை ஏதாவது செய்யும்படி கட்டாயப்படுத்துவது" அல்லது "பேரழிவு" மூலம்



கட்டுப்படுத்தினர்.

இத்தகைய கட்டுப்பாடுகள் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் சட்டநிறைவேற்ற ஆட்சித்துறையின் கீழ் இருப்பதால், உத்தியோகபூர்வ மற்றும் உத்தியோகபூர்வமற்ற முறையில், ஊடகங்கள் பெரும்பாலும் அரசியல் அழுத்தங்களுக்கு அடிபணிகின்றன. கோட்டாபய பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது லசந்த விக்கிரமதுங்க, போத்தல ஜயந்த, பிரதீப் எக்னேலிகொட, குகன் மற்றும் பலர், சிராசா, சியாத், லங்காநியூஸ் மீதான தாக்குதல்கள் காரணமாக ஊடகங்கள் மவுனம் காத்தன. யூலை 09 2022 அளவில் அனைத்தும் முடக்கப்பட்டன. இது புதிய சனாதிபதிக்குப் பாடமாக அமைய வேண்டும்.

ஆங்கில மூலம் **https://www.colombotelegraph.com/index.php/the-new-president-must-learn-from-gota/.**

தமிழாக்கம் கனடா நக்கீரன்.

மிகுதி அடுத்தவாரம்.


Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற
கனகாம்பிகை
தங்கநகை அடகுமாடம்
KANAGAAMBIKAI
PAWN BROKERS
25
வருடங்கள்
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
கனகாம்பிகை
பவுண் வங்கி
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...
2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2
416 269 7198

# சிங்கப்பூரிலும் சிக்கலில் சிக்கியுள்ள கோத்தாபய ராஜபக்ச



**சிவா பரமேஸ்வரன் - மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் லண்டன்**

INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

செய்த ஊழ்வினைகள் தொடர்ந்து துரத்தும் என்பது இயற்கையின் விதி. அதற்கு "கண்டதே காட்சி, கொண்டதே கோலம்" என்றும் என் ஆட்சியில் நான் வைத்ததே சட்டம் என்று அதிகார மமதையிலிருந்த "நாட்டிலிருந்து விரட்டப்பட்ட" முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச சிங்கப்பூரிலும் பெரிய சிக்கலை எதிர்கொண்டுள்ளார்.

போர்க் குற்றங்களில் ஈடுபட்டமைக்காக அவரை உடனடியாக கைது செய்யக் கோரி தென் ஆப்ரிக்காவின் ஜொஹனஸ்பர்கை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் நீதி மற்றும் சமாதானத்திற்கான சர்வதேச செயற்திட்டம் (ஐ டி ஜே பி – ITJP) சிங்கப்பூரின் சட்டமா அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளது.

ஓடவும் முடியாது ஒளியவும் முடியாது என்கிற இக்கட்டான நிலைக்கு அவர் இப்போது தள்ளப்பட்டுள்ளார் என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். எனினும் ஐ டி ஜே பி இன் முறைப்பாட்டின் சட்ட எல்லைகள் மற்றும் வரையறைகள் குறித்து மாற்றுக் கருத்துக்கள் நிலவுகின்றன.

சிங்கப்பூர் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ள குற்றவியல் ஆவணத்தில், இலங்கையின் பாதுகாப்புச் செயலராகப் பதவி வகித்த காலத்தில் அவர் பாரதூரமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார் என்று 63 பக்கங்களைக் கொண்ட அந்த ஆவணம் கூறுகிறது.

"பாரிய பொருளாதார நெருக்கடி காரணமாக அரசாங்கம் நிலைகுலைந்தது எனினும், கடந்த மூன்று தசாப்தங்கள் அல்லது அதற்கும் மேலாக தொடர்ந்துவரும் மோசமான சர்வதேச குற்றங்களுக்கான தண்டனைகளிலிருந்து கட்டமைப்பு ரீதியில் வழங்கப்பட்டுவரும் விலக்களிப்பு போக்குடன் இது உண்மையில் தொடர்புபட்டுள்ளது" என்று ஐ டி ஜே பி இன் நிறைவேற்று பணிப்பாளர் யாஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.




ஊழல், மோசமான பொருளாதார நிர்வாகம் ஆகியவை தொடர்பில் மட்டுமின்றி மிகவும் மோசமான குற்றச் செயல்களுக்கான பொறுப்புக்கூறலும் இதில் அடங்கியுள்ளதை இந்த ஆவணம் அடையாளம் காட்டுகிறது என்றும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

அவர் பல தசாப்தங்களாக தொடர்ச்சியாக இழைத்த பல குற்றங்களுக்காக கோத்தாபய ராஜபக்சவை கைத் செய்து, விசாரணைகளை முன்னெடுத்து, அவர் மீது வழக்குப் பதிவு செய்ய வேண்டுமென்று ஐ டி ஜே பி சிங்கப்பூர் சட்டமா அதிபரிடம் சமர்ப்பித்துள்ள ஆவணத்தில் கோரியுள்ளது.

1989ஆம் ஆண்டில் இராணுவ கட்டளை அதிகாரியாக ஒரு மாவட்டத்திற்கு பொறுப்பாக இருந்த காலத்தில் ஆகக்குறைந்தது 700 மக்கள் காணாமற்போனதில் அவருக்கிருந்த பங்கை இவ்வாவணத்தின் தொடக்கத்தில் கோடிட்டுக்காட்டப்பட்டுள்ளது.

ஆனால், 2009இல் நாட்டின் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த நேரத்தில் நாட்டின் பாதுகாப்பு செயலராக அவர் பதவி வகித்த காலத்தின் மீதே முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அக்காலகட்டத்தில் அவர் ஜெனீவா ஒப்பந்தங்களை மீறினார், சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தை மீறினார், சர்வதேச குற்றவியல் சட்டவிதிகளை மீறினார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கொலை, படுகொலை, சித்திரவதை, மனிதநேயமற்ற நடத்தை, பாலியல் வன்புணர்வு, இதர பாலியல் ரீதியான வன்முறைகள், உரிமைகளைத் தடுத்தல், மோசமான உடல், உளரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்தல், பட்டினி ஆகிய குற்றச்செயல்கள் இதில் உள்ளடங்கும்.

நாட்டைவிட்டு ஓடிய முன்னாள் ஜனாதிபதி, தான் முன்னெடுத்த வலிந்த தாக்குதல்களுக்குத் தலைமை தாங்குவதற்கு, முக்கிய இராணுவத் தளபதிகளுக்கு நேரடியாகக் கட்டளைகளை வழங்கி கண்காணித்தார் என்று அந்த ஆவணத்தில் கூறப்பட்டுள்ளது.

போர்க் காலத்தில் தமது உயிரைப் பாதுகாத்துக்கொள்ள பதுங்கு குழிகளில் உயிரைப் பாதுகாத்துக்கொள்ள பதுங்கியிருந்தவர்கள் மீதும், உணவிற்காகவும், மோசமாகப் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காகவும் தற்காலிக மருத்துவ மையங்களில் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள படுத்திருந்தவர்கள் மீது தொடர்ச்சியாக வேண்டுமென்றே வலிந்த இராணுவத் தாக்குதலைத் தொடர்ந்து நடத்தி அவர்களை "கொலை செய்தமை" தொடர்பான விபரங்களும் இச்சட்ட ஆவணத்தில் உள்ளன.

நான் பிபிசி தமிழோசையின் மூத்த செய்தி தயாரிப்பாளராக இருந்த காலத்தில், அதிலும் குறிப்பாக 2007 தொடக்கம் 2009 ஆம் ஆண்டு போர் முடிவிற்கு வரும் வரை, ஒரு செய்தியாளர் என்கிற வகையில் கடுமையான போரில் ஈடுபட்டிருந்த அரசு, விடுதலைப் புலிகள் மற்றும் சர்வதேச சமூகத்துடன் நெருங்கிய தொடர்பிலிருக்கும் தேவையும் சூழலும் ஏற்பட்டது. அவ்வகையில் அப்போது பாதுகாப்புச் செயலராக இருந்த கோத்தாபய ராஜபக்ச அவர்களுடன் பேச வேண்டிய சந்தர்ப்பங்கள் பல எழுந்தன. அப்படி பேசிய போது அவர் கூறிய கருத்துக்கள் பிபிசியின் தமிழோசை மற்றும் சிங்கள சேவையான சந்தேஷ்யவில் ஒலிபரப்பாயின. இதை ஏன் இப்போது நினைவுகூருகிறேன் என்பதற்கு காரணங்கள் இருந்தன. அவர் அரிதாகவே ஊடகங்களுக்கு பேசுவார். அதிலும் தொலைபேசி வாயிலாக பேசுவது மிகவும் அரிது. எனினும் எனது தொடர்புகள் மூலம் அவரிடம் பேசு போது அவரிடம் போர் குறித்த கடும்போக்கு தன்மையும், எவ்வகையிலும் இனி சமாதானமோ விட்டுக்கொடுப்போ இல்லையென்றும், விடுதலைப் புலிகளை இல்லாமல் அழித்தொழித்த பிறகே தான் ஓய்வேன் என்றும் கூறியது எனது நினைவில் பசுமையாக உள்ளது.

ஒரு முறை நான் அவரிடம் கேட்டேன்:

"மிகவும் உக்கிரமாகப் போரை முன்னெடுக்கிறீர்கள், அப்பாவி மக்கள் இதில் சிக்கி உயிரிழக்கின்றனர், மக்களுக்கு அத்தியாவசியத் தேவையான உணவு மற்றும் மருந்துகள் கிடைக்காமல் தடை செய்துள்ளீர்கள், ஊடகவியலாளர்களை சுதீயானமாக செய்தி சேகரிக்கச் செல்வதற்கு அனுமதி மறுக்கிறீர்கள், இவையெல்லாம் அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் மீறல் அல்லவா? என்னதான் போர் என்றாலும், அதிலும் ஒரு நேர்மை, நெறிமுறைகள் உள்ளதே, எதிர்காலத்தில் நீங்கள் செய்கிற அட்டூழியங்களுக்கு பதில் சொல்ல வேண்டிய சூழல் எழலாம் என்பது உங்கள் சிந்தனையில் இல்லையா?"

அதற்கு அவரது பதில்:

"இங்கு நடக்கும் போர் குறித்து உங்களுக்கு என்ன தெரியும், அங்கே என்ன திருவிழாவா நடைபெறுகிறது, அனைவரும் சென்று பார்ப்பதற்கு.? "பயங்கரவாதிகளுக்கு" ஆதரவாகச் செயல்படும் நீங்கள் இப்படியான கேள்விகளை ஏன் விடுதலைப் புலிகளிடம் கேட்பதில்லை, எமது கொள்கையின்படி பொதுமக்கள் யாரும் உயிரிழப்பதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம், நாங்கள் செய்வது மனிதாபிமான செயல், விடுதலைப் புலி பயங்கரவாதிகளிடமிருந்து அப்பாவி தமிழ் மக்களை பாதுகாப்பாக மீட்டுக் கொண்டுவரவே நாங்கள் போராடுகிறோம். நீங்கள் அபாண்டமாகக் கூறுவது போல் இங்கு எந்த மனித உரிமை மீறல்களும் இடம்பெறவில்லை. எமது துல்லியமான தாக்குதல்கள், பயங்கரவாதிகளின் இலக்குகளை மட்டுமே குறிவைத்து மிகவும் கவனமாகத் திட்டமிடப்பட்டு நடத்தப்படுகின்றன. புலனாய்வு தகவல்கள் மற்றும் அதியுயர் தொழில்நுட்பங்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு, சிறப்பான உத்திகள் வகுக்கப்பட்டே செயல்படுத்தப்படுகின்றன. போரில் வெற்றி என்பது மட்டுமே இலக்கு, அங்கு தார்மீக நெறிமுறைகளுக்கு இடமில்லை. எதிர்காலத்தில் எம்மீது எப்படியான விமர்சனங்கள் அல்லது பழி வந்தாலும் அதை எம்மால் எதிர்கொள்ள முடியும். நீங்கள் நடுநிலை மாறாமல் நியாயமான செய்திகளை வெளியிடுங்கள். பயங்கரவாதிகளின் ஊதுகுழலாக செயல்படாதீர்கள்".



"போர் வலையத்திற்குள் உணவு மற்றும் மருந்துகள் கிடைக்காமல் செய்துள்ளீர்கள் அதன் மூலம் வலிந்து மக்களை மறைமுகமாக கொலை செய்கிறீர்கள் என்கிற குற்றச்சாட்டு உங்கள் மீது உள்ளது, எனது அந்த கேள்விக்கு நீங்கள் இதுவரை பதிலளிக்கவில்லை"?

"அங்கு உணவு மற்றும் மருந்துகளுக்கு எவ்வித தட்டுப்பாடும் இல்லை. அரசு இயந்திரங்கள் மூலம் அவை அனுப்பப்படுகின்றன. அந்த விஷயத்தில் நாங்கள் ஐ நா, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உட்பட பன்னாட்டு அமைப்புகளுடன் இணைந்து அதை முன்னெடுக்கிறோம். அவை புலி பயங்கரவாதிகளால் கைப்பற்றப்பட்டு மக்களுக்கு கிடைக்காமல் செய்யப்படுகின்றன. நீங்கள் கூறுவதை நான் மறுக்கிறேன். நீங்கள் உண்மையை அறியாமல் பயங்கரவாதிகளுக்கு ஆதரவாக பேசுவது போலுள்ளது. மக்களுக்கான உணவு மற்றும் மருந்துகள் போன்ற அத்தியாவசியப் பொருட்களை பயங்கரவாதிகள் ஏன் பறித்துக் கொள்கிறார்கள் நீங்கள் அவர்களிடம் கேளுங்கள்".

இப்போது ஐ டி ஜே பி சிங்கப்பூர் சட்டமா அதிபரிடம் கையளித்துள்ள ஆவணம் 2008 செப்டம்பரில் உதவிப் பணியாளர்களை போர் வலயத்திலிருந்து வெளியேற்றுவதற்கு கோத்தாபய எவ்வாறு முடிவெடுத்தார் என்பதையும், போர் பகுதியில் இடம்பெற்ற மோசமான மனித அவலத்தை உலகிடமிருந்து மறைப்பதற்கு அவரும் அரசு இயந்திரமும் அவ்வாறு திட்டமிட்டு செயல்பட்டது என்பதையும் இவ்வாணம் விளக்கமாகக் கூறியுள்ளது.

போர் வலயத்திலிருந்து உதவிப்பணியாளர்களை வெளியேற்றுவதற்காக ஐக்கிய நாடுகள் சபை அலுவலகங்கள் கூட சிறிலங்கா விமானப்படையால் இறுதிக்கட்ட போர்க் காலத்தில் மீண்டும் மீண்டும் தாக்கப்பட்டன.

போர் வலயத்தில் பெண்களும் பிள்ளைகளும் பால் மாவுக்காகவும் உணவுக்காகவும் வரிசைகளில் நின்றபோது, பீரங்கிகள் மூலம் கடுமையான தாக்குதல்கள் மீண்டும் மீண்டும் நடத்தப்பட்டதால், ஏராளமானவர்கள் உயிரிழக்க வேண்டியதாயிற்று என்று ஐ டி ஜே பி ஆதாரங்களுடன் ஆவணப்படுத்தி சிங்கப்பூர் அரசிடம் கையளித்துள்ளது.

கடுமையான பீரங்கி தாக்குதல்கள் போர் வலயத்தில் இடம்பெற்றன என்பதற்கு அப்போது அங்கு பணியாற்றிய அரசை வைத்தியர்கள் பிபிசிக்கு அளித்த பேட்டிகள் சான்றாகும். அவ்வகையில் பல முறை என்னிடமே அவர்கள் அங்குள்ள அவல நிலை மற்றும் தொடரும் தாக்குதல்கள் குறித்து கூறியுள்ளனர்.

இப்படி பலதரப்பிலிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்களை பல முறை சரிபார்த்து அதன் உண்மைத்தன்மையை அறிந்துகொண்ட பிறகே அவை ஆவணப்படுத்தப்பட்டுள்ளன என்று ஐ டி ஜே பி கூறுகிறது.

"பட்டினிபோடுதல், பாலியல் வன்முறைகள் உள்ளிட்ட இதர கொடூரமான குற்றச்செயல்கள் என்பவற்றுக்கு கோத்தபாய உடந்தையாக இருந்தார் என்பதையே இவ்வாறான தகவல்கள் வெளிப்படுத்துகின்றன" என சிங்கப்பூர் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட இம்முறைப்பாட்டினை வரைவதில் பங்குவகித்த சட்டவாளர்களில் ஒருவரான அலெக்சாட்ரா லில்லி காதர் கூறியுள்ளார்.

"நடந்த இடம், யாருக்கு எதிராக, அல்லது யாரால் என்பதையெல்லாம் தாண்டி, ஒட்டுமொத்த மனிதகுலத்திற்கு கரிசனையை ஏற்படுத்தும் சில குற்றச்செயல்கள் மீது உள்நாட்டிலேயே வழக்குத் தொடர்வதற்கான கடப்பாடு அரசுகளுக்கு உண்டு என்பதையே உலகளாவிய சட்ட அதிகாரவரம்பு என்ற கருத்தியல் கொண்டுள்ளது என்று கூறும் ஐ டி ஜே பி. சிங்கப்பூர் தனது சொந்தச் சட்டங்களைப் பயன்படுத்தி நீதியை நிலைநாட்டவும், சிறிலங்காவில் பல்வேறு சமூகங்களுக்கு எதிராக கொடூரமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட ஒரு மனிதரிடமிருந்து உலகைப் பாதுகாக்கவும் அந்நாட்டுக்குக் கிடைத்த ஒரு வாய்ப்பே இதுவாகும்.

அவ்வகையில் சிங்கப்பூர் தனது ஜனநாயக மற்றும் சட்டரீதியான கடமையை முன்னெடுக்க வேண்டும் என்று அந்நாட்டு சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ள ஆவணம் கோரியுள்ளது.

இதேவேளை 2019 ஆம் ஆண்டில், சித்திரவதைக்கு உள்ளாகிய 11 பேர் கலிபோர்னியாவில் கோத்தாபயவுக்கு எதிராக பொது வழக்கு ஒன்றினைப் பதிவுசெய்வதற்கு ஐ டி ஜே பி உதவி செய்திருந்தது. ஆனால் அவர் ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்ட பிறகு நடவடிக்கைகளிலிருந்து விலக்களிப்புப் பெற்றார். அவர் தற்போது தன்னுடைய பதவி விலகியுள்ளதாக, ரீதியான சட்ட பாதுகாப்பு அவருக்குப் பொருந்தாது. அவ்வகையில் இதுவே அவருக்கெதிரான முதலாவது குற்றவியல் முறைப்பாடாக உள்ளது என நம்பப்படுகின்றது.

# திருக்குறளிற் தொழில்நுட்பச் சிந்தனைகள்



திருமதி. ஜோதி ஜெயக்குமார் (B.Com, MA)
வள்ளுவன்வழி உலக இணையப்பள்ளி நிறுவுநர்
தமிழ்மொழி, திருக்குறள் ஆசிரியர்

உலகிலே மனிதன் ஈடேற்றம் பெறுவதற்கான நல் வழிகளைக் காட்டி நிற்கும் ஓர் அறிவுப் பெட்டகம் திருக்குறள். மதம், இனம், நாடு, மொழி என்பவற்றைக் கடந்து முக்காலத்திற்கும் பொருந்தும் வகையில் தூர நோக்குப் பார்வையுடன் படைக்கப்பட்ட நூல் இது. அதனால் உலகச் சிந்தனையாளர்களுள் முதன்மையானவராகத் திருவள்ளுவர் விளங்குகிறார். இரண்டாயிரம் ஆண்டுகள் தாண்டியும் இந்நூல் மனித வாழ்விற்கு வழிகாட்டி, ஒளியேற்றி நிற்கிறது.

சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் எப்பொழுதும் தனிச்சிறப்பு வாய்ந்தது. அவ்வண்ணமே திருக்குறளும் "குறள் வெண்பாவில்" அமைந்துள்ளது. இப்பெருமை கருதியே ஔவையார் திருக்குறளைப் பின்வருமாறு போற்றினார்.

*"அணுவைத் துளைத்துஏழ் கடலைப் புகட்டிக்*
*குறுகத் தறித்த குறள்"*
*(திருவள்ளுவ மாலை-55)*

ஆகச் சிறிய பொருள் அணு. அந்த அணுவைத் துளைத்து ஏழு கடல்களைப் புகுத்துவதென்பது இயலுமான காரியமா.? ஆனால் ஒன்றேமுக்காலடி கொண்ட மிகவும் சிறிய குறளுக்குள் ஏழு சீர்களைக் கொண்டு ஏராளமான விடையங்களை உள்ளடக்கிய அசகாயச் செயலைத் தெய்வப்புலவர் திருவள்ளுவர் நிகழ்த்திக் காட்டியுள்ளார்.

கற்காலந் தொடங்கி அணுஆயுத அறிவியற் காலமான இக்காலம் வரையும், அதுமட்டுமல்லாமல் எதிர்காலத்திலும் அனைவருக்கும் அறத்துடன்கூடிய அறிவைப் போதிக்கும் அற்புத நூலாகத் திருக்குறள் படைக்கப்பட்டுள்ளது.

ஆதித் தமிழன் செய்த தொழில்களை நாம் விரல் விட்டு எண்ணலாம். விவசாயமே அன்று முன்னணியில் இருந்தது. அத்துடன் நாட்டைக் காக்கும் போர்த் தொழில், தச்சுத் தொழில், வீடுகட்டுதல், நெய்தல், மீன்பிடித்தல், வாணிபம் செய்தல், மாடு மேய்த்தல், போன்றவைகளையும் குறிப்பிடலாம். அந்தவகையில் தனது காலத்தில் நிலைத்திருந்த தொழில்களையும், அதன் நுட்பங்களையும் திருவள்ளுவர் தெளிவுபடக் கூறியுள்ளார்.

*சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்*
*உழந்தும் உழவே தலை.*
*(அதிகாரம் - உழவு, குறள்-1031)*

இக்குறள் என்ன கூறுகிறது.?

இக்குறள் உழவுத் தொழிலின் மகிமையைக் கூறுகின்றது. பல மாற்றங்களுடன் சுழலும் உலகம் உழவுத் தொழிலைப் பின்பற்றியே இருக்கிறது. ஆகையால் பலதொழில் பழகினாலும் தமது உணவுக்காக உழவர்களையே எல்லோரும் எதிர்பார்க்கிறார்கள். ஆகவே உலக உயிர்களுக்கு விவசாயமே உயிரூட்டுகிறது. ஆதித் தமிழனிடமிருந்த இப்பேற்பட்ட சிந்தனைகளே பிற்காலத்தில் இழுவை இயந்திரம் (Tractor), பன்கலப்பை ஏர் மற்றும் உரவகைகள் ஆகியன கண்டுபிடிக்கப்பட்டமைக்கு மூலகாரணமாகலாம். எனவே இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சிக்கான அடிப்படைச் சிந்தனைகளை 2000 ஆண்டுகளுக்குமுன்பு தோன்றிய திருக்குறள் நமக்குக் கூறுகிறது.

*ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்*
*வாரி வளங்குன்றிக் கால்*
*(அதிகாரம் - வான் சிறப்பு, குறள்-14)*

இக்குறளோடு சங்கப் பெரும் புலவர் கபிலர் அவர்களின் அகநானூற்று வரிகளும் ஒத்துப்போகின்றன. ஏருக்கு எக்காலத்தில் வேலை இல்லாமற் போகிறது என்பதுபற்றிக் கபிலர் கூறியுள்ளார்.

*"நாடு வறம் கூர நாஞ்சில் துஞ்சக்*
*கோடை நீடிய பைது அறு காலை..."*
*(அகநானூறு - 42, குறிஞ்சித் திணை, கபிலர்)*

ஆகவே இவர்கள், கோடைகாலம் நீடித்தால் உழவனுக்கு வேலையின்றிப் போகும்அதே நேரம் உழவுக் கருவிக்கும் வேலையற்றுப் போகிறது என்கிறார்கள். இதனால் நாடு பசுமையற்று வறண்டு போகிறது. கலப்பையும் துஞ்சுகிறது. நிலத்தைக் கலப்பை எனும் கருவி கொண்டு உழுது பண்படுத்தல் என்கின்ற தொழில் நுட்பத்தினைக் கூறியுள்ளனர்.

ஒரு தொழிலை நாம் செய்யும் போது பொருள், கருவி, காலம், செயல், இடம் ஆகிய ஐந்தையும் ஐயமற ஆராய்ந்து செய்தால் அச்செயல் வெற்றிகரமாக முடியும்என்பதனை வினைச் செயல்வகை (Modes of Action) என்ற அதிகாரத்தில்தெளிவாகக் கூறியுள்ளார்.

*பொருள்கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்*
*இருள்தீர எண்ணிச் செயல்*
*(அதிகாரம் - வினைசெயல்வகை குறள்-675)*

ஆகவே நாம் தேர்வு செய்த செயலுக்குத் தேவையான ஆதாரங்கள், ஏற்ற வழிமுறைகள், அச் செயற்த் திட்டத்தை மேற்கொள்வதற்கான காலம், மேற்கொள்வதற்கான இடம், செய்யவிருக்கும் தொழிலின் இயல்பு, என்ற ஐந்து விடயங்களிலும் மிகவும் தெளிவு பெற்ற பின்னரே குறிப்பிட்ட செயலில் இறங்கினால் வெற்றி பெற முடியும் என்ற ஆழமான விடயத்தை நமக்குத் திருவள்ளுவர் அழகாக கூறினார். இதனையே "செய்வன திருந்தச் செய்" என்று ஆத்திசூடியில் ஔவையார் கூறியுள்ளார்.

*செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை*
*உள்ளறிவான் உள்ளம் கொளல்*
*(அதிகாரம் - வினைசெயல்வகை குறள்-677)*

ஒரு கட்டடத்தைக் கட்டும் போது அதற்கான நுட்பங்களையும் பல குறள்களிற் கூறியுள்ளார். எடுத்துக் காட்டாகப் பின்வரும் குறளைக் கூறலாம்.

*உயர்வகலம் திண்மை அருமைஇந் நான்கின்*
*அமைவுஅரண் என்றுரைக்கும் நூல்.*
*(அதிகாரம் - அரண் குறள்- 743)*

இங்கே திருவள்ளுவரின் கட்டடக்கலை பற்றிய அறிவும், அவரது தொழில்நுட்பச் சிந்தனையையும் அவதானிக்க முடிகிறது.

ஒரு செயலைச் செய்பவன் அச்செயலின் முறையினை நன்கறிந்தவர்களது கருத்தையும், அனுபவத்தையும் அறிந்து செயல்படுவது எப்பொழுதும் சிறப்பான பலனைத் தரவல்லது. அதனைப் பின்வரும் குறள் கொண்டு திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.

*தெரிந்த இனத்தோடு தேர்ந்துஎண்ணிச் செய்வார்க்கு*
*அரும்பொருள் யாதொன்றும் இல்.*
*(அதிகாரம் - தெரிந்து செயல்வகை, குறள்-462)*

எனவே, நாம் ஒரு தொழிலில் உயர்வு பெறவேண்டும் எனும் போது குறிப்பிட்ட தொழிலில் அனுபவம் உடையவர்களுடன் நாம் செய்யவிருக்கும் செயல்பற்றி ஆராய்ந்து, நாமும் சீராகச் சிந்தித்துச் செயலாற்றும் வல்லமை வேண்டும். இன்று உயர்நிலைக்குச் சென்றிருக்கும் பல செல்வந்தர்களும் இதைத்தான் நமக்குக் கூறுகிறார்கள்.

*அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்*
*ஊதியமும் சூழ்ந்து செயல்.*
*(அதிகாரம் - தெரிந்து செயல்வகை, குறள்-461)*

எனவே, ஒரு தொழில்நுட்பம் மேம்பாடடையும் போது அதனாலான நன்மை, தீமைகளையும் அதன்மூலம் கிடைக்கவிருக்கும் பலாபலனையும் ஆராய்ந்து செயற்பட வேண்டும் என்பதனை மேற்குறிப்பிட்ட குறள் வாயிலாக அறியமுடிகிறது.

எனவே செய்யுந் தொழிலில் உயர்வுபெற அத்தொழில் சார்பான அறிவு, கருவி, காலம், பொருள், ஆய்வு, முயற்சி, செயற்திறன், பட்டறிவு போன்ற பல விடயங்களை நாம் கருத்திற்கொண்டு செயற்பட்டாற் குறிப்பிட்ட தொழிலில் உயர்வு பெற முடியும் என்பதைத் திருவள்ளுவர் மேற்கூறிய குறள்களின்மூலம் தெளிவுபடுத்தியுள்ளார். இவ்வாறாகத் திருக்குறளிற் தொழில்நுட்பச் சிந்தனைகள் விதைக்கப்பட்டுள்ளன..!!!

*வாழ்க தமிழ்.!!*
*வாழ்க வள்ளுவம்.!!!*




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள். சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# “போன மச்சான் திரும்பப் பார்க்கிறான் மணவறைக்கு” இந்து சங்கத்தில் தலைமைக் குழப்பம்: ஜூலை 31 இல் மீண்டும் தலைவர் தேர்தல்

மலேசிய மடல்



நக்கீரன்

**கோ**லாலம்பூர், ஜூலை 28:

மழைவிட்டும் தூவானம் தொடர்கின்ற கதையாக, மலேசிய இந்து சங்கத்தை மீண்டும் குழப்பம் சூழ்ந்துள்ளது.

மலேசிய இந்து சங்கத்தின் தேசியத் தலைவர் என்பவர், சங்கத்தின் உறுப்பினர்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படாமல் மறைமுகத் தேர்தல் மூலம்தான் தெரிவு செய்யப்படுகிறார்.

அதன்படி இந்து சங்கத்தின் மேநாள் தேசிய செயலாளர் “சிவநெறிச் செல்வர்” தங்க கணேசன், கடந்த ஞாயிற்றுக்கிழமை, 2022 ஜூலை 24-இல் 17-க்கு 10 என்னும் பெரும்பான்மையில் இந்து சங்க தேசியத் தலைவராகத் தேர்வானார். அப்போது பதவி விலகிய 13 ஆண்டு காலத் தலைவர் மோகன்ஷான், இப்போது மீண்டும் தலைவர் பதவியைக் கைப்பற்ற குறுக்கு வழியை நாடுகிறார் எனத் தெரிகிறது.

பதவி வீழ்த்தப்பட்ட அவர், தான் இந்து சங்கத்தில் வம்படிக்க விரும்பாமல், மத்திய செயலவையில் இருந்தும் நல்ல முறையில் விலகுவதாக அறிவித்துவிட்டு, கூட்டத்தில் இருந்து வெளியேறினார். இதை, மலேசிய இந்து சங்கத்தின் 45-ஆவது ஆண்டுக் கூட்டத்தில் திரண்டிருந்த இந்து சங்க மாநிலத் தலைவர்கள், உறுப்பினர்கள் அனைவரும் அறிவர். இது குறித்த காணொளியைக்கூட நாட்டிலுள்ள அனைவரும் கண்டனர்.

இந்த நிலையில் இந்து சங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் & வழக்குரைஞர் நிறுவனம், மோகன் ஷானுக்கு 2022 ஜூலை 26-ஆம் நாள் தேதியிட்ட ஒரு அறிக்கையை அனுப்பி இருக்கிறது. அந்த அறிக்கையை, மோகன் ஷான், கடந்த இரு நாட்களாக தன் ஆதரவாளர்களுடன் பகிர்ந்து கொள்வதுடன், தான் மீண்டும் ஒரு மத்திய செயலவையைக் கூட்ட இருப்பதாகவும் அதில் தன்னை மீண்டும் தலைவராக தேர்ந்தெடுத்து இன்னொரு முறை தனக்கு வாய்ப்பு அளிக்கும்படி பரப்புரை மேற்கொள்வதாகவும் மலேசிய இந்து சங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த அறிக்கையில், 2020 ஜூலை 20-இல் திருத்தப்பட்ட மலேசிய இந்து சங்க சட்ட விதி 11.1.4-ஐ கடந்த ஞாயிற்றுக்கிழமை, சன் வே அருள்மிகு சுப்பிரமணியர் ஆலயத்தில் நடத்தப்பட்ட ஆண்டுக்கூட்டம் பின்பற்றவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மலேசிய இந்து சங்க சட்ட விதி 11.1.4-இன்படி இந்து சங்க மாநிலத் தலைவர்களும் மத்திய செயலவையின் இணை உறுப்பினர்கள் என்பதால், அவர்களும் வாக்களித்துதான் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று அந்த விதி தெரிவிக்கிறது.

அதனால், மத்திய செயலவையின் 27 உறுப்பினர்கள் மட்டும் புதிய தலைவரை தேர்ந்தெடுத்தது செல்லாது. எனவே, தாங்கள் இன்னமும் மோகன் ஷானைத்தான் இந்து சங்கத்தின் அதிகாரப்பூர்வத் தலைவராகக் கருதுவதாகவும், கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தலைவர் தேர்வு செல்லாது எனவும் அதனால் புதிய மத்திய செயலவைக் கூட்டத்தை மோகன்ஷான் நடத்தவேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக் கூட்டத்தை நடத்தியதே மோகன்ஷான்தான் அதைக் கண்காணித்தது வழிநடத்தியதும் மலேசிய இந்து சங்கத்தால் சட்ட ஆலோசகக்காக நியமிக்கப்பட்ட இதே வழக்கறிஞர் நிறுவனம்தான்.

எல்லாம் முடிந்து 2 நாட்களுக்குப்பின், இந்த வழக்கறிஞர் நிறுவனம் எதற்காக இப்படி கேட்கிறது? யாருக்காக மறைமுகமாக கேட்கிறது என்ற ஐயமெல்லாம் எழுகிறது.

இந்து சங்கத்திற்கு ஆலோசனை சொல்ல நியமிக்கப்பட்ட ஒரு நிறுவனத்திற்கு இந்து சங்கத்தின் நிருவாக நடைமுறையில் தலையிட தகுதியும் உரிமையும் உள்ளதா? மோகன் ஷான் தலைமையில் நடைபெற்ற ஆண்டுக் கூட்டத்தை கண்காணித்த இந்த வழக்கறிஞர் நிறுவனத்திற்கு இரண்டு நாள் கழித்து புதிய ஞானோதயம் எப்படி வந்தது?

இந்து சங்க மாநிலத் தலைவர்களில் ஒருவர், புதியத் தலைவர் தேர்வின்போது தானும் வாக்களிக்க வாய்ப்பளிக்கவில்லை என்று புகார் செய்ததாகவும் அவர் யாரென்று சொல்லமாட்டேன் என்றும் வழக்கறிஞர் நிறுவனத்தின் சார்பில் ஒருவர் இந்து சங்க பகாங் மாநில பொறுப்பாளர் ஒருவரிடம் விளக்கம் அளிக்கும் குரல்பதிவு இந்தச் செய்தியுடன் இணைக்கப்பட்டுள்ளது.

அது, உண்மையானால், அந்த மாநிலத் தலைவர் ஆண்டுக் கூட்டத்திலேயே கேட்டிருக்க வேண்டும், மோகன் ஷான், பதவி விலகுவதாக அறிவித்துவிட்டு அரங்கத்தைவிட்டு வெளியேறிய சமயத்திலாவது கேட்டிருக்க வேண்டும் இப்படி எல்லாக் கட்டங்களையும் கடந்துவிட்டு, சம்பந்தப்பட்ட மாநிலத் தலைவர் தனியாக-கமுக்கமாக வழக்கறிஞரை நாடவேண்டிய காரணம் என்ன?

மேலும் இந்து சங்கத்திற்கு சட்ட ஆலோசனை வழங்கும் இந்த வழக்குரைஞர் நிறுவனமும் புதிய தலைவரைத் தெரிவு செய்வதற்காக புதிய மத்திய செயலவைக் கூடியபோதே சட்டவிதியை சுட்டிக்காட்டி நெறிப்படுத்தி இருக்க வேண்டும். அந்தக் கடமையில் இருந்தும் தவறிவிட்டு, இரண்டு நாள் கழித்து மீண்டும் கூட்டத்தை நடத்த வேண்டும் என்று கேட்பது குறித்து இந்து சங்க உறுப்பினர்களிடையே குழப்பமும் வியப்பும் ஏற்பட்டுள்ளது.

இந்து சங்க உறுப்பினர்களின் முன்னிலையில் பதவி விலகுவதாக மோகன்ஷான் அறிவித்தது செல்லாது என்றும் எழுத்துப்பூர்வமாக பதவி விலகல் கடிதம் வேண்டும் என்றும் கேட்க ஓர் ஆலோசனை நிறுவனத்திற்கு தகுதி உள்ளதா? அப்படி எழுத்துப்பூர்வ பதவி விலகல் கடிதம் வேண்டும் என்றால், அதை மோகன் ஷானிடம் கேட்டுப் பெறுவதைவிட்டுவிட்டு, கூட்டமே செல்லாது என்பதால் இந்து சங்கத்தில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

எல்லாவற்றையும் எழுத்துப்பூர்வமாகக் கேட்கும் இவர்கள், புகார் அளித்த மாநிலத் தலைவரிடமும் எழுத்துப்பூர்வமாக புகை-ரப் பெற்றுள்ளாரா? அப்படி பெற்றிருந்தால், அதை பகிரங்கமாக அறிவிக்காமல் புகார் அளித்தவர் யாரென்று தெரிவிக்கமாட்டேன் என்று கூறும் வழக்கறிஞர் நிறுவனத்தின் பேச்சாளரிடம் வெளிப்படைத்தன்மை இருக்கிறதா?

சங்க ஆண்டுக் கூட்டத்தின்போது, ஆய-ிரக் கணக்கானோர் முன்னிலையில் மோகன்ஷான் பதவி விலகினார். அத்துடன், அதே ஆயிரக் கணக்கானோர் முன்னிலையில் மத்திய செயலவையில் இருந்தும் விலகுவதாக அவரே அறிவித்ததை ஏற்க முடியாதென்று சொல்லும் இந்த வழக்கறிஞர் தரப்பினர், ஆயிரக் கணக்கான இந்து சங்க உறுப்பினர்களின் முடிவுக்கு மாறாக செயல்படுவதுடன், மோகன் ஷானை மீண்டும் பதவியில் அமர்த்த மறைமுகமாக செயல்படுகின்றனரா என்றும் பரவலாக பேசப்படுகிறது.

மோகன் ஷான் தரப்பினர் என்னதான் குயுக்தியாக சிந்தித்தாலும் செயல்பட்டாலும் தங்க கணேசன்தான் இந்து சங்கத்தின் புதிய தலை-வர் என்பதை, இந்து சங்க மாநிலத் தலைவர்களும் வட்டாரப் பேரவை-யினரும் பல்லாயிரக் கணக்கான உறுப்பினர்களும் நிலைநாட்டுவார்கள் என்றுதான் இந்து சங்கத்தின் உண்மையான கள நிலவரம் தெரிவிக்கிறது. 13 ஆண்டுகள் தலைவராக இருந்தது போதாமல், மீண்டும் பதவி மோகத்துடன் குறுக்கு வழியை நாடும் மோகன்ஷானின் முயற்சி பலிக்காது என்றேத் தெரிகிறது.

இந்தச் செய்தியுடன், மோகன் ஷான் ஆண்டுக் கூட்டத்தில் பேசிய காணொளி, சம்பந்தப்பட்ட வழக்கறிஞர் நிறுவனத்தின் பேச்சாளர் இந்து சங்க பகாங் மாநிலப் பொறுப்பாளர் ஒருவருடன் பேசும் குரல் பதிவு ஆகியவை இணைக்கப்பட்டுள்ளதால் அவற்றையும் காணவும் கேட்கவும் மறக்காதீர்கள்.

இதற்கிடையில், இந்து சங்க புதிய தலைவர் தங்க கணேசன் தரப்பினரும் சட்ட ஆலோசனையை நாடுவதாகத் தெரிகிறது; எல்லாவற்றுக்கும் மேலாக, இப்பொழுது இருக்கிற 12 மாநிலத் தலைவர்களில் கெடா, நெகிரி செம்பிலான் மாநிலத் தலைவர்களைத் தவிர மற்ற அனைவரும் தங்க கணேசனை ஆதரிப்பதாகவும் தெரிவதால், தங்க கணேசன் அணி வெற்றி அணியாகாவேத் தொடர்வதற்கான சாத்தியம் இந்து சங்கத்தில் நிலவுகிறது.

இதற்கிடையில், வரும் ஞாயிற்றுக்கிழமை ஜூலை 31-ஆம் நாள் மீண்டும் மத்திய செயலவையைக் கூட்டி, அதில் தான் மீண்டும் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கான முயற்சியில் மோகன்ஷான் ஈடுபட்டுள்ளார்.

பொருத்திருந்து பார்ப்போம் ஞாயிற்றுக்கிழமை இந்து சங்க தலைமையகத்தில் என்ன நடக்கிறதென்று..!

**நக்கீரன் - Nakkeeran 013-244 36 24**



# ஈழத்துத் திருக்கோவில்கள்



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## ஸ்ரீ கிருஷ்ணன் கோவில்
## திருகோணமலை

இந்து சமயத்தின் கூறுகளுள் ஒன்றாக வைணவ மதம் விளங்குகின்றது. திருமாலே வேதத்தை உலகுக்கு அருளியவர் என்ற நம்பிக்கையைக் கொண்டவர்களாக வைணவர்கள் காணப்படுகின்றனர். உலகத்து உயிர்களைக் காக்கும் கடவுள் இவராதலால், உயிர்களைக் காப்பாற்றுவதற்காக அவ்வப்போது உலகத்திலே மானிடவடிவந்தாங்கி, அவதாரம் எடுக்கின்றார்.

திருமால் மும்மூர்த்திகளிலே காக்கும் கடவுளாகப் போற்றப்படுகின்றார். உலகத்தை உய்விப்பதற்காகவும், தருமத்தை நிலைநாட்டவும் பத்து அவதாரங்களைத் திருமால் எடுத்துள்ளார். மச்சாவதாரம், கூர்மாவதாரம், வராகஅவதாரம், நரசிம்ம அவதாரம், வாமனஅவதாரம், பரசுராமஅவதாரம், இராமஅவதாரம், கிருஷ்ண அவதாரம், கல்கி அவதாரம் என திருமாலின் அவதாரங்கள் கருதப்படுகின்றன. கல்கி அவதாரம் இன்னும் நிகழவில்லை என்று கூறப்பட்டுள்ளது. கிருஷ்ணஅவதாரமே திருமாலுடைய அவதாரங்களுள் பூரணமான அவதாரமாகக் கருதப்படுகின்றது. அவதாரம் என்னும் சொல் இறங்குதல் என்னும் பொருள் கொண்டதாகக் காணப்படுகின்றது. அவதாரங்கள் எடுக்கும் திருமாலை, அடியவர்கள் நெருங்கிச்செல்லக் கூடியவராகக் கருதப்படுகின்றார்.

பழந்தமிழர்களின் வழிபாட்டிலே திருமால் வணக்கமுறை இடம்பெற்றுள்ளமையை தொல்காப்பியத்தின் பொருளதிகாரம்,

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி முரதம் நெய்தல் என
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

எனக் கூறியுள்ளது. இச் சூத்திரத்தில் தொல்காப்பியர், முல்லைத்தெய்வம் மாயோன் என எடுத்துக்காட்டியுள்ளார்.

ஈழத்திருநாட்டிலும் வைணவவழிபாடு புகழ்பெற்ற வழிபாடாகக் காணப்படுகின்றது. திருகோணமலைப் பட்டினத்தில், புகையிரத நிலையத்திற்குச் சமீபமாக, வீரகத்திப்பிள்ளையார் கோவிலுக்கு அருகே ஸ்ரீ கிருஷ்ணன்கோவில் அமைந்துள்ளது. சைவப்பெருமக்கள் நிறைந்துவாழும் திருகோணமலைப்பிரதேசத்தில் காணப்படும் ஒரேயொரு கிருஷ்ணன் கோவில் இதுவாகும்.

திரு. மணிமுத்துநாயகர் என்பவர் வடஇந்தியாவைச் சோந்த வைணவர். இலங்கையைப் பிரித்தானியர் ஆளத்தொடங்கிய ஆரம்பகாலத்திலே, பிரித்தானியருடைய தரைப்படையிலே வடஇந்தியர்களைக்கொண்ட படைப்பிரிவொன்று இருந்தது. இவர்களைத் தலைப்பாக்கட்டிகள் என்று அழைக்கும் வழக்கு அக்காலத்திலே காணப்பட்டுள்ளது. இந்தப்படையைச் சேர்ந்தவர்கள் வைணவர்களாகக் காணப்பட்டனர். இவர்கள் தங்களுக்கென ஒரு வழிபாட்டுத்தலத்தை அமைக்க எண்ணங்கொண்டாாகள். இவ்வேளையிலே தற்பொழுது கிருஷ்ணன் கோவில் அமைந்துள்ள இடத்திற்கு மேலாக மூன்றுநாட்களாக ஒரு கருடன் வட்டமிடுவதை இவர்கள் அவதானித்தார்கள்.

கருடன், பெரிய பெருமாளாகிய மகாவிஷ்ணுவின் வாகனம். கருடாழ்வார் என்று வைஷ்ணவர்கள் வணங்குவர். ஆதலால் கருடன் வட்டமிட்ட அந்த இடத்தை தமது வழிபாட்டுத்தலமாக, பெருமாளே அடையாளமிட்டுக் காண்பித்ததாக இவர்கள் கருதினார்கள். கருடன் வட்டமிட்ட இடம் பெரிய இராசக்கோன் முதலியார் என்பவருடைய தர்மக் காணியாக, வீரகத்திப்பிள்ளையார் கோவிலுக்குரியதாகக் காணப்பட்டது. அந்த இடத்தை வீரகத்திப்பிள்ளையார் கோவில் உரிமையாளர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார்கள். இதுபற்றி எழுதப்பட்ட சாசனமொன்று தற்காலத்திலும் காணப்படுகின்றது. இவ்வாறு பெற்றுக்கொண்ட நிலத்திலே திரு. மாரிமுத்து நாயக்கரும், ஆரியநாட்டவர், திருவிளங்க நகரத்தார் ஆகியோரும் சேர்ந்து கூட்டாக ஸ்ரீ கிருஷ்ணன் ஆலயத்தை அமைத்துள்ளனர்.

கருங்கல்லினாலான கற்பக்கிரகத்தையும், அர்த்தமண்டபத்தையும் அமைப்பதற்கு இந்தியாவிலிருந்து கருங்கற்களைக் கொண்டு வந்துள்ளார்கள். திருக்கோணேஸ்வரத்தின் வரலாற்றிலே, இராமேஸ்வரம் கோவிலை அமைப்பதற்கு திருகோணமலையிலிருந்தும் கருங்கற்கள் கொண்டு செல்லப்பட்டதாக ஒரு குறிப்புக் காணப்படுகின்றது. அப்படியிருக்கையில், இந்தியாவிலிருந்து இவர்கள் ஏன் கருங்கற்களைக் கொண்டு வரவேண்டும் என்பதற்கும் ஒரு காரணம் கூறப்பட்டுள்ளது. இராம இராவணயுத்தத்திற்கு முன், இராமதூதராக இலங்கைக்கு அனுமார் அனுப்பிவைக்கப்பட்டார். இராவணன், அவரை அவமதித்து அவரது வாலிலே தீமூட்டியதாகவும், அந்தத் தீயால் இலங்கையைக் கொளுத்தி நாசம் செய்ததாகவும் இராமாயணத்திலே கூறப்பட்டுளது. இராமபக்தனாகிய அனுமாரால் தீவைக்கப்பட்டு எரிந்த இலங்கையிலுள்ள கற்கள், சுடுபட்ட கற்கள் என்ற காரணத்தினாலேயே, வைணவபக்தர்கள் இந்தியாவிலிருந்து கருங்கற்களைக் கொண்டுவந்தார்களாம். அந்தக் கற்களால் கட்டப்பட்ட கோவில் இன்றும் காணப்படுகின்றது.

*வளரும்...*



# சிறந்த வாழ்க்கைக்கான சிறப்பான பழக்க வழக்கங்கள்



## சரியான வேலை அட்டவணையை பின் தொடருதல்



நமது அன்றாட வாழ்க்கையில் நாம் செய்ய வேண்டிய வேலைகள் மற்றும் கடமைகளை ஒரு அட்டவணை வடிவில் ஒழுங்குப்படுத்தி எந்த நேரம் என்ன வேலையை செய்ய வேண்டும் என தீர்மானித்துக்கொள்ள வேண்டும் இது எமது தினசரி வேலைகளை இலகுவாகவும் விருப்பத்துடனும் மேற்றக்கொள்ள உதவும்.

## ஆரோக்கியமான உணவுகளை உற்கொள்ளல்




நாம் தினசரி உண்ணும் உணவுகள் எமது உடல் ஆரோக்கியத்திற்கு உகந்ததா என அறிந்துகொண்ட பின்னரே உடற்கொள்ளை வேண்டும். இது எமது வாழ்க்கையில் ஒரு முக்கியமான பகுதியாகும். பொருத்தமான மற்றும் ஆரோக்கியமான உணவுகளை உண்ணுதல் எம்மை நோயிலிருந்து விளக்கி வைக்கும் அத்தோடு சிறந்த வாழ்க்கைக்கான ஒரு அடிவாரமாக அமையும்.

## உடற்பயிற்சி



உடற்பயிற்சி மேற்கொள்ளல் எமது சிறப்பான வாழ்க்கையுடன் சிறந்த தொடர்பை கொண்டுள்ளது காரணம் தினசரி நாம் மேற்க்கொள்ளும் உடற்பயிற்சி மூலம் பலவகையான நோய்களிலிருந்து எம்மை பாதுகாக்கலாம் மேலும் எமது அழகை மெருகூட்டலாம் அது மட்டுமல்லாமல் உடற்பயிற்சியினால் எமக்கு கிடைக்கும் புத்துணர்வு எமது வாழ்க்கையில் புதிய நல்ல முடிவுகளை மேற்கொள்ளவும் உதவியாக அமையும்.

## கல்வியறிவை வளர்த்தல்



இக்காலம் மட்டுமல்லாமல் எக்காலமும் அனைவருக்கும் கண்டிப்பாக இருக்க வேண்டியது கல்வியறிவு. இதுவே மிக முக்கியமான செல்வம். கல்வியறிவு எம்முடன் இருக்கும் வரை நாம் எந்த சூழ்நிலையிலும் வாழ்க்கையை வெற்றி கொள்ளலாம்.

கல்வி என்பது மிகப்பெரும் கடல் அதை எங்கும் எப்போதும் எந்த வயதிலும் கற்றுக்கொள்ளலாம். கல்வி கற்க தவறியவர்கள் கூட இனி காலம் தாழ்த்தாமல் தனக்கென முடியுமான அளவில் சில துறைகளில் தனக்கென்ன ஒரு அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

## விடா முயற்சி




முயற்சியை கைவிடாமல் இருப்பவர்கள் எத்தனை தோல்விகள் வந்தாலும் இறுதியில் சிறப்பான வெற்றியை அடைவர். இதற்கு இன்று உள்ள அனைத்து சாதனையாளர்களும் உதாரணமாகும். விடா முயடர்ச்சி விஷ்பரூப வெற்றி. நாம் மேற்றக்கொள்ள ஒவ்வொரும் முயற்சியும் எமக்கு வெற்றியுடன் கூடிய சிறந்த வாழ்க்கையை தரும்.

## பணத்தை கையாளும் முறை



எம்மிடம் உள்ள பணத்தை மற்றும் எமது வருமானங்களை நாம் கையாளும் முறை எமது வாழ்க்கை எவ்வாறு இருக்குமென தீர்மானிக்கும். வரவு செலவுகளை பராமரித்தல், சேமிப்பு பழக்கத்தைத் தொடருதல் போன்ற பணம் தொடர்பான சில விடயங்கள் எமது வாழ்க்கையை ஒரு நெறிப்படுத்தும்.

## சுற்றுசூழலை பாதுகாத்தல்



எமது தனிப்பட்ட உடமைகளை மட்டுமல்லாது எமது சூழலையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். ஆறு மாதங்களுக்கு ஒரு முறையாவது நண்பர்கள் அல்லது அயலவருடன் இணைந்து சிரமதானம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுதல் எமது மனதையும் உடலையும் ஆரோக்கியமாக்கும்.

## எமது தொழிலை நேசித்தல்



நாம் செய்யும் தொழிலே எமது வாழ்க்கையை சிறப்பாக மாற்றும் நேர்மையாகவும் விருப்பத்துடனும் நாம் செய்யும் தொழிலை மேற்கொண்டால் அந்த தொழில் எமக்கு மேலும் மேலும் முன்னேற்றம் தர வழி வகுக்கும்.

## சுத்தம் சுகம் தரும்



சுத்தம் என்பது ஒவ்வொரு மனிதனும் கடைப்பிடிக்க வேண்டியது. தலை முதல் கால் வரை எமது சுத்தத்தை நாம் கவனத்திற்கொள்ள வேண்டும் இதனால் நாம் அழாகவும் ஆரோக்கியமாகவும் தன்னம்பிக்கையுடனும் வாழலாம்.

## வாசித்தல்



வாசித்தல் ஒரு மனிதனை பூரணமாக்கும் என்பது முன்னோர்களின் கருத்து அது உண்மையும் கூட நாம் நமது வாழ்க்கையில் எந்த அளவு வாசித்தலை அதிகமாக்குகின்றோமோ அந்த அளவு எமது வாழ்க்கையில் அதிக விடயங்களை கற்றுக்கொள்கின்றோம். இதன் மூலம் எமது வாழ்க்கை தரமும் உயரும்.

## உண்மை நேர்மை



உண்மை, நேர்மைகளை கையாளும் ஒரு மனிதன் தன் வாழ்வில் நிரந்தரமான வெற்றியை நிச்சயம் அடைவான் என்பதே உண்மை. உண்மை என்றும் தோல்வியை தராது நேர்மையான செயல் நிலையான சந்தோஷத்தையே தரும்.

**"நல்ல பழக்கங்கள் சிறப்பாக வாழ உதவும்"**

**- இரா சஹானா**


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

ALL DEBT SOLUTIONS CR PLAN

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு


MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York





19

## தாக்குதல் – 3

அது நாங்கள் ‘உறவு’ எனும் எங்கள் சொந்தத் திரைப்படத்தை உருவாக்கிக் கொண்டிருந்த காலம். எம்மைப் பொறுத்தவரை ஒரு திரைப்படத்தை உருவாக்குவதில் உள்ள சுமையை என் இதயமே நீ நன்கு அறிவாய்.



இதை விட எமது கவின் கலா லயா நுண் கலைக் கல்லூரியின் மூலம் வட அமெரிக்க தமிழ்ச் சங்கத்தின் (FETNA) விழாவுக்காக ஒரு நாட்டிய நாடகத்தை வழங்குவதாக ஒப்புக் கொண்டிருந்தோம். அதற்கான பாடல் ஒலிப்பதிவு எஸ். வி. வர்மன் அவர்களின் மிடி மெலடிஸ் (Midi Melodies) கலையகத்தில் செய்து கொண்டிருந்தோம்.



2008 ஜூன் மாதம் 16 ஆம் திகதி,

ஒரு மாலை வேளை.

வயலின் இசைக்காகவும் பெண்குரலை பாடுவதற்காகவும் சங்கீத ஆசிரியை திருமதி விஜயலக்ஸ்மி சீனிவாசகம் அவர்கள் வந்திருந்தார். அவரது இசைப்பகுதி ஒலிப்பதிவு செய்யப்பட்ட பின்னர் ஆண்குர லுக்குரிய பகுதியை நான் பாட வேண்டிய நேரம்.

ஒலிப்பதிவில் வர்மன் இருந்து இயக்க, கலையகத்தின் சிறிய ஒலிப்பதிவுக் கூடத்தில் நான் பாடுவதற்குத் தயாராக காதில் கேள்கருவியையும் (Earphone) அணிந்து கொண்டு ஒலிவாங்கியின் முன் நின்றேன்.

ஒலிப்பதிவாளராக வர்மன் அவர்கள் அறிவுறுத்தல்களைத் தந்து கொண்டிருந்தார். வெளியில் ஒரு பக்கத்தில் எனது துணைவியாரும் திருமதி விஜயலக்ஸ்மி அவர்களும் பேசிக் கொண்டிருந்தனர்.

ஒலிப்பதிவு ஆரம்பித்தது. நான் பாடத் தொடங்கினேன்.

பாடிக்கொண்டிருந்த வேளையில் இதயமே, நான் தாளம் தப்பாமல் தான் பாடினாலும் நீ தாளம் தப்பத் தொடங்கிவிட்டாய். பாடி முடித்துவிடலாம் என்று நான் தொடர்கின்றேன்.

பட பட பட பட... வேகமாக..

மிக மிக வேகமாக...

என் இதயமே நீ அடிக்க...

நெஞ்சு எரிவது போலவும் மூச்சு திணறுவது போலவும் இருந்தது.


முதலில் அதை கடுமையான ஒன்றாகவோ அல்லது இதயமே, உனக்கு பெரிய பிரச்சினை உண்டாவதாகவோ உறுதியாக நினைக் காமல் தொடர்ந்தும் நான் பாடிக்கொண்டிருந்தேன். கொஞ்சம் கொஞ்சமாக மூச்செடுக்க முடியாமல் சிரமம் ஏற்படுவதை அதிகம் உணரத் தொடங்கினேன். நெஞ்சினுள் அக்கினி கொழுந்து விட்டு எரிவது போலவும் இருந்தது.

அந்த வேளை என் இதயமே, ஒவ்வொரு கணப் பொழுதிலும் உன்னை மிக அவதானமாக கண்காணித்துக் கொண்டிருந்தது உன் துணையான ICD. உனது வேகம் நெடுஞ்சாலையில் வேக எல்லையை முற்றாக மீறி கட்டுக்கடங்காமல் வாகனம் ஒன்று ஓடிய வேகம். வீதிப் பாதுகாப்பு காவல்துறையினர் சமிக்ஞை விளக்குகளோடு பின்னால் துரத்துவதுபோல ICD உன்னைத் தொடர்ந்து துரத்தி பலமுறை எச்சரித்து மின்னலைகளை (Pacing) அனுப்பி சரிப்படுத்த முயன்றது.

ஆனாலும் இதயமே நீ கட்டுக்கடங்கவில்லை. ICD உன்னைக் கட்டுப்படுத்த முயற்சித்து தோல்வி கண்ட நிலையில்... அந்த வாகனம் ஒரு பாறையில் மோதிச் சிதறுண்டு போகும் கணம். நான் மயக்கமுற்று செயலிழந்து விழுகிறேன்.

அந்தக் கணம் ஒரு மரணப் பொழுது.

புராணக் கதைகளில் சொல்லப்பட்டது போல இயமன் பாசக்கயிற்றினை வீசி எறிந்த ஒரு மரணப் பொழுது. வேறு வழியில்லை. உயிர் ஆபத்து என்ற நிலையில் இதயமே, ICD ஒரு சக்தி மிகுந்த மின்னதிர்ச்சியை (Electric Shock) உனக்கு அளித்ததன் மூலம் உன் கட்டுக்கடங்கா வேகத்தை - அதாவது உன்



இயக்கத்தையே முற்று முழுதாக நிறுத்தி - உன்

தாறுமாறான இயக்கத்தைச் செயல் இழக்க செய்து - மீளவும் உன்னை ஒழுங்காக இயங்க வைத்தது.

தவறாக இயங்கும் கணனியை அதன் சக்தியை (Power) முற்றாகத் துண்டித்து மீண்டும் சக்தியை கொடுத்து புதிதாக இயங்க வைப்பதற்கு ஒப்பானது இதுவென்று சொல்லலாம்.

ஆனால் நிறுத்திய கணனி மீண்டும் சரியாக இயங்காமல்

போனாலும் போகலாம். அதுபோலவே இதயமே நீயும் முற்றாக நின்று

போனாலும் போகலாம். இப்படி கதை முடிந்து போன வரலாறுகளும் நிறைய உண்டு. ஆனால் நல்ல வேளை இதயமே, நீ மீண்டும் ஒழுங்காக இயங்கத் தொடங்க வீழ்ந்த நான் மெதுவாக எழுந்தேன். ஒரு மரணத்திலிருந்து மீண்டும் நான் உயிர்த்தேன்.

வெளியில் எனது துணைவியாரும் திருமதி விஜயலக்ஸ்மி அவர்களும் கலையகக் கண்ணாடியின் ஊடாக நான் நின்று பாடுவதை வெளியிலிருந்து பார்க்கக் கூடிய தூரத்திலேயே இருந்த போதும் எனக்கு இதயப் பிரச்சினை ஏற்பட்டதையோ அல்லது நான் விழுவதையோ அவர்கள் அறியவில்லை.

இதுபோலவே ஒலிப்பதிவில் இருந்த வர்மனும் என்னைப் பார்க்கக் கூடிய விதத்தில் இல்லாமல் ஒலிப்பதிவில் கவனமாக இருந்தமையால் உடனும் தெரிந்து கொள்ள வாய்ப்பிருக்கவில்லை.

ஆனாலும் எங்கே என் குரலைக் காணவில்லை... என்ன சத்தத்தைக் காணோமே... என்று நான் திடீரென பாடாமல் இருந்த நிலையை அவதானித்தார். எனக்கு என்ன நடந்தது என்று அவர் அங்கிருந்து திருப்பிப் பார்த்தபோது நின்று பாடிய என்னை காணாததால் என்ன ஏது என்று அறிய உடனும் ஓடி வந்தார்.

அப்போது வீழ்ந்த நான் நிலத்திலிருந்து மெதுவாக எழும்ப முயற்சித்த வேளை, அவர் பதட்டத்தோடு கதவைத் திறந்து என்னைக் கைத்தாங்கலாக வெளியே கூட்டிவர கதைத்துக் கொண்டிருந்த துணைவியாரும் ஆசிரியை விஜயலக்ஸ்மியும் பயத்துடன் என்ன ஏது என்று விசாரித்தபடி எழுந்து அருகே வந்தனர். துணைவியார் பயத்தோடு என்னை அணைத்தபடி நின்றார். வர்மன் அவசர அவசரமாக 911 ஐ அழைத்தார்.

நான் கொஞ்சம் ஆறிவிட்டு நடந்ததைச் சொன்னேன்.

இதயமே, ஒவ்வொரு கணப் பொழுதிலும் உன்னை மிக அவதானமாக கண்காணித்துக் கொண்டிருந்த உன் துணையான ICD தனது திறமையை வெளிப்படுத்தி என்னைக் காப்பாற்றிவிட்டது.










ICDஐ பொருத்தும் போது பலமுறை யோசித்து, பின்னடித்து பின்னடித்து நான் இணங்கியது பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன்.

ஆனால் அதன் முக்கியத்துவத்தை - அதன் பெறுமதியை - நான் இப்போது முற்று முழுதாக உணர்ந்தேன். ICD என்னைக் காப்பாற்றியது.

ICD ஒழுங்காக வேலை செய்வது என்பது ICD எனக்கு பொருத்தப் பட்டதன் பின்னர் முதன் முதல் நிரூபணம் ஆகியது.

பத்துப் பதினைந்து நிமிடங்களுக்குள் அம்புலன்ஸ், தீயணைக்கும் படையினர் ஒன்றுக்குப் பின்னால் ஒன்றாக வந்து சேர்ந்தனர். என்னை விசாரித்து - பரிசோதித்து அம்புலன்சில் ஏற்றிக் கொண்டு சென்றனர்.

மரணத்தை எதிர் கொண்ட நான் மீண்டும் யேசுநாதர் போல உயிர்த்தெழுந்தேன்.


# அருள் மிகு நல்லூர்க்கந்தசுவாமி கோவில்

20 Nugget Ave #01,Scarborough, ONT. (Mc Cowan/Sheppard) தொலைபேசி இலக்கம் -4162939004





## நல்லூர்க்கந்தன் 27 தின மகோற்சவ விஞ்ஞாபனம்

01.08.2022 திங்கள் முதல் 28.08.2022 ஞாயிறுக்கிழமை வரை

குகனேய அடியார்களே !

நிகழும் மங்களகரமான சுபகிருது வருசத்திற்கான நல்லூர் முருகன் 27 தினத்திருவிழா கனடா நாட்டில் ரொறன்ரோ மாநகரின் எழில் நகராம் ஸ்காபரோ பகுதியில் எழுந்தருளியிருக்கும் நல்லூர்க்கந்தன் என்ற திருநாமத்துடன் கூடிய முருகப் பெருமானுக்கு 27 தினமும் திருவிழா நடைபெறத்திருவருள் கூடியுள்ளது. யாழ்ப்பாணம் நல்லூர்க்கந்தன் திருவிழாவை போன்றே இங்கும் அதே காலப்பகுதியில் அழகு மிகுந்த அலங்காரக்காட்சியுடன் அபிசேகம் ,விசேடபூசை,சுவாமிவீதிவலம் வருதல் போன்ற அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பாக ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. முருகன் அடியார்கள் அனைவரும் திருவிழாக்காலங்களில் ஆலயத்திற்கு வருகை தந்து நல்லூர்க்கந்தவேலனின் திருவருளைப்பெற்று வாழ்வீர்களாக.

| திகதி | கிழமை | நாள் | விசேடதிருவிழாக்கள் |
|---|---|---|---|
| 01.08.22 | திங்கள் | 00 | கணபதிஹோமம் (காலை) |
| 02.08.22 | செவ்வா | 01 | கொடியேற்றம் |
| 05.08.22 | வெள்ளி | 04 | வரலஸ்மி விளக்குப்பூஜை. |
| 09.08.22 | செவ்வா | 08 | பிரதோசம் |
| 11.08.22 | வியாழ | 10 | மஞ்சம். |
| 14.08.22 | ஞாயிறு | 13 | சங்கடஹரசதுர்த்தி |
| 17.08.22 | புதன் | 16 | அருணகிரிநாதர் உற்சவம் |
| 19.08.22 | வெள்ளி | 18 | கிருஷ்ணஜெயந்தி திருவிழா கார்த்திகை கற்பூரத்திருவிழா |
| 20.08.22 | சனி | 19 | சூரியோற்சவம் |
| 21.08.22 | ஞாயிறு | 20 | சந்தானகோபாலர் திருவிழா |
| 22.08.22 | திங்கள் | 21 | கஜவல்லி மஹாவல்லி திருவிழா |
| 23.08.22 | செவ்வா | 22 | மாம்பழத்திருவிழா, |
| 24.08.22 | புதன் | 23 | சப்பறம், பிரதோசம் |
| 25.08.22 | வியாழ | 24 | தேர்த்திருவிழா |
| 26.08.22 | வெள்ளி | 25 | தீர்த்த உற்சவம் |
| 27.08.22 | சனி | 26 | திருக்கல்லியாணம் |
| 28.08.22 | ஞாயிறு | 27 | வைரவர் உற்சவம் |

**காலை DAY TIME**

காலை 07:00 மணி திருவனந்தல் 1ST Pooja 7:00 AM
காலை 10:00 மணி காலசந்தி 2nd Pooja 10:00 AM
காலை 10:30 மணி கும்ப பூஜை Kumba pooja 10:30 AM
பகல் 12.00 மணி விசேட பூஜை 3rd Pooja 12:00 PM
பகல் 12:20 மணி வசந்த மண்டபப்பூஜை Vasantha Mandapa Pooja
பகல் 01:00மணி அன்னதானம் வழங்கப்படும். Annathanam Distribution

**மாலை NIGHT TIME**

மாலை 5:30 மணி சாயரட்ச்சை 1ST Pooja 5:30 PM
மாலை 6:15 மணி கும்ப பூஜை Kumba pooja 6:15 pm
மாலை 7:00 மணி மூலஸ்தானபூசை Main Pooja 7:00 Pm
இரவு 7:30 மணி வசந்த மண்டபப்பூஜை Vasantha Mandapa Pooja 7:30 Pm
இரவு 7:50 மணி சுவாமி உள்வீதி வலம் Sri Murugan Procession 7:50 pm

பகல்.இரவுதிருவிழா உபயங்கள் செய்ய விரும்வோர் ,வரலக்ஸ்மி விளக்குப்பூசை கலந்து கொள்ளவிரும்வோர் கற்பூரச்சட்டி,காவடிபோன்ற நேர்த்திக்கடன் செய்யவுள்ளோர் தேர்த்திருவிழாஅன்றுஆறுமுப்பெருமானுக்கு108பால் குடபிசேகம்நிகழவுள்ளதால் பால்குடஅபிசேகத்தில் கலந்தகொள்ளவிரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை பதிவுசெய்யவும்

**25.08.2022 வியாழக்கிழமை தேர்த்திருவிழா**

காலை 6:00 மணி மூலமூர்த்திக்கு அபிஷேகம்
காலை 7:00 மணி மூலஸ்தானபூசை
காலை 8:00 மணி வசந்தமண்டபபூசை
காலை 09:00 மணி தேர்புறப்பாடுதல்
காலை 10:00 மணி இருப்பிடம்சேர்தல்
பகல் 12:00 மணி பச்சைசார்த்தல் (தேரிலிருந்துசுவாமிஇறக்குதல், பிராயச்சித்தாபிஷேகம்,சண்முகார்ச்சனை)அன்னதானம் வழங்கல்

**அடியார்கள் அனைவரும் திருவிழாக்காலங்களில் ஆலயத்திற்க்கு வருகை தந்து நல்லூர்க்கந்தவேலனின் திருவருளைப்பெற்று வாழ்வீர்களாக.** தொலைபேசி இலக்கம் -416 2939004

# "இந்தியாவின் சதுரங்க சக்தியாக விளங்குகிறது தமிழகம்": சென்னையில் பிரதமர் மோடி புகழாரம்



"தமிழகம் சதுரங்கத்துடன் வலுவான வரலாற்றுத் தொடர்பைக் கொண்டுள்ளது. இதனாலேயே இந்தியாவின் சதுரங்க சக்தியாக தமிழகம் விளங்குகிறது" என்று பிரதமர் மோடி புகழாரம் சூட்டினார்.நேரு உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற செஸ் ஒலிம்பியாட் தொடக்க விழாவில் பிரதமர் மோடி பேசுகையில், "மிகக் குறைந்த காலத்தில் ஒலிம்பியாட்டுக்கு மிகச் சிறந்த ஏற்பாடுகளை நாம் செய்துள்ளோம்.

விருந்தினர்கள் கடவுளுக்கு நிகரானவர்கள் என்ற நம்பிக்கை இந்தியாவின் சிறப்பம்சமாகும் உலகின் பழமையான மிகச் சிறந்த வரலாற்றை கொண்டது தமிழகம். இயற்கையாகவே தமிழ்நாடு செஸ் விளையாட்டுடன் தொடர்பு கொண்டதுவிருந்தோம்பல் குறித்து ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவர் கூறியுள்ளார். 'இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு' . இந்தியர்கள், விருந்தினர்களை கடவுளாக கருதுபவர்கள்.இந்தியாவில் நடந்து வரும் செஸ் ஒலிம்பியாட் நிகழ்விற்கு உங்கள் அனைவரையும் வரவேற்கிறேன்.

சதுரங்கத்தின் தாயகமான இந்தியாவிற்கு மிகவும் பெருமைமிகு சதுரங்கப் போட்டி வந்துள்ளதுமுன் எப்போதும் இல்லாத அதிகபட்ச எண்ணிக்கையில், இதில் நாடுகள், அணிகள் பங்கேற்கின்றன.மிக அதிக எண்ணிக்கையில் பெண்கள் பிரிவிலும் பங்கேற்பு உள்ளது. இப்போது முதன் முறையாக செஸ் ஒலிம்பியாட் ஜோதி தொடர் ஓட்டத்துடன் தொடங்கியுள்ளது. தொடர் ஓட்டம் இந்தியாவிலிருந்து தொடங்குவது பெருமைக்குரிய விஷயமாகும்75வது ஆண்டு சுதந்திர தினத்தையொட்டி 75 நகரங்களுக்கு செஸ் ஒலிம்பியாட் ஜோதி சென்றது.

44வது செஸ் ஒலிம்பியாட் போட்டிகள் பல முதன்மைகளையும், பதிவுகளையும் கொண்டுள்ளது. சதுரங்கத்தின் பிறப்பிடமான இந்தியாவில் முதன் முறையாக செஸ் ஒலிம்பியாட் நடத்தப்படுகிறது. 30 ஆண்டுகளில் முதல் முறையாக இது ஆசியாவுக்கு வந்துள்ளதுதமிழகம் சதுரங்கத்துடன் வலுவான வரலாற்றுத் தொடர்பைக் கொண்டுள்ளது. இதனாலேயே இது இந்தியாவின் சதுரங்க சக்தியாக விளங்குகிறது. இந்தியாவின் பல செஸ் கிராண்ட் மாஸ்டர்களை உருவாக்கியுள்ளது. இது சிறந்த மனம், துடிப்பான கலாசாரத்தின் பிறப்பிடமாக உள்ளது.

உலகின் பழமையான மொழி தமிழ். விளையாட்டு என்பது மிகவும் அழகானது. ஏனெனில் அனைவரையும் ஒன்றிணைக்கும் அற்புத சக்தியை கொண்டிருக்கிறது. விளையாட்டுக்கள் மக்களையும், சமூகங்களையும்நெருக்கமாக்குகிறது. விளையாட்டுக்கள் கூட்டுணர்வை வளர்க்கிறது.இந்தியாவில் தற்போது இருப்பதைவிட சிறப்பான நேரம் முன் எப்போதும் இருந்தது இல்லை என்பதை பகிர்ந்துகொள்ள நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஒலிம்பிக், பாராலிம்பிக், டெஃப்லிம்பிக், ஆகியவற்றில் இந்தியா தனது சிறப்பான செயல்களை வெளிப்படுத்தியது.நமது கலாசாரத்தின் விளையாட்டுக்கள் தெய்வீகமாக கருதப்படுவதால் அழகிய சிற்பங்களுடன் தமிழ்நாட்டில் உள்ள பல கோயில்கள் பல விளையாட்டுக்களை பிரதிநிதித்துவம் செய்கின்றன. எனவே 44வது செஸ் ஒலிம்பியாட் இங்கே நடைபெறுவது மிகவும் பொருத்தமானது. விளையாட்டுக்கள் அழகானவை, அனைவரையும் ஒன்றுபடுத்தும் அற்புதமான சக்தியை அது கொண்டிருக்கிறது.

நாம் ஒன்றுபட்டு இருக்கும்போது நாம் வலுவாக இருக்கிறோம். நாம் ஒன்றுபட்டு இருக்கும்போது நாம் சிறப்பாக இருக்கிறோம். விளையாட்டுக்கள் மூலம் இது நிகழ்கிறது. விளையாட்டில் திறமையை ஊக்கப்படுத்துவதும் விளையாட்டுக்கான அடிப்படைக் கட்டமைப்பில் முதலீடு செய்வதும் முக்கியமானது. விளையாட்டில் தோற்றவர்கள் இல்லை. இங்கே வெற்றியாளர்களும் இருக்கிறார்கள், எதிர்கால வெற்றியாளர்களும் இருக்கிறார்கள். 44வது செஸ் ஒலிம்பியாட் போட்டிக்கு இங்கு கூடியிருக்கும் அனைத்து அணிகள் மற்றும் வீரர்களுக்கு எனது வாழ்த்துகள்" என்று பிரதமர் மோடி பேசினார்.

## செஸ் ஒலிம்பியாட் தொடக்க விழாவில் திருக்குறளை மேற்கோள்காட்டி தமிழர்களை கவர்ந்த பிரதமர்

செஸ் ஒலிம்பியாட் தொடக்க நிகழ்வில் திருக்குறளை மேற்கோள் காட்டி பிரதமர் உரையாற்றியது அனைத்து தரப்பினரிடமும் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.தமிழகத்துக்கு வரும்போது மட்டுமின்றி, மக்களிடையே உரையாற்றும்போதும் அந்தந்த சூழலுக்கு ஏற்ப திருக்குறளை தனது உரையின் முக்கிய அங்கமாக சேர்ப்பதை பிரதமர் நரேந்திர மோடி வாடிக்கையாக வைத்துள்ளார்.அந்த வகையில் செஸ் ஒலிம்பியாட் போட்டிகளைத் தொடக்கிவைக்க நேற்று சென்னை வந்த பிரதமர் நரேந்திர மோடி, விழாவில் சிறப்புரையாற்றினார்.

அவர் தனது உரையில், 'இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தல் பொருட்டு' என்னும் குறளை மேற்கோள் காட்டி பேசினார்.வீட்டில் இருந்து பொருள்களைக் காத்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் போற்றி உதவி செய்வதற்காகத்தான் என்பதே இந்த குறளுக்கான பொருள்.உலகளவில் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்கள் செஸ் போட்டியில் பங்கேற்க தமிழகத்துக்கு வந்துள்ளனர். இந்தத் தருணத்தில் நமது விருந்தோம்பல் முறை குறித்து திருக்குறளை மேற்கோள் காட்டி பிரதமர் பேசி பெருமைப்படுத்தியது அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

# தமிழக மாணவர்களுக்கு சூடான பொங்கல், கிச்சடியுடன் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் அரசாணை வெளியீடு



தமிழகத்தில் முதல்கட்டமாக 1,545 அரசு தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் 1.14 லட்சம் மாணவர்களுக்கு சூடான காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. இதற்காக ரூ.33.56 கோடி நிதியை ஒதுக்கி அரசாணை பிறப்பித்துள்ளது.இதுகுறித்து சமூக நலத்துறை சார்பில் தலைமைச் செயலர் வெ.இறையன்பு வெளியிட்ட அரசாணையில் கூறியிருப்பதாவது:

ஏழை, எளிய சமூக குழந்தைகளின் காலடிகள் கல்விச்சாலையை எட்ட முடியவில்லை என்பதை கருத்தில்கொண்டு, ஒரு நூற்றாண்டுக்கு முன்னதாகவே பள்ளியில் உணவு அளிக்கும் திட்டத்தை சென்னை மாநகராட்சி நிர்வாகம் முன்மொழிந்து நிறைவேற்றியுள்ளது. கடந்த 1920ம் ஆண்டு சென்னை மாநகராட்சி மன்றத் தலைவராக இருந்த சர் பிட்டி தியாகராயரால் நாட்டிலேயே முதல்முறையாக மதிய உணவு திட்டம் அறிமுகம் செய்யப் பட்டது.அதன்பின், 1957ல் முன்னாள் முதல்வர் காமராஜரால் மதிய உணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. தொடர்ந்து முன்னாள் முதல்வர் எம்ஜிஆர் அறிவிப்பின்படி, 1982 ஜூலையில் சத்துணவு திட்டம் தொடங்கப்பட்டது.

அதை மேலும் சிறப்பாக செயல்படுத்தும் வகையில், 1989ல் சத்துணவுடன் முட்டை வழங்கும் திட்டத்தை அப்போதைய முதல்வர் கருணாநிதி அறிமுகப்படுத்தினார். தற்போது வாரம் 5 முறை முட்டை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, சத்துணவுத் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.இந்நிலையில், வாஷிங்டன் பல்கலைக்கழகம் மற்றும் சர்வதேச உணவு கொள்கை ஆராய்ச்சி நிறுவனத்தின் பொருளாதார வல்லுநர்கள், ஊட்டச்சத்து நிபுணர்களின் அறிக்கையில், 20062016 காலகட்டத்தில் பள்ளி செல்லும் குழந்தைகளின் வயதுக்கேற்ற உயரம் 13 முதல் 32 சதவீதம் வரை உயர்ந்திருப்பதற்கு சத்துணவு திட்டம் முக்கிய காரணம் என கூறப்பட்டுள்ளது.

இந்தியாவில் 3ல் ஒரு குழந்தை வளர்ச்சி குறைவாகவோ அல்லது அவர்கள் வயதுக்கேற்ற உயரத்தை அடையாமலோ இருப்பதற்கு முக்கிய காரணம் ஊட்டச்சத்து குறைபாடே ஆகும்.அதேபோல, தமிழகத்தில் அரசுப் பள்ளிகளில் பயிலும் சில குழந்தைகள் தற்போதும் வயதுக்கேற்ற உயரத்தை அடையாமல் அவர்களின் வளர்ச்சி தடைபடுவது தெரியவருகிறது. மேலும், ஊட்டச்சத்து குறைபாட்டால் அவர்கள் கல்வியில் கவனம் செலுத்த இயலாமல் போய்விடும் வாய்ப்பும் இருக்கிறது. இதை கருத்தில்கொண்டு கடந்த மே 7ம் தேதி சட்டப்பேரவையில் 110வது விதியின்கீழ் அறிவிப்பு ஒன்றை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.

அதில், அரசுப் பள்ளி மாணவர்களுக்கு இனிமேல் காலை சிற்றுண்டி வழங்கப்படும். நகர, கிராமப் பகுதிகளில் பள்ளிக்கு செல்லும் குழந்தைகள் காலையிலேயே புறப்பட்டு விடுகின்றனர். இதனால் பெரும்பாலான குழந்தைகள் காலை உணவு சாப்பிடுவது இல்லை என்ற தகவல் அரசுக்கு கிடைத்துள்ளது. பள்ளிகள் மிக தொலைவாக இருப்பது மட்டுமின்றி, சிலருடைய குடும்பச் சூழலும் இதற்கு காரணமாக இருக்கிறது. இதை மனதில் வைத்து இந்த திட்டத்தை தீட்டியுள்ளோம். முதல்கட்டமாக சில மாநகராட்சி, நகராட்சிகளிலும், தொலைதூர கிராமங்களிலும் இத்திட்டம் தொடங்கப்படும்.

1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு அனைத்து பள்ளி நாட்களிலும் காலை வேளையில் சத்தான சிற்றுண்டி வழங்கப்படும். இதை உள்ளாட்சி அமைப்புகள் மூலம் வழங்குவோம். படிப்படியாக இத்திட்டம் அனைத்துப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என்று முதல்வர் அறிவித்தார்.இந்த அறிவிப்பை செயல்படுத்தும் வகையில், சமூக நல இயக்குநர் அரசுக்கு கருத்துரு அனுப்பினார். அதில், சென்னை உள்ளிட்ட மாநகராட்சிகள், நகராட்சிகள், கிராம ஊராட்சிகள், மலைப்பகுதியில் முதல்கட்டமாக 1,545 அரசு தொடக்கப் பள்ளிகளில் 1 லட்சத்து 14,095 மாணவ, மாணவிகளுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தை ரூ.33.56 கோடியில் செயல்படுத்த அனுமதி அளிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இதை கவனமாக பரிசீலித்த அரசு, 1,545 தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தை இந்த ஆண்டில் முதல்கட்டமாக செயல்படுத்த ரூ.33.56 கோடி நிதி ஒதுக்கி உத்தரவிட்டுள்ளது. கூடுதல் செலவு ஏற்பட்டால் அதுகுறித்து பின்னர் முடிவெடுக்கப்படும். நாட்டிலேயே முன்னோடியாக அறிமுகப்படுத்தப்படும் இத்திட்டம், 'முதல்வரின் காலை உணவுத் திட்டம்' என்ற பெயரில் நடைமுறைப்படுத்தப்படும். திட்டத்தை கண்காணிக்க மாநில, மாவட்ட, பள்ளி அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்படும். இவ்வாறு அரசாணையில் கூறப்பட்டுள்ளது.

காலை சிற்றுண்டியை பொறுத்தவரை உப்புமா, கிச்சடி, பொங்கல் ஆகியவை வழங்கப்பட உள்ளது. திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில் ரவா உப்புமா, சேமியா உப்புமா, அரிசி உப்புமா, கோதுமை ரவா உப்புமா இவற்றில் ஏதேனும் ஒன்றுடன் காய்கறி சாம்பார் வழங்கப்படும். செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் ரவா கிச்சடி, சேமியா கிச்சடி, சோள கிச்சடி, கோதுமை கிச்சடி இவற்றில் ஏதாவது ஒன்று வழங்கப்படும். வெள்ளிக்கிழமை கிச்சடியுடன் ரவா கேசரி அல்லது சேமியா கேசரி வழங்கப்படும்.புதன்கிழமை மட்டும் ரவா பொங்கல் அல்லது வெண்பொங்கலுடன் காய்கறி சாம்பார் வழங்கப்படும். சமைத்தபின் 150 முதல் 200 கிராம் உணவு, 60 மிலி காய்கறி சாம்பார் வழங்கப்படும். வாரத்தில் குறைந்தது 2 நாட்களாவது உள்ளூரில் கிடைக்கும் சிறுதானியங்களால் தயாரிக்கப்பட்ட காலை உணவு வழங்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# இவ்வார ராசிபலன்

**29-07-2022 வெள்ளி தொடக்கம் 04-08-2022 வியாழன் வரையும்**


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
**'ராஜயோகம்'**
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377




**மேஷம்:** விரும்பிய பொருள் சேரும் வாரம். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். பயணத்தால் அனுகூலம் உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உறவுகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். நண்பர்களால் நன்மை உண்டு. விவேகம் வெற்றி தரும். குடும்ப ஒற்றுமை மேம்படும். கடன் தொல்லை அகலும். தெளிவான முடிவுகள் உதயமாகும். எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். எண்ணங்கள் ஏற்றம் பெறும். பாதிப்புகள் அகலும். பிரார்த்தனையால் பலன் உண்டு. தொலைதூரத் தொடர்பு லாபம் தரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். பொருளாதாரம் உயரும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். கணவன், மனைவி ஒற்றுமை வளரும். வெற்றிப்பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். திட்டமிட்ட காரியங்களில் ஒன்றிரண்டு நடந்தேறும். போட்டிகள் உருவாகி மறையும். பயணம் தவிர்ப்பது நல்லது. பொருளாதார ஏற்றம் பெறும். முகப்பொலிவு கூடும். உடல்நலம் சிறக்கும். தெம்பும், தைரியமும் கூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப் போடவும். திருமணமாகாத மங்கையருக்கு திருமண பாக்கியம் கைகூடும். கொடுக்கல், வாங்கலில் சுமுக நிலை ஏற்படும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். பங்குச்சந்தை லாபம் கிட்டும். பணிவான பேச்சுக்கள் தேவை. இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். பித்ருக்கள் சாபம் நீங்கும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். செய்த்தொழிலில் முன்னேற்றம் உண்டு. சேமிப்பு உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பிரம்மசக்தி, அதிர்ஷ்ட எண்: 2,9,5,4
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,C




**ரிஷபம்:** சச்சரவுகள் அகலும் வாரம். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். அரசியல்வாதிகள் ஆன்மீகவாதிகள் உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். குலதெய்வ வழிபாடு மேன்மை தரும். வேண்டும் வரம் கிட்டும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். கணவன், மனைவி உறவில் களிப்புறவு உண்டாகும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். பண நடமாட்டம் கூடும். செய்த்தொழில் சிறப்படையும். இனிப்பான செய்திகள் வரும். நீண்ட நாளைய நோய் விலகும். வெளிநாட்டு தொடர்பு ஆதாயம் தரும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். இல்வாழ்வில் இனிமை கூடும். தென்றல் வீசும். எதிர்ப்புக்கள் விலகும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்கள் நலம் தரும். இல்லத்தில் மனமகிழ்ச்சி கிட்டும். பணப்புழக்கம் சரளமாகும். கடன்சுமை குறையும். நலமே விளையும் இனிய வாரமாகும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். புதிய வேலை முயற்சி பலிதமாகும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். அந்நிய தேச பயணம் உண்டு. இரும்பு தொழில் ஏற்றம் தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பாராட்டுக்கள் கூடும். கடன் விஷயத்தில் கவனம் தேவை. உறவினர் வருகையால் கலகலப்புக் குறையும். செயல்பாட்டில் கவனம் தேவை. எண்ணங்கள் பலிதமாகும். தாய் வழி தகராறுகள் குறையும். கனவுகள் பலிதமாகும். கௌரவம் உயரும். கடன் சுமை குறையும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். பேச்சில் நிதானம் தேவை. பூமி வாங்கும் யோகம் உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குபேர பகவான், அதிர்ஷ்ட எண்: 4,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,H




**மிதுனம்:** பெண்களால் ஆதாயம் கிடைக்கும் வாரம். தேவைகள் பூர்த்தியாகும். மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். கலைத்தொழில் கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். பாதகமான சூழ்நிலை அகலும். பக்குவமான பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். நல்லோர்களின் வாழ்த்து அதிகரிக்கும். பயணத்தால் அனுகூலம் உண்டு. சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். மனச்சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பழையக் கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். வாகனத்தால் கவனம் தேவை. வம்பு தும்புகள் ஒழியும். வெளிவாட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். மற்றவர்களிடம் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. கலகலப்பான செய்திகள் வந்து சேரும். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆரோக்யம் அதிகரிக்கும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். கமிஷன் தொழில் லாபம் தரும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்த தொழில் பெரும் லாபம் தரும். இல்லம் தேடி வாய்ப்பு வரும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. மாணவர்கள் உற்சாகம் கூடும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூர தொடர்பு லாபம் தரும். பாக்கெட்டில் காசும் கரையாது. தொட்டது துலங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வீரமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 2,4,9,1
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,K




**கடகம்:** பிள்ளைகளால் பெருமை சேரும் வாரம். கையிருப்புகள் கரையும். உறவினர்களால் சஞ்சலம் ஏற்படும். புது முயற்சிகள் தாமதமாகும். பங்குச்சந்தை லாபம் தரும். பணியில் மாற்றம் ஏற்படும். பயணத்தில் கவனம் தேவை. குடும்ப ஆரோக்யம் சீராகும். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். வியாபாரிகளுக்கு கவனம் தேவை. தொழிலாளர்களுக்கு உயர்வுகள் கிடைக்கும். திருப்புமுனையான காலம். தங்க நகைகள் சேரும். உடல்நலனில் அக்கறை தேவை. செல்வாக்கு உயரும். மாணவர்களுக்கு எச்சரிக்கை தேவை. நல்ல செய்திகள் நாடி வரும். முயற்சிகள் வளர்ச்சி அடையும். கௌரவத்தில் கவனம் தேவை. கலக்கமான மனநிலை காணப்படும். பயணம் அனுகூலம் தரும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். எண்ணம் வண்ணமயமாகும். எதிர்ப்புக்கள் தவிடுப் பொடியாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். புகழ்ச்சி அதிகரிக்கும். பணியில் இடமாற்றம் ஏற்படும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உதவிகள் குவியும். நீண்ட கால எண்ணம் நிறைவேறும். போதிய தனவரவு இருக்கும். மாலை நேரத்தில் கவனம் தேவை. பொறுப்புகள் கூடும். சேமிப்பு அதிகமாகும். புதிய சிந்தனை உதயமாகும். கண்ணாடி பொருட்கள் சேதம் உண்டாகும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். பணவரவு உண்டு. அத்தியாவசிய செலவுகள் ஏற்படும். உற்சாகம் அதிகரிக்கும். உயர்வுகள் தாமதமாகும். தன சேர்க்கை உண்டு. மனநிம்மதி குறையும். அலைச்சல் அதிகரிக்கும். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உழைப்பு கடுமையாக இருக்கும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. பாக்கிகள் வசூலாகும். பணியாட்களிடம் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீபொன்னியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,5,4,1
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,T




**சிம்மம்:** வெற்றிச் செய்தியை தொட்டு ரசிக்கும் வாரம். கலை ஆர்வம் பெருகும். பொருளாதார வளம் மேம்படும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். உறவினர்கள் வருகை ஏற்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. செல்வாக்கு உயரும். முன் கோபம் தவிர்க்கவும். மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். வர்த்தக தொழில் லாபம் தரும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேரிடும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். புதிய சொத்து சேரும். மாற்று இன உதவி கிட்டும். ஆடை, அணிகலன் சேரும். பெண்களுக்கு யோகம் கூடும். குழப்பங்கள் நீங்கும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். எதிரிகள் பலம் குறையும். நல்லவர் நட்பு கிட்டும். தாய்வழி உறவில் கவனம் தேவை. தோற்றப் பொலிவு கூடும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். அரசு வாய்ப்பு தடைப்படும். செயல் திறமை அதிகரிக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். புது முயற்சிகள் பலன் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். கடன்சுமை குறையும். கனவுகள் பலிதமாகும். கௌரவம் உயரும். ஆசைகள் நிறைவேறும். பணியில் இடமாற்றம் ஏற்படும். திட்டமிட் காரியம் வெற்றி பெறும். அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். விரோதங்கள் விலகும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தெம்பும், தைரியமும் கூடும். திருமணமாகாத மங்கையருக்கு திருமண பாக்கியம் கைகூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காட்டேரி முனிசாமி, அதிர்ஷ்ட எண்: 4,6,7,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,L




**கன்னி:** புகழும், புண்ணியமும் கிடைக்கும் வாரம். கருத்து வேறுபாடுகள் விலகும். சகோத வகையில் சகாயம் கிடைக்கும். விரயம் குறையும். வியாபாரம் சிறக்கும். மனைவி பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். திடீர் பயணம் ஏற்படும். தொழில் வளர்ச்சி கூடும். ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். பயணத்தில் கவனம் தேவை. வயிறு உபாதைகள் வந்து போகும். களவு போன பொருள் திரும்ப கிடைக்கும். வார்த்தைகளில் கவனம் தேவை. சோம்பல் அதிகரிக்கும். பதவி உயர்வு தாமதமாகும். சாதனையை சந்திப்பீர்கள். பொருள் வரவு ஏற்படும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். புதிய தொழில் வாய்ப்பு ஏற்படும். பொது வாழ்வில் புகழ் கூடும். பெற்றோர்களால் பெருமை சேரும். முயற்சிகள் பலிதமாகும். நல்ல செய்திகள் நாடி வரும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். தடைகள் அகலும். உயர்பதவி யோகமுண்டு. உற்சாகம் களைகட்டும். மாற்றங்களை சந்திப்பீர்கள். பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. ஆலய தரிசனம் அமைதி தரும். வெளியூர் பயணம் உண்டு. மனக்குழப்பம் நீங்கும். திருமண வாய்ப்பு கூடிவரும். பேச்சில் நிதானம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். உறவினர் வழியால் செலவுகள் அதிகரிக்கும். வீண் பழி அகலும். பொன், பொருள் சேரும். எதிரிகளால் தொல்லை உண்டாகும். பழைய கடன் வசூலாகும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். திறமையால் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். கலைத்தொழிலில் நிலை உயரும். விளையாட்டுத் துறையால் வெற்றிக் கிட்டும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். நீண்டநாள் பிரச்சனை முடிவுக்கு வரும். வர்த்தகத் தொழில் லாபம் தரும். பயணம் பலன் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நவகிரஹம், அதிர்ஷ்ட எண்: 8,4,5,1
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,Q




**துலாம்:** வகையான வாழ்வு முறையாக கிடைக்கும் வாரம். விரயங்கள் அதிகரிக்கும். பணவரவு கூடும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை வளரும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றியாகும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை ஏற்படும். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். தடைகள் விலகும். ஞாபகத் திறன் அதிகரிக்கும். மாணவர்களுக்கு சாதகமான காலம். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. ஞாபகத்திறன் அதிகரிக்கும். தனலாபம் கூடும். உடல்நலனில் அக்கறை தேவை. குடும்பத்தில் அமைதி நிலவும். நண்பர்கள் உதவி கிட்டும். நீண்ட நாளைய நோய் விலகும். பணவரவு திருப்தி தரும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். இல்லத்தில் அமைதி கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். ஆண்களின் அதிகாரம் உயரும். பெண்களால் பெருமை சேரும். வறுமையின் வாட்டம் குறையும். பெருமை மிக்க காலம். மாலை நேரத்தில் கவனம் தேவை. வெளியூர் பிரயாணம் வெற்றி தரும். வெகுமானம் கிடைக்கக் கூடிய காலம். வழக்குகள் சாதகமாகும். இனம் புரியாத சந்தோஷம் ஏற்படும். வாய் பேச்சில் நிதானம் தேவை. வறுமையின் வாட்டம் குறையும். எதிர்ப்புகள் உருவாகி மறையும். பொன்னான காலம். சுபச்செலவு அதிகரிக்கும். சாதகமான வாய்ப்பு அமையும். குழப்பங்கள் அகலும். முன்கோபம் தவிர்க்கவும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். செயல்களில் கவனம் தேவை. பழைய பாக்கி வசூலாகும். வணிகத்தொழில் வளம் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். உதவும் குணம் அதிகரிக்கும். பழையக் கடன் தீரும். புதிய நட்பு உருவாகும். முற்போக்கு சிந்தனை வரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 2,4,9,8
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,E




**விருச்சிகம்:** புகழும், பொருளும் பெருகும் வாரம். வழக்குகளில் வெற்றி உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. வாழ்வில் வசந்தம் உண்டு. வயிற்று உபாதைகளும் உண்டு. வரவுகளால் திருப்தி உண்டு. வாழ்க்கையில் மேன்மை உண்டு. வாகனத்தால் செலவு உண்டு. பெற்றவர்களின் வாழ்த்து உண்டு. கடன் வாங்க நேரிடும். நன்மைகள் பெருகும். கல்வியில் கவனம் தேவை. குடும்ப குழப்பம் தீரும். பணப்பற்றாக்குறை நீங்கும். வாகன மாற்றம் ஏற்படும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். உத்தியோக இடமாற்றம் ஏற்படும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும். பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. தனம் சேரும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். ஏற்றங்கள் அமையும். தோற்றப் பொலிவு கூடும். மாற்றத்தை விரும்புவீர்கள். மனக்கட்டுப்பாடு அவசியம். பணத்தட்டுப்பாடு நீங்கும். குடும்ப மேன்மை உண்டாகும். உடல்சோர்வு ஏற்படும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். ஆக்கம் அதிகரிக்கும். தெளிவான முடிவுகள் உதயமாகும். காரியம் கைகூடும். செல்வச் செழிப்பு உயரும். விவேகம் கைகொடுக்கும். வெற்றி வீடு தேடி வரும். பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். மின்சாரத்தில் கவனம் தேவை. புத்துணர்ச்சியோடு செயல்படுவீர்கள். ஆடம்பர நாட்டம் ஏற்படும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பெண்களால் பெருமை சேரும். இனிய தகவல் வந்து சேரும். முயற்சிகள் பலிதமாகும். வெளிநாட்டு பயணம் ஏற்படும். வியாபார விருத்தி ஏற்படும். பாக்கிகள் வசூலாகும். உறவுகளால் மதிப்பு கூடும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விக்ரஹ விநாயகர், அதிர்ஷ்ட எண்: 8,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: இளம் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,Y

(தொடர்ச்சி 29 பக்கம்)

# இவ்வார ராசிபலன்

(28 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** முன்னேற்றம் கிடைக்கும் வாரம். வாழ்த்துக்கள் கிட்டும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். திறமைகள் வெளிப்படும். மனநிம்மதி கூடும். கடன் வாங்க நேரிடும். பங்குச்சந்தையில் கவனம் தேவை. குடும்ப அன்யோன்யம் கூடும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. உறவுகளால் செலவுகள் அதிகரிக்கும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். புது முயற்சிகள் பலன் தரும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. இனம் புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். உரிய நேரத்தில் உதவிகள் கிட்டும். பிரார்த்தனை பலன் கொடுக்கும். பொது வாழ்வில் புகழ் கூடும். பணவரவு திருப்தி தரும். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும். மதிப்பும், மரியாதையும் உயரும். குடும்பத்தினரிடம் அனுசரிப்பு கிட்டும். இடமாற்றம் நன்மை தரும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் கிட்டும். அலைச்சல் அதிகரிக்கும். செல்வாக்கு மேம்படும். திருமண முயற்சி பலன் தரும். தொழில் வாய்ப்புக்கள் பெருகும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாய கோரிக்கைகள் நிறைவேறும். ஆசைகள் பூர்த்தியாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. லஷ்மி கடாட்ஷம் பெருகும். பண நடமாட்டம் உண்டு. உழைப்பிற்காக பலன் கிடைக்கும். நீண்ட நாள் நோய் விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ மூகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 1,5,6,9
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே (வெள்ளி), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,F




**மகரம்:** பொன்னும், பொருளும் சேரும் வாரம். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். செய்த்தொழில் சிறப்படையும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். செய்த்தொழில் முன்னேற்றம் உண்டு. சேமிப்பு வளரும். பங்குச்சந்தை லாபம் தரும். கணவன், மனைவி உறவு இனிக்கும். நீண்ட தூரப் பயணம் லாபம் தரும். பணவரவு திருப்தி தரும். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். உடல்நலம் சிறக்கும். தெம்பும், தைரியமும் கூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப் போடுங்கள். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை காணப்படும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். பொருளாதாரம் உயரும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் களவு போகும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். தேக ஆரோக்கியம் திருப்தி தரும். பெற்றோர் ஆலோசனை பயன் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். தனவரவு தடைப்படும். எண்ணங்கள் மாறுபடும். செலவுகள் அதிகமாகும். உடல்நிலையில் கவனம் தேவை. உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். செயலில் துணிவு கூடும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். எதிர்ப்புகள் ஓடி ஒழியும். வாகனச் செலவு ஏற்படும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். பேச்சில் கம்பீரம் இருக்கும். பெற்றோரின் ஆசி கிடைக்கும். விருப்பமான தொழில் அமையும். விபரீத போக்கு மறையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ ஆண்டாள் பரமேஸ்வரி, அதிர்ஷ்ட எண்: 4,9,6,8
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,E





**கும்பம்:** போட்டி, பொறாமைகள் விலகும் வாரம். பழைய கடன் வசூலாகும். பணியில் ஆர்வம் ஏற்படும். சுயத்தொழிலில் கவனம் தேவை. நண்பர்களால் நன்மை உண்டு. இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். பாராட்டுக்கள் உயரும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். குடும்ப பாசம் கூடும். தொழில் வளம் பெருகும். திட்டம் வெற்றி பெறும். நீண்ட நாள் ஆசை நிறைவேறும். மனோ தைரியம் அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கை ஏற்படும். பிள்ளைவழிச் செலவுகள் அதிகரிக்கும். உடல்நலம் கவனம் தேவை. கவனமுடன் செயல்பட வேண்டும். பணவரவு உயரும். பொன் பொருள் சேரும். மருத்துவச் செலவு உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். மங்களச் செய்தி வரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். குடும்ப வளம் கூடும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குதூகலம் கூடும். பழைய கடன் தீரும். பங்குத்தொழில் கவனம் தேவை. பதவி வாய்ப்பு வரும். பூமியால் லாபம் உண்டு. பெண்களுக்கு யோகம் கூடும். ஸ்திர சொத்து சேரும். தெய்வ நம்பிக்கை உண்டாகும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. காதல் கை கூடும். பணி செய்யும் இடத்தில் பாராட்டு உயரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். வரவுகள் மிகுதியாகும். விரோதங்கள் விலகும். எதிர்கால சிந்தனை ஏற்றம் பெறும். வாய்ப்புக்கள் பெருகும். கனிவான பேச்சு அவசியம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். தாய் வழி தகராறு குறையும். வாகனத்தால் செலவு ஏற்படும். காதல் கசக்கும். பணமும், பாராட்டும் சேரும். வரன் வாயில் தேடி வரும். உத்தியோக உயர்வு தாமதம் ஆகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முருகப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 8,9,6,2
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,S




**மீனம்:** ஆளுமையான செயல்பாடுகள் அரங்கேறும் வாரம். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. இரும்புத் தொழில் ஏற்றம் தரும். சூழ்நிலைகள் சாதகமாகும். வங்கி சேமிப்பு உயரும். விருந்தினர் வருகை உண்டு. பயணம் வெற்றி தரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. பணப்புழக்கம் சரளமாகும். உடன் பிறப்புக்களால் உதவி கிடைக்கும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். மாணவர்களுக்கு எச்சரிக்கை தேவை. நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். மனமகிழ்ச்சி கூடும். கௌரவமான காலம். மனை வாங்கும் யோகம் உண்டு. கல்வியில் கவனம் தேவை. உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். அலைபேசியால் அலைச்சல் உண்டாகும். தாய் வழி உறவில் விரிசல் ஏற்படும். தொலைபேசி தகவல் மகிழ்ச்சி தரும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். புண்ணிய ஸ்தலம் செல்லும் வாய்ப்பு உருவாகும். பாகப்பிரிவினை ஏற்படும். தாய்ப்பாசம் அதிகரிக்கும். ஆதாயம் பெருகும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். பெற்றோர்கள் அன்பு அதிகரிக்கும். வியாபாரம் விருத்தியாகும். தொலைதூரப் பயணம் லாபம் தரும். புதிய முயற்சிகளை தள்ளி போடவும். கமிஷன் தொழில் லாபம் தரும். வெற்றிகள் குவியும். பாராட்டுக்கள் அதிகமாகும். சாதகமான வாய்ப்பு உருவாகும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. விருந்தினர் வருகை உண்டு. புண்ணியம் சேரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். ஆண்களின் அதிகாரம் உயரும். நட்பு பெருகும். பெரியவர்களின் ஆலோசனை பலன் தரும். பெருமைகள் சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பராசக்தியம்மன், அதிர்ஷ்ட எண்: 3,1,2,9
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,C



# புரட்சிக்கவி பாவேந்தர் பாரதிதாசன்

**- உமா மோகன் -**

*'கவி இயற்ற வல்லான்இவன்' என - மகா*
*கவி இயம்ப நல்லதொரு தருணமதில் - சபையில்*

*உள்ளவர்கள் வியக்க அங்கு பாடியதாம்*
*'எங்கெங்கு காணினும் சக்தியடா' எனும் பாடல் - அதன்*

*அழகும் பொருளும் அவர் மதிப்பை உயர்த்த*
*புகழுக்கு உரியவர் ஆகினாராம்*

*பாரதிக்கு தாசனாகி பல கவிகள் புனைந்த - இவர்*
*கவியுலகின் நேசனாகி கன கவிகள் தந்துள்ளார்*

*இருபதாம் நூற்றாண்டின் ஈடும் எடுப்புமற்ற பெரும் கவிக்கு - இவ்வாண்டு*

*நூற்றி முப்பத்து ஓராம் அகவை ஆண்டாம் - இதை*
*போற்றிப் பலரும் நினைவு கூர்ந்தார்*

*சித்திரை இருபத்தொன்பதில் தமிழ் கவியுலகில்*
*முத்திரை பதிக்கச் சுப்புரத்தினம் பிறந்தார் - இவர்*

*செஞ்சொற் கவி பல தந்தார் - தமிழ்*
*நெஞ்சங்களை எல்லாம் வென்றார்*

*அருந்தமிழை ஆயுதமாக்கி - நல்ல*
*பகுத்தறிவு மணம் பரப்பி - அன்று*

*செறிந்திருந்த மூட நம்பிக்கைகளை - இல்லாது*
*சிதறடிக்கப் பாடுபட்டார் - அன்று*

*சாதியும் மதமும் நீதியற்று செய்த பல*
*கோழைச் செயல்பளை அழிப்பதற்காய் - பல*

*சீர்திருத்தப் பாடல்களால் போர் தொடுத்தார் - அங்கு*
*தன்மான உணர்வதை நிலைநாட்ட*

*விடுதலை உணர்வை மெருகூட்ட*
*திராவிட இன எழுச்சிக்கு உரமூட்ட*

*பகுத்தறிவுச் சிந்தனையை மக்கள் மனங்களிலே உருவாக்க என*
*எத்தனையோ!*

*'சாதி இரண்டொழிய வேறில்லை' என்றவர் ஔவையார்*
*'சாதி என்ற சொல்லே தமிழில் இல்லை' என்றார் புரட்சிக்கவி - இவர்*

*ஆரியர் வருகையோடு வந்ததுதான் சாதியென்றார் - புறநானூற்றிலும்*
*தேறிய அறிவு கொண்ட புரட்சிக்கவி - அன்றைய*

*அறிவியல் புதுமைகளை மறுப்பதும் - மக்களிடம்*
*அறியாமையை வளர்ப்பதும் மதம் என்றார்*

*ஏற்றத் தாழ்வுள்ள சமுதாயம் தோன்றுதற்கு*
*ஏதுவாய் இருப்பதுவும் இதுவே என்றார்*

*வேரிற் பழுத்த பலாக்கள் பல*
*கோரிக்கை அற்று கிடக்கக் கண்டார் - அவற்றுக்கு*

*கோடுகள் போட்டு கொடுமைகள் செய்த*
*கேடுகெட்ட மனிதரையும் கண்டார்*

*பாடுபட்டார் பாலியல் விவாகம் வேண்டாம் என்றே*
*வீடுகளில் விளக்கின்றி இருப்பவர்*

*மனங்களின் வலியினைக் கண்டறிந்தார் - புது*
*மணங்களுக்கு ஏற்ப புது கவிபுனைந்தார்*

*பொது உடமை வேண்டி நின்றார் - எதிலும்*
*சரிசமம் வேண்டும் என்றார் - நாடு*

*வளம் மிக இழந்து வறுமையில் உழன்று*
*உரிமையும் அழிந்து அடிமையாய்ப் போகும்*

*வடிவினைப் பார்த்துக் கொதித்தெழுந்து*
*தடித்த வார்த்தைகள் தான் கொண்டு*

*கனத்த கவி படைத்துத் தமிழ்க் கவியுலகின் புரட்சிகவி ஆனார்*

*பாவுக்கு வேந்தராகவும் - தமிழ்*
*கவியுலகின் உயிர்க்கவியாகவும்*

*பொக்கிசமாகவும் போற்றப்படும் பாரதிதாசன்*
*எக்காலமும் நின்று நிலைத்து வாழ்வார்.*

*வாழ்க பாவேந்தர்!*
*வளர்க அவர் புகழ்!*

# அன்பின் தொனி - 656

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளை வணங்காதே** - Worship not the Creations
**உன்னை படைத்தவரை வணங்கு** - Worship your Creator
**விக்கிரக ஆராதனையில் விழுந்துபோன ஜனம்**

### 7. யூதாவின் ராஜா வானத்தின் சேனைகளுக்கெல்லாம் பலிபீடங்களைக் கட்டினான்

மனாசே ராஜாவாகிறபோது பன்னிரண்டு வயதாயிருந்து, ஐம்பத்தைந்து வருஷம் எருசலேமில் அரசாண்டான், அவன் தாயின்பேர் எப்சிபாள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்தின ஜாதிகளுடைய அருவருப்புகளின்படியே, அவன் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, தன் தகப்பனாகிய எசேக்கியா இடித்துப்போட்ட மேடை களைத் திரும்பவும் கட்டி, பாகாலுக்குப் பலிபீடங்களை எடுப்பித்து, இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் செய்ததுபோல விக்கிரகத்தோப்பை உண்டாக்கி, வானத்தின் சேனைகளையெல்லாம் பணிந்துகொண்டு அவைகளைச் சேவித்தான். எருசலேமிலே என் நாமத்தை விளங்கப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லிக்குறித்த கர்த்தருடைய ஆலயத்திலே அவன் பலிபீடங்களைக் கட்டி, கர்த்தருடைய ஆலயத்தின் இரண்டு பிராகாரங்களிலும் வானத்தின் சேனைகளுக்கெல்லாம் பலிபீடங்களைக் கட்டி, தன் குமாரனைத் தீமிதிக்கப்பண்ணி, நாள்பார்க்கிறவனும் நிமித்தம்பார்க்கிறவனுமாயி ருந்து, அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறிசொல்லுகிறவர்களையும் வைத்து, கர்த்தருக்குக் கோபமுண்டாக அவர் பார்வைக்குப் பொல்லாப்பானதை மிகுதியாய்ச் செய்தான். இந்த ஆலயத்திலும், நான் இஸ்ரவேலின் சகல கோத்திரங் களிலுமிருந்து தெரிந்துகொண்ட எருசலேமிலும், என் நாமத்தை என்றைக்கும் விளங்கப்பண்ணுவேன் என்று கர்த்தர் தாவீதோடும் அவன் குமாரனாகிய சாலொமோனோடும் சொல்லிக் குறித்த ஆலயத்திலே அவன் பண்ணின தோப்பு விக்கிரகத்தை வைத்தான். நான் அவர்களுக்குக் கற்பித்த எல்லாவற்றின்படியேயும், என் தாசனாகிய மோசே அவர்களுக்குக் கற்பித்த எல்லா நியாயப்பிரமாணத்தின்படியேயும் செய்ய ஜாக்கிரதையாய் இருந்தார்களேயானால், நான் இனி இஸ்ரவேலின் காலை அவர்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசத்தைவிட்டு அலையப்பண்ணுவதில்லை என்று சொல்லி யிருந்தார். ஆனாலும் அவர்கள் கேளாதேபோனார்கள், கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அழித்த ஜாதிகள் செய்த பொல்லாப்பைப்பார்க்கிலும் அதிகமாய்ச் செய்ய மனாசே அவர்களை ஏவிவிட்டான். ஆகையால் கர்த்தர் தீர்க்க தரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரரைக்கொண்டு உரைத்தது: யூதாவின் ராஜாவாகிய மனாசே தனக்கு முன்னிருந்த எமோரியர் செய்த எல்லாவற்றைப்பார்க்கிலும் கேடாக இந்த அருவருப்புகளைச் செய்து, தன் நரகலான விக்கிரகங் களால் யூதாவையும் பாவஞ்செய்யப்பண்ணினபடியினால், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்ன வென்றால்: இதோ, கேட்கப்போகிற யாவருடைய இரண்டு காதுகளிலும் அது தொனித்துக்கொண்டிருக்கும்படியான பொல்லாப்பை நான் எருசலேமின்மேலும் யூதாவின்மேலும் வரப்பண்ணி.
**- 2 ராஜா. 21: 1-12**

### 8. ஆகாஸ் ராஜா பச்சையான சகல மரங்களின் கீழும் பலியிட்டுத் தூபங்காட்டிவந்தான்.

ஆகாஸ் ராஜாவாகிறபோது இருபது வயதாயிருந்து, பதினாறு வருஷம் எருசலேமில் அரசாண்டான், அவனும் அவன், தன் தகப்பனாகிய தாவீதைப்போல், கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்யாமல், இஸ்ரவேல் ராஜாக்களின் வழிகளில் நடந்து, பாகால்களுக்கு வார்ப்பு விக்கிரகங்களைச் செய்தான். அவன் இன்னோம் குமாரரின் பள்ளத்தாக்கிலே தூபங்காட்டி, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்தின ஜாதிகளுடைய அருவருப்புகளின் படியே தன் குமாரரை அக்கினியிலே தகித்துப்போட்டு, மேடைகளிலும், மலைகளிலும், பச்சையான சகல மரங்களின் கீழும் பலியிட்டுத் தூபங்காட்டிவந்தான். ஆகையால் அவனுடைய தேவனாகிய கர்த்தர் அவனைச் சீரியருடைய ராஜாவின் கையில் ஒப்புக்கொடுத்தார், அவர்கள் அவனை முறிய அடித்து, அவனுக்கு இருக்கிறவர்களிலே பெரிய கூட்டத்தைச் சிறைபிடித்துத் தமஸ்குவுக்குக் கொண்டுபோனார்கள், அவன் இஸ்ரவேலுடைய ராஜாவின் கையிலும் ஒப்புக்கொடுக்கப்பட்டான், இவன் அவனை வெகுவாய் முறிய அடித்தான். எப்படியெனில், யூதா மனுஷர் தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்த ரைவிட்டபடியினால், ரெமலியாவின் குமாரனாகிய பெக்கா அவர்களில் ஒரேநாளில்லட்சத்திருபதினா யிரம்பேரைக் கொன்றுபோட்டான், அவர்கள் எல்லாரும் மகாவீரராயிருந்தவர்கள். **- 2 நாளா. 28: 1-6**

### 9. அற்புதத்தைக கண்டு மனுக்ஷர்களுக்கு பலியிட முற்பட்டனர்

லீஸ்திராவிலே ஒருவன் தன் தாயின் வயிற்றிலிருந்து பிறந்ததுமுதல் சப்பாணியாயிருந்து, ஒருபோதும் நடவாமல், கால்கள் வழங்காதவனாய் உட்கார்ந்து, பவுல் பேசுகிறதைக் கேட்டுக்கொண்டிருந்தான். அவனைப் பவுல் உற்றுப்பார்த்து, இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் அவனுக்கு உண்டென்று கண்டு: நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்துநில் என்று உரத்த சத்த த்தோடே சொன்னான். உடனே அவன் குதித்தெழுந்து நடந்தான். பவுல் செய்ததை ஜனங்கள் கண்டு, தேவர்கள் மனுஷரூபமெடுத்து நம்மிடத்தில் இறங்கிவந்திருக்கிறார்கள் என்று லிக்கவோனியா பாஷையிலே சத்தமிட்டுச் சொல்லி, பர்ன பாவை யூப்பித்தர் என்றும், பவுல் பிரசங்கத்தை நடத்தினவனானபடியினால் அவனை மெர்க்கூரி என்றும் சொன்னார்கள். அல்லாமலும் பட்டணத்துக்கு முன்னே இருந்த யூப்பித்தருடைய கோவில் பூஜாசாரி எருதுகளையும் பூமாலைகளையும் வாசலண்டையிலே கொண்டு வந்து, ஜனங்களோடேகூட அவர்களுக்குப் பலியிட மனதாயிருந்தான். அப்போஸ் தலராகிய பர்னபாவும் பவுலும் அதைக் கேட்டபொழுது, தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, கூட்டத்துக்குள்ளே ஓடி, உரத்த சத்தமாய்: மனுஷரே, ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப்போலப்பாடுள்ள மனுஷர்தானே, நீங்கள் இந்த வீணான தேவர்களைவிட்டு, வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்பவேண்டுமென்று உங்களுக்குப் பிரசங்கிக்கிறோம். சென்றகாலங்களில் அவர் சகல ஜனங்களையும் தங்கள் தங்கள் வழிகளிலே நடக்கவிட்டிருந்தும், அவர் நன்மை செய்துவந்து, வானத்திலிருந்து மழைகளையும் செழிப்புள்ள காலங்களையும் நமக்குத் தந்து, ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும் நம்முடைய இருதயங்களை நிரப்பி, இவ்விதமாய் அவர் தம்மைக்குறித்துச் சாட்சி விளங்கப் பண்ணாதிருந்ததில்லை என்றார்கள். இப்படி அவர்கள் சொல்லியும் தங்களுக்கு ஜனங்கள் பலியிடாதபடிக்கு அவர்களை அமர்த்துகிறது அரிதாயிருந்தது. **- அப்போஸ்தலர் 14: 8-18**

தொடரும்...




# Carefirst Family Health Team

Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION — ACCREDITATION AGREMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com






Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE



## Serving the Tamil Community of Greater Toronto



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.

**CHRISTEEN SEEVARATNAM**
**(416) 258-6759**



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமீடலாம்

**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas, Broker
Sun Sanmugathas, Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

EXPRESS AIR TRAVELS AND TOURS
416.828.9696
info@expressairtravelss.com
Flight Services
All Inclusive Packages
Last Minute Deals
Cruise Services
Car Rentals
Hotels
Tourist Visa
Passport Application
Dual Citizen Application
Majestic City Indoor Mall
H1-2900 Markham Road, Scarborough ON, M1X 1E6

உதயம் 1373 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 29 2022



# ரணில் பக்கம் விக்கி சாய்ந்தது ஏன்...?

## — கனடா உதயனின் பிரத்தியேக செய்தி EXCLUSIVE

**நடராசா லோகதயாளன் மற்றும் சிவா பரமேஸ்வரன்**

ஒருவரை நம்புவது குற்றமா? என கேள்வி எழுப்புகின்றார்வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் தேசியகூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரன்.

(உள்ளே விபரமான செய்தி 10ம் பக்கத்தில்)

# நாடு கடந்த தமிழீழ அரசின் கனடியப் பிரிவின் அங்கத்தவர்கள் கறுப்பு யூலை— 83 நினைவாக இரத்ததானம் செய்தனர்


ஈழத் தமிழினத்தின் மீதான சிங்கள அரசின் திட்டமிட்ட இனப்படுகொலையாக அமைந்த கறுப்பு யூலை-83 என்னும் கொடிதான படுகொலைச் சம்பங்களின் நினைவேந்தலும், கவனயீர்ப்பு நிகழ்வும் ஒன்றாரியோ மாகாண சபை முன்றலில் நாளை வெள்ளிக்கிழமை 29-07-2022 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெற இருக்கின்றது.

இதேவேளை கொடிதான கறுப்பு யூலை-83 இனப்படுகொலையில் சிங்கள காடையர்கள் மற்றும் இராணுவக் கொடியவர்கள் இனவாத அரசியல்வாதிகள் ஆகியோரின் கரங்களினால் கொலையுண்ட எமது உறவுகளை நினைவு கொள்ளும் முகமாக “உயிர்கொடுத்தவர்களுக்காய் உதிரம் கொடுப்போம்“ என்ற பெயரிட்டு கடந்த 23ம் தேதி இரத்ததான நிகழ்வும் கனடா-வில் இடம்பெற்றிருந்தது. இதில் நாடு கடந்த தமிழீழ அரசின் அங்கத்தவர்கள் பலர் பங்கெடுத்து இரத்ததானம் செய்தனர்.



# ”எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பணம் பெற்று நான் வேலை செய்வதில்லை. இதனை சக தமிழ்த் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களே செய்வதை ஏற்கமுடியாது”.

## மனந்திறந்து பேசுகின்றார் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன்



“நான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பணம் பெற்று வேலை செய்வதில்லை. இதேவேளையில் இதனை சக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களே செய்வதையும் என்னால் ஏற்கமுடியாது”. இவ்வாறு யாழ்ப்பாணத்தில் மனந்திறந்து பேசியுள்ளார் யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் அவர்களின் புதல்வரான சித்தார்த்தன் புளட் உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

(உள்ளே விபரமான செய்தி 3ம் பக்கத்தில்)

# ரணில் ஜனாதிபதியாக தெரிவார் என தாம் எதிர்பார்த்திருக்கவில்லை என்கிறார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா

கடந்த நாடாளுமன்றத்தில் 68 லட்சம் வாக்குகளை பெற்று 142 ஆசனங்களை கைப்பற்றிய பொதுஜன பெரமுனவின் பிரதமர் உட்பட அனைவருக்கும் பதவிகளில் இருந்து விலகி வீட்டுக்கு செல்ல நேரிட்டது. அவர்களை வழி நடத்திய ஜனாதிபதி பதவியை விட்டு விலகிச் செல்ல நேர்ந்தது..

எனினும் அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதியை தெரிவு செய்யும் வாக்கெடுப்பில் ணில் ஜனாதிபதியாக தெரிவார் என நானோ அன்றி எமது கட்சியின் உறுப்பினர்களோ எதிர்பார்த்திருக்கவில்லை

.இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

(உள்ளே விபரமான செய்தி 6ம் பக்கத்தில்)



# யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் தமிழ் சிங்கள விரிவுரையாளர்கள் இணைந்த நடத்திய அரச எதிர்ப்பு கவனயீர்ப்புப் போராட்டம்

## - யாழ்ப்பாணத்திலிருந்து சுகுணன்




சில நாட்களுக்கு முன்னர் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் தமிழ் சிங்கள விரிவுரையாளர்கள் இணைந்த நடத்திய அரச எதிர்ப்பு கவனயீர்ப்புப் போராட்டம் தென்னிலங்கை மக்களையும் பல்வேறு பல்கலைக் கழகங்களின் விரிவுரையாளர்களையும் திரும்பிப் பார்க்கச் செய்துள்ளதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

(உள்ளே விபரமான செய்தி .7ம் பக்கத்தில்)

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan, Broker
Joy H.Selvanayagam, Broker